



# கணநாதம்

## பொன்விழாச் சிறப்பு மலர்

50
கணபதி படிப்பகம்
1967-2017

**கணபதி படிப்பகம்**

**நெடியகாடு, வல்வெட்டித்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி படிப்பகம்

நெடியகாடு, வல்வெட்டித்துறை.

# கணநாதம்

## பொன்விழாச் சிறப்பு மலர்

50

கணபதி படிப்பகம்

1967 – 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைப்பு**

*"கணநாதம்"*

**பதிப்பு**

*09 – டிசம்பர் – 2017*

**பக்கங்கள்**

12 + 64 + XXIII

**வெளியீடு**

*கணபதி படிப்பகம்*

**அச்சுப் பதிப்பு**

*தமிழ்ப்பூங்கா அச்சகம்,*
*நெல்லியடி.*
*021 226 4014*

**மலர் வடிவமைப்பு**

*சி.மதுசூதனன் (தலைவர், கணபதி படிப்பகம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணபதி படிப்பகம்**

**நெடியகாடு வல்வெட்டித்துறை**

# பொன்விழா ஆண்டு செயற்குழு

| | | |
|---|---|---|
| **தலைவர்** | - | திரு.சி.மதுசூதனன் |
| **உபதலைவர்கள்** | - | திரு.நா.கோபாலகிருஸ்ணன் |
| | | திரு.கி.மகாலிங்கம் |
| **செயலாளர்** | - | திரு.ச.பிரதீபன் |
| **உபசெயலாளர்** | - | திரு.றா.ஆனந்த் |
| **பொருளாளர்** | - | திரு.வெ.கண்ணதாசன் |
| **செயற்குழு உறுப்பிர்கள்** | - | திரு.ச.ரமேஸ்குமார் |
| | | திரு.ப.செந்தூரன் |
| | | திரு.ஜெ.செந்தில்குமரன் |
| | | திரு.வி.டினேஸ்கரன் |
| | | திரு.இ.சிவகுமாரன் |
| | | திரு. இ.லட்சுமணன் |
| | | திரு.க.லெளசீகன் |
| **கணக்காய்வாளர்** | - | திரு.ஆ.நாகலிங்கம் |
| **காப்பாளர்கள்** | - | திரு.பூ.அகமணிதேவர் |
| | | திரு.K.N.தேவதாஸ் |
| | | திரு.பொ.சதாசிவம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. ஆசிகளும், வாழ்த்துக்களும் - I-XII

02. பொன் விழாவில் கணபதி படிப்பகம்... - 1- 17
வரலாற்றுப் பார்வை

03. முன்னாள் தலைவர் அவர்களின் உள்ளத்திலிருந்து - 18-19
திரு.தி.நாகேஸ்வரன் ஐயா

05. வாழ்க ! வளர்க !! - 20-22
வல்வையூர் அப்பாண்ணா

06. சனசமூக நிலையங்களின் வகிபாகம் - 23-27
திரு.ந.அனந்தராஜ்

04. பொன்விழா சிறப்பு பாடல் - 28
திரு.பா.உதயகுமார்

07. நடைபெற்றுக் கொண்டிருக்கும் புதிய கணபதி
பாலர் பாடசாலை கட்டடப்பணிகள்... - 29

08. நிகழ்வுகளின் நிழல்கள் -
புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களின் தொகுப்பு

09. பொன்விழா கலை இலக்கியப்போட்டியில்
முதலாமிடம் பெற்ற ஆக்கங்கள் - 30-62

10. பொன்விழா கலை இலக்கியப் போட்டி
வெற்றியாளர்கள் மற்றும் பரிசில் நிதி
அனுசரணையாளர்கள் - 63-64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளளையார் அருட்கடாட்சத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கணபதி படிப்பகமானது, இன்று ஐம்பது வருடங்கள் நிறைவு செய்து பொன்விழா கொண்டாடும் இவ்வேளையில், கணபதி படிப்பக பொன்விழா சிறப்பு மலராகிய "கணநாதம்" என்னும் மலரை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

வரலாறு என்பது வரும் தலைமுறைக்கு வழங்கும் ஒரு பொக்கிசமாகும். கணபதி படிப்பகத்தின் வரலாறு இதுவரை அச்சேறிய ஒரு புத்தகமாக வெளிவராதது ஒரு பெருங்குறைபாடு ஆகும். முன்பு சில தடவை முயற்சி எடுத்த போதும், அது முடிவுறாமல் போனது துரதிஸ்டமே பொன்விழா ஆண்டில் பல தடைகளைத்தாண்டி புத்தகம் வெளிவருவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

இவ்வரலாற்றை நூலுருவில் கொண்டு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மூத்த நிர்வாகிகள், முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரியப்படுத்துவதுடன், காலம் காலமாக அறிக்கைப்பதிவை சிறப்பாக பராமரித்ததும் எமது வேலைப்பழுவைக் குறைத்ததென்றே கூறலாம்.

வரலாற்றுடன் நின்றுவிடாமல், சமயத் தலைவர்களின் ஆசிச் செய்திகளும், படிப்பகத்தின் போசகர்களாக இருக்கும் மூத்த உறுப்பினர்களின் வாழ்த்துச் செய்திகளும், வல்வையின் சில படைப்பாளிகளின் ஆக்கங்களும், அத்துடன் கணபதி படிப்பகத்தின் பொன்விழாவை சிறப்பிக்கும் விதமாக நடாத்தப்பட்ட வல்வெட்டித்துறை நகராட்சிக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் ஆக்கங்களும், அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட திறந்த போட்டிகளான சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகளில் முதலிடம் பெற்ற ஆக்கங்களும் உள்ளடக்கப்பட்டு எல்லோரையும் கவரும் வண்ணம் இந்நூல் வெளியிடுவதில் திருப்தியடைகின்றோம், வாசகர்களாகிய அனைவருக்கும் இந்நூல் சிறந்த ஒரு இடத்தைப் பிடிக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

நடப்பாண்டு செயற்குழு
கணபதி படிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகளும் வாழ்த்துக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி



**பிரம்மஸ்ரீ. பரமேஸ்வர மனோகரக்குருக்கள்**

**வல்லை வாலாம்பிகை உடனுறையும் வைத்தீஸ்வரசுவாமி**

**தேவஸ்தான பிரதமகுரு**

வல்வை நெடியகாடு கணபதிபடிப்பகத்தின் பொன்விழாவை காணும் நன்நாளில், என்றும் காலத்தால் அழியாத பொக்கிசமாக மலரும் பொன்விழா மலருக்குரிய ஆசிச்செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மிகவும் சிறிய எண்ணக்கருவில் வளர்ந்து, இன்று பல்வேறு துறைகளில் வெற்றிநடைபோடும் கணபதிபடிப்பகமானது, நெடியம்பதி மக்களின் பரிபூரண நல் ஆதரவுடன் தொடர்ந்தும் வீறுநடையுடன் மிளிர, என்றும் கணபதி அம்மை அப்பன் தெய்வீக அருள் கிடைக்க பிரார்த்தித்து நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"லோ, கா, சமஸ்த்தாசுகினோபவந்து"

வளர்க கணபதி படிப்பகம்

**பிரம்மஸ்ரீ. பரமேஸ்வர மனோகரக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி



**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிககர் JP,**
இந்து மதகுரு பீடாதிபதி,
பிரதம குரு,
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
ஆதீனகர்த்தாவும், தர்மகர்த்தாவும்,
புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம்.

நெடியகாடு வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் பொன் விழாவினை ஒட்டி வெளியிடப்படவுள்ள மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலர் படிப்பகத்தின் வரலாற்றுப் பதிவுகளையும் மற்றும் சிறப்புக்களையும் உள்ளடக்கி வெளிவருகின்றது. எம் மண்ணில் உள்ள படிப்பகங்களில் கணபதி படிப்பகம் வைர மகுடம் சூடி தலை நிமிர்ந்து நிற்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் எதிர்காலத்தில் வைரவிழா பவளவிழா, நூற்றாண்டு விழா காண எனது பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தெள்ளு தமிழ் வளர்த்துப்பேச பணி பலபுரியவும்
உள்ளமதில் அள்ளுகலை தொண்டு பல புரியவும்
அள்ளி அள்ளி அறிவுகளை அளித்திடும் நம் கணபதி படிப்பகம்
வள்ளுவன் குறளைப் போல வாழ்க நீடு வாழ்கவே.

வாழ்க வளமுடன்
சுபம் - மங்களம்

**சிவஸ்ரீ.சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர் J.P**
இந்துமத குரு பீடாதிபதி
பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.
ஆதீனகர்த்தாவும், தர்மகர்த்தாவும்
புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி



**சிவஸ்ரீ.சு.வித்தியாபரக்குருக்கள்,**
**பிரதம குரு,**
**வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயம்**

மேற்படி படிப்பகத்தின் பொன்விழா நடைபெறுவதையிட்டும் அதற்கு பொன்விழா மலர் வெளியீடுவதையிட்டும் அடியேன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளேன். கணபதி படிப்பகத்தின் ஊடாக எத்தனையோ நபர்கள் தங்கள் அறிவுத்திறனை வளர்த்துள்ளனர். அத்துடன் கணபதி படிப்பத்தினால் நிர்வகிக்கப்படும் கணபதி பாலர் பாடசாலையும் கல்வி, விளையாட்டு, கலை கலாசாரம் போன்ற துறைகளில் வளர்ச்சி அடைந்து காணப்படுவது எம்பெருமானின் திருவருளே.

மேலும் படிப்பகத்தின் பணிதொடர எல்லாம் வல்ல நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையாரைப் பிராத்திப்பதோடு எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ.சு.வித்தியாபரக்குருக்கள்,**
பிரதம குரு,
வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி



**சிவஸ்ரீ.சோ.நந்தகோபாலக்குருக்கள்**
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.
அகில உலக சைவக்குருமார் சம்மேளன தலைவர்

*தீப ஒளியில் கல்வி மலரட்டும்*

*கல்வி கடவுள் கணபதியின் பக்தி உடலின் சக்தி . இங்கே தெய்வங்கள் அத்தனைக்கும் எனது இனிய இன்பார்ந்த வணங்கங்கள். கல்வியில் சிறக்க சரஸ்வதியை வணங்கவேண்டும். இனிமையான பேச்சே வல்வை கணபதி பொான் விழா மலர் உலகில் உயிர்கள் வாழக் காரணமானது நீரும் நானே சூரிய ஒளியும் நானே நீரை தாங்கும் நிலத்தைப்போல பூமாதேவி உரு வல்லி நீர் பள்ளத்தை நோக்கிப் பாயும், ஜலம் புனித நீர்குளிர்ந்த தன்மையாக கொண்டது. எம்பெருமானும் ஜலபிம்பம் கடவுள் நீர்த்துறையில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எல்லோரும் சமமாகத்தான் நீராடுவார்கள். எமது கணபதி படிப்பகத்தின் பொன் விழாவை முன்னின்று வரலாற்று பதிவுகளையும் தாங்கிய வண்ணம் பொன் விழா மலர் வெளியிட படிப்பக அன்பர்கள் எண்ணியுள்ளார்கள். வெகுசிறப்பாக சரஸ்வதி பொன் விழாவாய் மலருவாள், மற்றும் வரவு செலவு எழுதுபவர்கள் வடக்கு நோக்கி அமர்ந்து கணக்குகளை எழுதிவந்தால், வரவு அதிகரிக்கும். குபேரன் அரன்புரிவான் கிழக்கு நோக்கியும் எழுதலாம். என்றாலும், வடக்கு மேன் மேலும் சிற்ப்பானதாகும். வல்வை கணபதி படிப்பகம் பொன் விழாவாய் இந்தாண்டு மலர்ந்து வெற்றியடையும். தெற்கு நோக்கி அமர்ந்து கணக்குகளை எழுதக்கூடாது, அது விரும்பத்தாக செலவுகள் அதிகரிக்கும் என அறியத்தருகின்றேன். தவத்தையும் தானத்தையும் விடச்சிறந்தது நிதானமான கல்வி. கணபதி படிப்பக பொன் விழாமலர் வெகு சிறப்பாய் அமையும் தினந்தோறும் சூரிய நமஸ்காரம் செய்தவன் மூலம் சரீர பலம், மூளை பலம், ஆரோக்கிய விருத்தி, ஆன்மீக பலம் அடையும். உலக லோக சேமம் தரும் ஹோ மங்கள் துன்பங்கள் எல்லாம் கடவுள் அருளால் விலகும். திட்டமிடுதலே எதையும் முழுமையான சரஸ்வதி கல்வி பொன் விழா வாய் மலரும் கடவுள் ஒரு டாக்டர் சூரியன் எங்கள் கண் கண்ட தெய்வம் சூரியன் ஒரு ஒளியால் உலகத்தை பிரகாசிக்க தூண்டுபவர் சூரிய ஒளியில் பூமாதேவி சமுத்திரதேவி கோயில்கள் மரங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்கள் கிணறுகள் பூமலர்கள் மனிதர்கள் மிருகங்கள் மற்றும் ஜீவபிராணிகள் மற்றும் இந்த சூரிய ஒளி பட்டு மரங்கள் நல்ல சிறப்பாக வளரும். வருணபகவான் மழை மேகத்தில் இருந்து எல்லா ஆன்மாக்களுக்கும் முதலாவது தீரத்தம் வரவழைத்துள்ளார் மக்கள் மரங்கள் குளிர்ந்த மழை நீரால் செழிப்பாய் வாழ்வார்கள் மந்திர ஆலயம் தீபம் ஒளிக்கின்றது. அழியாச் செல்வமான சரஸ்வதி கல்வி மேன்மை பொறுமையை எடுத்துரைக்க உதவும், கல்வியை படிக்க காலத்தை வீணாக்காதீர்கள், காலம் கடவுளைப் போன்றது. காலத்தை வீணாக்கினால் கல்வி வீணாகிவிடும். கணபதி படிப்பகம் பொன்விழாவாய் மலரும் லட்சுமி நாராயண மனிதர்களுக்கு ஓர் கிரகக்கரைக்கர், அவரையும் பார்த்தால் படிப்பு வரும். ஒரு நிமிஷமும் வீண் போக்காதீர்கள், வல்வை கணபதி படிப்பகம் பொன் விழாவாய் மலரும் சங்கீத இசையால் பண்பாடு உள்ளவர்களிடம் நல்ல கவர்ச்சி இருக்கும்.

விக்கினேஸ்வர, லட்சுமிநாராயண தேவி சரஸ்வதி புத, குரு, சுக்கிர கல்வி கணபதி படிப்பக பொன் விழாவாய் மலர்ந்து வல்வை மக்களுக்கு நல் அருளை கடவுள் கொடுப்பார் என அறியத்தருகின்றேன்.

தேவி சரஸ்வதி கல்வியில் சிறக்க அறிவு காரியம் வெற்றிதரும்

தியினும் தீர்க்க மானாய்
திசை யெட்டும் திரண்டு எழுவாய்
தித்திக்கும் தேவி சரஸ்வதி உன்னை
நான் சரண் அடைந்தேன்.
இந்த சிறப்பு கல்வி மந்திரத்தை தியானித்தால்
நல்ல கல்வி அமையும்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

இங்ஙனம்
**சிவஸ்ரீ.சோ.நந்தகோபாலக்குருக்கள்**
முன்னாள் பிரதமகுரு நந்தகோபாலக்குருக்கள்
அகில உலக சைவக்குருமார் சம்ளேன தலைவர்
நெடியகாடு
வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி



**அருட்பணி ம.கான்ஸ்போவர் அவர்கள்**
**பங்குத்தந்தை புனித சவேரியர் ஆலயம்,**
**சற்கோட்டை.**

வடமராட்சி பகுதியில் உள்ள வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகம் 50 ம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலரின் ஆசிச் செய்தி வடிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இப் படிப்பகம் நமது மக்களின் சுய அறிவும், பொது அறிவும் வளர பெரிதும் பங்காற்றி உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். அத்துடன் எனது வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் வழங்கி நிற்கின்றேன்.

பல காலங்களாக பல இடர்களை கடந்து இந்த படிப்பகம் விடா முயற்சியாக கொண்டு நடாத்தியதன் மூலம் வடமராட்சியில் சிறந்த படிப்பகம் என்று எல்லோராலும் கூறப்படுகின்றது.

இப் பிரதேச மக்கள் சிறந்த முறையில் கரம் கொடுத்து படிப்பகத்தினை கொண்டு நடாத்த பெரிதும் பங்காற்றி உள்ளனர். இப் படிப்பகத்தினை சிறப்பாக கொண்டு நடாத்துவது இறைவனது இரக்கமே, இம் மக்கள் செய்த பாக்கியமே. இப்படியான ஓர் நிரந்தரமான படிப்பகம் மூலம் மக்கள் அனைவரின் தேவைகளையும் இலகுவாகவும் விரைவாகவும் திறமையையும் நிவர்த்தி செய்யும் என்பது நம் மக்களின் பாக்கியமே. இப் படிப்பகத்திற்கு தேவையானவை கிடைக்க இறைவன் பலரை முன்வரச் செய்வார்கள் என்று நம்பி வேண்டுகின்றேன்.

இப் படிப்பகத்திற்காக தங்களை அர்ப்பணித்தவர்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக. கடவுளின் அன்பு பணியை இவர்கள் பொறுப்பெடுத்து செய்கின்றார்கள். இறைவனின் வழிநடத்தலும் அருளும் ஆசிரும் என்றும் உங்கள் படிப்பகத்திற்கும் இப் படிப்பகத்தால் பயனடையும் அனைவருக்கும் கிடைப்பதாக.

***"மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல மாறாக தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கு வந்தார்"***

***வேதாகமம் மாற்கு 10 : 45***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு.சந்திரசேகரம் பிரசாத்**

**செயலாளர்,**

**நகராட்சி மன்றம்,**

**வல்வெட்டித்துறை.**

வரலாற்றில் தனக்கென ஒரு தனித்துவத்தைப் பெற்று விளங்கும் வல்வை மண்ணிலே ஐம்பதாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் கணபதி படிப்பகத்தின் பொன் விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

எந்தவொரு நிறுவனமும் தமது வரலாற்றுப் பதிவுகளையும், அபிவிருத்தி நிலைகளையும், செயற்பாடுகளையும் எழுத்துருவில் ஆவணப்படுத்துவது சிறப்பானதும் அவசியமானதுமாகும். அந்தவகையில், பல கரடுமுரடான பாதைகளைக் கடந்து படிப்படியாக பரிணமித்து, பட்டை தீட்டிய வைரமாக என்றும் சிறப்புற ஒளிவீசும் கணபதி படிப்பகம், இன்று தனது பொன்விழாவை கொண்டாடுவதும், அதன் ஓர் அங்கமாக பொன்விழா சிறப்பு மலரை வெளியிடுவதும் பாராட்டுக்குரியதாகும்.

இப்படிப்பகம், மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், சமூக மட்ட செயற்பாடுகளிலும் தமது பங்களிப்புகளை செவ்வனே ஆற்றிவருவதுடன் கலை. கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு நல்வழிகாட்டியாக விளங்கிவருவது போற்றுதற்குரியது.

பொன்விழாவை முன்னிட்டு வல்வை மண்ணிலே மலரும் இச்சிறப்பு மலர் மலர்ந்து பார் எங்கும் மணம் பரப்பிடவும், பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற நடைபெறவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**சந்திரசேகரம் பிரசாத்**
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு.K.N.தேவதாஸ்**
காரியாளர்,
கணபதி படிப்பகம்.

**சேவையில் ஆதவன்**

ஈழத்தின் வடமராட்சி பகுதியில் வல்வெட்டித்துறையின் கிழக்கே நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தின் அருகாமையிலும் வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தின் முன்னே எழில் மிக காட்சிதருகிறது. கணபதிப்படிப்பகம் தனது 50வது வருடத்தையும் கடந்து இன்று பொன்விழா காண்கின்றது. ரம்மியமான சூழலில் அரசமரம் ஆலமர நிழலில் மிதமான தென்றல் காற்றுவீச எப்போதும் குளிர்மையாக வாசகர்கட்கு அரும்சேவையாற்றிக் கொண்டிருக்கிறது.

தொழிலாளர்கள், கலைஞர்கள், இப்பகுதியை சேர்ந்த இளைஞர்களின் வியர்வையில் உருவானதுதான் கணபதி படிப்பகம் இதற்கு ஒருசிலர் தளபாடம் செய்ய மரங்களும், பணமும் கூடதந்து உதவியுள்ளார்கள். இப்படிப்பகத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலை இன்று தனது 45வது வருடத்தை பூர்த்தி செய்கிறது. இந்தப் பாடசாலையில் ஆரம்ப கல்வியை பயின்ற பாலகர் பலர் எம் அயல் கிராமங்களில் இருந்தும் வந்து பயன்பெறுகின்றனர். வருடம் தோறும் விளையாட்டுப்போட்டி ஆண்டு விழா சிறப்பாக நடைபெறுகின்றது. இயல் இசை நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளை மேடையில் இப்பாலகர்கள் செய்து காட்டும்போது ஆயிரக்கணக்கான ரசிகர்களின் முகம்மலர்ந்திருப்பதும் அவர்களின் கரகோசம் ஆரவாரம் கண் கொள்ளாக் காட்சியாகும்.

நம் ஊருக்கும் மற்றும் அயல் கிராமங்களில் உள்ளவர்களுக்கும் பல வழிகளில் சேவையாற்றிவருகிறது. பாலர்பாடசாலை, தையல் வகுப்பு, நடன வகுப்பு, அழகியற்கலை ஆங்கிலப்பாடம் என பலவற்றை நடாத்தி கல்விக்கு முதலிடம் வழங்கியது நடனம், நாடகம் இலக்கியமென பலதுறையிலும் சேவையாற்றிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி வந்தநேரம், வல்வை மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவர்கட்கு புதிய சைக்கிள்களையும் பாலர் வகுப்பு மாணவர்கட்கு உடை, கற்றல், உபகரணங்கள், தையல் வகுப்புக்கு 4 புதிய தையல்மெசின்களையும், இப்பகுதி மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களையும் வழங்கியதற்கு சகல ஏற்பாட்டையும் செய்தது. நெடியகாடு பலநோக்கு கூட்டுறவு சங்க கிளையை தன் முயற்சியால் தனது தலைமையிலேயே ஆரம்பித்துவைத்தது.

இவை எல்லாம் சிறப்புற நடக்க அன்று முதல் இன்றுவரை சேவையாற்றிவந்த நிர்வாகசபைகள், மற்றும் இப்பகுதி இளைஞர்கள் பாலர்பாடசாலை ஆசிரியர்கள், தையல் வகுப்பு ஆசிரியர்கள், நடன வகுப்பு அசிரியர்கள், நம் ஊரை சேர்ந்த பெரியோர்கள் நலன் விரும்பிகள் ஆவர்.

கணபதி படிப்பகம் ஒரு தனித்தவத்தை பேணி வருகிறது. அந்த வழியில் அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளது என்பது ஊர்மக்களுக்கு தெரியாததொன்றல்ல. யாழ்மாவட்டத்திலே சிறந்த படிப்பகமாக தெரிவு செய்யப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். கணபதி படிப்பகத்திற்கு அருகே அமைந்துள்ள பெண்கள் பாடசாலைக்கு, 'வல்வை மகளிர் வித்தியாலயம்' என்ற பெயரையும் சூட்டியது படிப்பகம்தான். உங்கள் சேவையை மேலும் விரிவுபடுத்தி ஊர் மக்கள் பயன்பெறக்கூடிய விதத்தில் ஒரு நாகரீகமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும். எல்லாம் வல்ல விநாயகபெருமானின் அருள் கிடைக்கட்டும். வன்னி மரத்தான் அருள் பாலிக்க என் அன்பு நிறைந்த வாழ்த்துக்கள்

கலைப்பரிதி
K.N.தேவதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு.பூ.அகமணிதேவர்**
**காப்பாளர்,**
**கணபதி படிப்பகம்,**
**வல்வெட்டித்துறை.**

**மறக்க முடியுமா**

*கணபதி படிப்பக பொன்விழா ஆண்டு மலருக்கான வாழ்த்துரையை சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்வுகொள்கிறேன். இச்சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த சமகால நிர்வாகத்தினருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*அமரர்களான தெய்வத்திரு .தெ. லெட்சுமிகாந்தன், தெய்வத்திரு .வே.ஆதிஅருணாசலம், தெவத்திரு.செ.பேரின்பராஜா தெய்வத்திரு.கி.சந்திரசிவா, தெய்வத்திரு.இ.குமாரசாமி (தாத்தம்மான்) தெய்வத்திரு.செ.கணேசமூர்த்தி, தெய்வத்திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்களுடன் இணைந்து பணியாற்றியதை மறக்கமுடியுமா?*

*கணபதி படிப்பக கட்டிட நிதிக்காக கலைவாணி நாடக மன்றத்தின் அமரர்களான தெய்வத்திரு.கி.இராஜவேல், தெய்வத்திரு.கா.ரஞ்சனதாஸ், தெய்வத்திரு.வெ.கதிர்காமலிங்கம் (குட்டிச்சாமி) இவர்கள் உடன் இணைந்து நடித்த நாடகம் "தீர்ப்புக்கு முன்" இதனை நாம் மறக்க முடியுமா?*

*1967ம் ஆண்டு கணபதி படிப்பகம் 8500 ரூபாவில் கட்டி முடிக்கப்பட்டது. வாழ்க கணபதி படிப்பகம் வளர்க, அதன் சேவைகள்.*

**பூ.அகமணிதேவர்**
*காப்பாளர்,*
*கணபதி படிப்பகம்,*
*வல்வெட்டித்துறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**வ.சிவச்சந்திரதேவன்**
**தலைவர்,**
**வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்.**

வல்வெட்டித்துறையில் இயங்கும் கணபதி படிப்பகத்தின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்படிப்பகம் 50 ஆண்டுகளாக (போர்க்கால சூழ்நிலை உட்பட) மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறுபட்ட செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேறவும் வழிவகுத்துள்ளது. இத்தகைய சூழலில் எனக்கும் இப்படிப்பகத்தில் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்காக 1986/87 ஆம் ஆண்டில் தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சிகளை வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் சார்பில் இலவசமாக போதிக்கக்கூடியதாக இருந்தமையை பாக்கியமாகக் கருதுகிறேன்.

இப்படிப்பகம் ஆரம்பித்த காலத்தில் இருந்த சமூக, பொருளாதார, கலாச்சார சூழ்நிலைகள் இன்று பெருமளவில் மாறுபட்டுவிட்டன. இன்று கணபதி படிப்பகம் புதிய சூழ்நிலைக்கு முகம் கொடுத்து காலத்தின் தேவைக்கேற்ப நவீன செயற்பாடுகளை மேற்கொள்ளப்படுவதையே சமூகம் வேண்டிநிற்கிறது. படிப்பகத்தின் 50 ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டும் துடிப்பான இளைய தலைமுறையின் துணைகொண்டும் படிப்பக இலக்குகளை வெற்றிகரமாக அடையமுடியும்.

கணபதி படிப்பகத்தின் பொன்விழாவும், மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

**வ.சிவச்சந்திரதேவன்**
தலைவர்,
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**திரு.வெ.முத்துச்சாமி**
**செயலாளர்,**
**வல்வை ஹெலியன்ஸ் நண்பர்கள்**

பொன்விழாக்காணும் கணபதி படிப்பகத்திற்கு வல்வை ஹெலியன்ஸ் நண்பர்களின் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!

1967ஆம் ஆண்டு மக்களின் சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்ட கணபதி படிப்பத்திற்கும் எமது மன்றத்திற்குமிடையே ஓர் உறவுப் பாலம் உருவானது.

படிப்பகத் திறப்பு விழாவின் போது எமது மன்றத்தால் மூன்று ரியூப் லைட் செற் அன்பளிப்பு செய்யப்பட்டு கட்டடத்தில் பொருத்தப்பட்டது. பின் அதன் சேவைகள் தடைப்படும் போதெல்லாம் நிர்வாகம் எமக்கு தெரியப்படுத்தும் உடனடியாக நாம் உரிய நடவடிக்கைகள் எடுத்து மீண்டும் சீர்செய்து பாவனைக்கு உட்படுத்துவோம்.

இதனைத் தொடர்ந்து 5-8-1984ம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல்களில் எமது ஊரும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அவ் அசம்பாவிதத்தில் கணபதி படிப்பகமும் தீக்கிரையாக்கப்பட்ட போது பல உடமைகளோடு மக்களின் வாசிப்புத் தேவையை பூர்த்தி செய்த பல புத்தகங்களும் தீக்கிரையாகின.

மீண்டும் படிப்பகத்தை புனரமைப்புச் செய்த நிர்வாகம் மக்களின் பாவனைக்காக பல புத்தகங்கள் சேகரிக்கத் தொடங்கிய போது எமது மன்றத்தின் சார்பாக நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட இந்தியா, இலங்கை (வீரகேசரிப்பிரசுரம்) யில் வெளியான கதைப் புத்தகங்களை அன்பளிப்பு செய்திருந்தோம்.

லோகநாதன், நகுலேஸ்வரன் ஆகியோர் படிப்பகத்தின் சார்பாக பெற்றுக்கொண்டனர்.

கணபதி படிப்பகத்தால் நடாத்தப்பட்டுவரும் கணபதி பாலர் பாடசாலையின் கலை நிகழ்ச்சியினை சிறப்பிக்கும் முகமாக எமது மன்றத்தால் 15.10.1975 ஆம் ஆண்டில் “இதயங்கள் பேசுகின்றன” எனும் சமூக நாடகமும் 1978ஆம் ஆண்டில் “கிறேசி போய்ஸ் இன் ஸ்ரூடியோ” எனும் நகைச்சுவை நாடகமும் 8.11.1980 ஆம் ஆண்டில் “கழட்டடி தாலியை” எனும் நகைச்சுவை நாடகத்தை மீண்டும் அரங்கேற்றினோம். ஏற்கனவே பல அரங்கம் கண்ட “சூரபதுமன்”, “பாதுகை”நாடகங்களையும் மேடைஏற்றினோம்.

மேலும் கணபதி படிப்பகத்திற்கும் பாலர் பாடசாலைக்கும் எமது மன்றம் சிறு சிறு சேவைகளை தொடர்கின்றது.

நன்றி

வெ.முத்துச்சாமி
செயலாளர்,
வல்வை ஹெலியன்ஸ் நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பகத்தின் வரலாற்றுப் பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் விழாவில் கணபதி படிப்பகம்...


தனக்கென ஒரு பாரம்பரியத்துடன் பயணித்துக் கொண்டிருக்கும் வல்வெட்டித்துறை மண்ணிலே கல்வி, கலை கலாச்சாரம் அனைத்தையும் கடைப்பிடித்து ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு என்று இல்லாமல் வல்வெட்டித்துறையின் சகல பகுதிகளுக்கும் தன் சேவையை மக்களுக்கு அளித்து இன்று 2017ம் ஆண்டில் அகவை 50ல் காலடி எடுத்து வைத்துகணபதி படிப்பகமானது வெற்றி நடை போடுகின்றது. மக்கள் சேவையை மகத்துவமாக நினைத்து பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் தளர்ந்து விடாது வீறு நடை போட்டு தனது பொன் விழாவை அழகாக எட்டிப்பிடித்ததற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர்கள் காலம் காலமாக நிர்வகித்த நிர்வாகிகளும், அபிமானிகளும், ஆதரவாளர்களும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவரினதும் முயற்சியால் கணபதி படிப்பகம் இன்று தனது பணியை திறம்படச் செய்து கொண்டிருக்கின்றது. வல்வெட்டித்துறை பருத்தித்துறை வீதியிலே நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையாரின் அருளோடு அழகான அமைவிடத்திலே கம்பீரமான தோற்றத்துடன் கணபதி படிப்பகம் தன் மக்களுக்கு ஆற்றி வரும் சேவையானது அளப்பரியது. இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் தோன்றிய எங்கள் கணபதி படிப்பகத்தின் வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. அதனை இங்கு நோக்குவோம்.


இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் நெடியகாடு கனகத்தி வடலி கிட்டங்கியில் எமது மூத்த உறுப்பினர்களான அமரர் திரு.சோ.சுப்ரமணியம், அமரர் திரு.சி.சபாரத்தினம் ஆகியோரின் முயற்சியால் ***"நேரு சங்க வாசிகசாலை"*** என்ற பெயரில் ஒரு வாசிகசாலை இவர்களால் நடாத்தப்பட்டு வந்துள்ளது. பின்னர் அவர்களின் தொழில் நிமித்தம் காரணமாக இவர்கள் வெளிமாவட்டங்களுக்கு சென்றமையால் அவ்வாசிகசாலை செயலற்றுப் போனது. பின்னர் கப்பல் ஏற்றுமதி, இறக்குமதி நடைபெறும் கேந்திர நிலையமாக விளங்கிய கொத்தியால், ஊறணி, காட்டுவளவு ஆகிய மூன்று நிலையங்களையும் உள்ளடக்கி தொழிலாளர் சங்கம் ஒன்று விளங்கியது. அச்சங்கம் '***கொத்தியால் யூனியன்***' என்று அழைக்கப்பட்டது. இதில் ***திரு.சி.பொன்னம்பலம் (பொன்னண்ணா), திரு.தெ.லெட்சுமிகாந்தன், திரு.இராமதாஸ், திரு.ச.இரத்தினவேல்*** ஆகியோர் முன்னவர்களாகத் திகழ்ந்தனர். இவர்களில் திரு.தெ.லெட்சுமிகாந்தன் அவர்கள் உந்து சக்தியாக நின்று **வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியிலே சிறிய வாகன கராய்ச்சி ஒன்றில்** '***வேம்படி வாசிக சாலை***' என்ற பெயரில் சிறிய வாசிக சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு திறமையான முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. திரு. தெ. லெட்சுமி காந்தன் அவர்களோடு, இணைந்து. கப்பற்துறை வணிகமாகிய கொத்தியால் யூனியனை தளமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையில் இருந்து பொருட்களை கப்பலுக்கு நகர்த்திச் செல்கின்ற தெப்பங்கள் ஏறக்குறைய ஒன்பது சேவையில் இருந்தன. அத்தெப்பங்களின் உரிமையாளர்களும், மேற்படி சங்கத்தின் தொழிலாளர்களும்,ஒன்று சேர்ந்த நிதியுதவிகள் கிடைத்ததன் மூலம் வேம்படி வாசிகசாலை திறம்பட இயங்கியது. இருந்த போதிலும் இவ் வாசிக சாலை அமையப் பெற்ற இடம் தற்காலிக இடமாகவும் இருந்ததோடு அந்த நேரத்தில் இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து கப்பல் வணிகம் நடைபெற்றமையால் அங்கிருந்து புத்தகங்கள், சஞ்சிகைகள், வாரமலர்கள் என்பனவும் வேம்படி வாசிகசாலையில் பாவனைக்கு வைக்கப்பட்டமையால் தினமும் ஏராளமானவர்கள் வருகை தந்து பார்வையிட்டு பயனடைந்தனர். அந்த நேரத்தில் அங்கே ஒரு இடப்பிரச்சனை தோன்றியது ஏனெனில் வேம்படி வாசிகசாலையானது அமையப்பெற்ற இடம் ஒரு சிறிய கராச்சியாகவே அமையப் பெற்றிருந்தது.


திரு.சி.பொன்னம்பலம்


திரு.தெ.லெட்சுமிகாந்தன்

இப்பிரச்சனையை நிவர்த்தி செய்வதற்காகவும் இந்த தற்காலிக இடப்பிரச்சனையை நீக்குவதற்காகவும் ஒரு நிலையான கட்டிடமொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு இப்பகுதியைச் சேர்ந்த இளம் நாடகக் கலைஞர்கள் நாடகம் ஒன்றை நடாத்தி அதன் வசூல் நிதியை வாசிகசாலைக் கட்டிடத்திற்கு வழங்குவது என முடிவெடுத்தார்கள். வேம்படி வாசிகசாலை நிர்வாகத்தினருடன் இக்கலைஞர்கள் சென்று கதைத்து அவர்களும் தாம் நிர்வாகத்தை கூட்டி ஆராய்ந்து முடிவை தெரிவிப்பதாகக் கூறினார்கள். முடிவுகளும் சிலநாட்களில் சாதகமாக இவர்களுக்கு கிடைக்கப்பெற, அன்றைய வாசிகசாலையின் செயலாளராக இருந்த திரு.தெ.லெட்சுமிகாந்தனிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அத்தோடு நாடகம் நடாத்துவதற்கு தமது நிர்வாகம் சகல உதவிகளையும் வழங்கும் எனத் தெரிவித்து நாடகம் நடாத்துவதை பெரிதும் வரவேற்றார்கள் அந்த தருணத்தில் உருவாகியதுதான் கலைவாணி நாடகமன்றம் இவ் நாடக மன்றத்தில் திரு.சோதிசிவம், திரு.பழனிவடிவேல், திரு.கே.என்.தேவதாஸ், திரு.செ.பேரின்பராசா, திரு.கி.இராசதுரை,


திரு.இராமதாஸ்


திரு.ச.இரத்தினவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.நேசனன்னா, திரு.குமரச்செல்வன், திரு.ஜெயச்சந்திரன் ஆகியோரோடு ஏனைய கலைஞர்களும் ஒன்று சேர்ந்து தீர்ப்புக்கு முன் என்ற சமூக சீர்திருத்த நாடகத்தை திறமையாக பயிற்றுவித்து *நெடியகாடு பிள்ளையார் தெற்கு வீதியில்* நாடகத்தை மேடையேற்றினர். இதன் மூலம் கிடைத்த நிதியையும், சங்கத்தவர்களும், தெப்ப உரிமையாளர்களும், தொழிலாளர்களும் அளித்த நிதியையும் ஊர்மக்களிடையே நன்கொடையாகப் பெற்ற நிதியையும் ஒன்றாக ஒருங்கிணைத்து கணபதி படிப்பகத்திற்குரிய கட்டட வேலைகள் *1967ம்* ஆண்டின் ஆரம்பத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடுப்பகுதியில் நிறைவுபெற்றது.

இக்கட்டிடத்தை கட்டுவதற்கான நிலம் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தினரால் வழங்கப்பட்டதோடு இக்கட்டிடத்தை ***திரு.து.சின்னராசா மேத்திரி***யாருடைய தலைமையில் அவரது உதவியாளர்களும் மற்றும் ஊர் இளைஞர்களின் உதவியுடனும் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது. இவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் வேலை முடியும் வரையிலும் திரு. து. சின்னராசா மேத்திரியார் தன்னுடைய திறமையான கைவண்ணத்தில் திறம்பட முடித்துக் கொடுத்தார். **(இவர் மறைந்த எமது முன்னாள் நகர பிதா திரு.து.நவரத்தினம் அவர்களின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது**) அவ்வேளையில் ***கோணர் அப்பா*** என்று எல்லோராலும் மதிக்கப்படும் ***திரு.குமாரசாமி*** அவர்கள் இக்கட்டட வேலைக்கு சிறந்த தொழில் நுட்ப ஆலோசகராகச் செயற்பட்டு நின்றார். அத்தோடு இக்கட்டடத்தின் முன் பக்க யன்னல்கள், நிலைக்கதவுகளை ***திரு.க.சிவலிங்கநாதன்*** அவர்கள் வழங்கியதோடு ஏனைய கதவு யன்னல்களை ***திரு.காத்தமுத்து*** அவர்களும் ***திரு.சதாசிவம் சிவபாதசுந்தரம்*** அவர்களும் நன்கொடையாக வழங்கி இருந்தனர் என்ற சிறப்பான பணிகளோடு இவ்மர வேலைகளை சீர் செய்யும் பணியினை ***திரு.இ.ஞானசுந்தரம்*** அவர்கள் மேற்கொண்டு இருந்தார். அத்துடன் கட்டிடத்திற்கான மின் உபகரணங்களில் ஒரு பகுதியை ***ஹெலியன்ஸ் நண்பர்கள்*** வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



*திரு.து.சின்னராசா மேத்திரியார்*



*கோணர் அப்பா*

சகலரின் ஒத்துழைப்புடனும் படிப்பகமானது கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழா செய்வதற்குதயார் நிலையிலிருந்த தருணம் இந்த வாசிகசாலைக்கு என்ன பெயர் வைப்பது என திரு.தெ.லெட்சுமிகாந்தன் தலைமையில் ஓர் கூட்டம் வேம்படி வாசிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருந்திரளானோர் கலந்து கொண்டு இரண்டு பெயர்களை முன்மொழிந்தார்கள் ஒன்று ***வேம்படி வாசிகசாலை*** எனவும் மற்றையது ***கணபதி படிப்பகம்*** என்றும் இரண்டு பெயர்கள் முன்வைக்கப்பட்டு நீண்ட கலந்துரையாடலின் பின்னர் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் அமையப் பெற்றதனால் ***கணபதி படிப்பகம்*** தான் சிறந்த பெயரென முடிவு செய்யப்பட்டது. பின்னர் இப்பகுதியில் உள்ள பெரியோர்களின் விருப்பப்படி, ***1967ம் ஆண்டு 09ம் மாதம் 14 ம் திகதி*** அன்று அன்றைய வல்வை பட்டிணச்சபை தலைவர் ***திருஆ.ஏ.இரத்தினவடிவேல்*** அவர்களால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இவர் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.இந்த தருணத்தில் கணபதி படிப்பகத்திற்குரிய ***முதலாவது நிர்வாகசபை*** தெரிவு செய்யப்பட்டது. இதில் ***தலைவர் திரு.வே.ஆதிஅருணாசலம், செயலாளராக திரு.தெ.லெட்சுமிகாந்தன், பொருளாளராக திரு.வே.பாலசுப்பிரமணியம் இவர்களோடு உபதலைவர் திரு. செ.பேரின்பராஜா, உப செயலாளராக திரு.பூ.அகமணிதேவர்*** ஆகியோரோடு 5 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் முறையே ***திரு.சே.ஏகாம்பரம், திரு. வே.கதிர்காமலிங்கம், திரு.எஸ்.இராமசாமி, திரு.செ.கணேசமூர்த்தி, திரு.ஆர்.பத்மநாதன்*** ஆகியோர் செயற்குழுவில் அங்கம் வகித்து தங்கள் கடமைகளை சரிவர செய்யத் தொடங்கினர். இவ்வாறு நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு ஒரு சில மாதங்களில் கணபதி படிப்பகத்தின் நிர்வாகத்தை வல்வை பட்டிணச் சபைக்கு கொடுக்க வேண்டும். பட்டிணச்சபையே முழுச் செலவையும் செய்து படிப்பகத்தை நடாத்தும் என்று அறிவுறுத்தப்பட இப்படியான ஒரு கட்டத்தில் வல்வையைச் சேர்ந்த பலர் கையெழுத்திட்டு படிப்பகத்தினை தொடர்ந்தும் அதன் நிர்வாகத்தினர்தான் நடாத்த வேண்டும் எனக்கோரி கடிதம்ஒன்றை கையளித்தனர். இருந்த போதிலும் நிர்வாகம் இதை ஆராய்வதற்கு ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டியது. இக்கூட்டத்திற்கு பெருந்திரளானோர் கலந்து கொண்ட போதிலும் முடிவு எட்டப்படாமல் கூட்டம் முடிவு பெற்றது. பின்னர் நிர்வாகமே முழுப் பொறுப்பையும் வழமை போல செயற்படுத்தினார்கள்.

கணபதி படிப்பகமானது தனது முதலாவது ஆண்டு விழாவை ***1968ம்*** ஆண்டில் கொண்டாடிய போது *அகில இலங்கை புகழ் பெற்றவரான நடிகமணி வி.வி வைரமுத்து* அவர்களின் ***"அரிச்சந்திரா மயான காண்டம்"*** என்னும் இசை நாடகமும் *யாழ்ப்பாண சுண்டுக்குளி நாடகமன்றத்தின்* ***"அடங்காப்பிடாரி"*** என்ற சமூகநாடகமும் மேடையேறியமை சிறப்பம்சமாகும். இவ்வாறு திறம்பட இயக்கிக் கொண்டிருந்த படிப்பகத்திற்கு என்று ஒரு சின்னமோ அல்லது கொடியோ உருவாக்கப்படாமல் நாம் வணங்கும் பிள்ளையாரின் உருவத்தை இலட்சணையாகக்கொண்டு கடிதங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பாவனைகளிலும் பயன்படுத்தி வந்தனர். இருந்த போதிலும் கடிதங்களை நாம் படித்து விட்டு வீசி விடுவோம். அதனால் தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்ட சின்னத்தை மாற்றி கணபதி படிப்பகத்திற்கு என்று ஒரு சின்னமோ அல்லது கொடியோ உருவாக்க வேண்டும் என நிர்வாகம் தீர்மனித்து அதற்கமைய பொதுக்கூட்டம் ஒன்றை கூட்டி தம் நிலைப்பாட்டை நிர்வாகம் தெளிவுபடுத்தியது. பொதுச்சபையும் ஏற்று ***திரு. சோதி அருணாசலம்,*** Dr.V.பழனிவேல் ஆகியோரிடம் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவர்களின் முயற்சியினால் இன்று எம் பாவனையில் உள்ள ***உலகம் அதன் அடிப்பாகத்தில் தாமரைப்பூ அதன் மேல் சுடர் விட்டெரியும் குத்து விளக்கு,அக்குத்து விளக்கின் பாதத்தின் மேல் ஒருஏட்டுச்சுவடி*** இதன் பொருள் கல்வியை ஒளிரவிடச் செய்து உலகமெல்லாம் பரப்ப வேண்டும். வாசிப்பு பழக்கம் உலகமெங்கும் பரவட்டும் என்ற பொருளோடு நிர்வாகம் சின்னத்தையும் கொடியையும் அமைத்துக் கொண்டது

கணபதி படிப்பகத்தின் உன்னதமான மக்கள் சேவையில் சிறப்புமிக்க சேவையாக விளங்கிய பணிகளில் ஒன்று **1972ம் ஆண்டு இன்றைய வல்வை மகளிர் மகா வித்தியாலத்தினை ஆரம்பித்த பெருமை படிப்பகத்தையே சாரும்**. அந்த வகையில் கணபதி படிப்பகத்திற்கு அருகில் இப்பகுதி இளைஞர்களின் முயற்சியினால் படிப்பகத்தின் தலைமையில் பெரும் குப்பைமேடாக இருந்த காணியை பல கிழமைகள் சிரமதானம் மூலம் துப்பரவாக்கி அக்காணியில் செல்லத்துரைத் தண்டயல் புதல்வர்கள் தங்கள் தாயாரின் நினைவாக தங்கரெத்தினம் ஞாபகார்த்த கட்டடம் ஒன்றினையும், அத்துடன் கல்வி அமைச்சினால் ஒரு கட்டடமும் கட்டப்பட்டு 1972ல் பெண்கள் பாடசாலையொன்று கட்டி முடிக்கப்பட்டது. இருந்த போதிலும் இப்பாடசாலைக்கு றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை என்று பெயர் சூட்டப்பட்டு இருப்பதை அறிந்த நிர்வாகம் உடனே இந்தப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு இப்பகுதியில் வாழ்கின்றவர்களில் கணிசமானவர்கள் இந்துக்கள் என்பதுடன் பிள்ளையார் கோவில் ஒன்று உள்ளது. அத்தோடு கணபதி படிப்பகம் என்ற பெயரில் வாசிகசாலை ஒன்றும் முன் அமைந்துள்ளது. ஆகவே இப்பகுதி மக்கள் அப்பெயரை விரும்பவில்லை எனத் தெரிவித்து சம்பந்தப்பட்டவர்களை நாடியதன் மூலம் இவர்களுக்கும் நல்லபதில் கிடைத்ததோடு நீங்களே நல்ல பெயரினைச் சூட்டி, திறப்பு விழாவினையும் திறம்பட நடாத்தி வைக்குமாறு அறிவுறுத்தப்பட கணபதி படிப்பக நிர்வாகத்தினர் ஒட்டுமொத்த வல்வை மக்கள் விரும்பும் வகையில் **வல்வைமகளிர் வித்தியாலயம்** என்ற பெயர் சூட்டப்பட்டுதிறப்பு விழாவினையும் திறம்பட நடாத்தினர். பின்னர் இப்பெயரே **வல்வை மகளிர் மகா வித்தியாலயம்** எனத் தரமுயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி படிப்பகத்தின் 5வது ஆண்டு நிறைவில் 1972 இல் இப்பகுதி சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக வல்வெட்டித்துறையில் நெடியகாட்டுப் பகுதியில் தைப்பூச நன்நாளில் **கணபதிபாலர் பாடசாலை**எனும் பெயரோடு பிள்ளையார் கோவிலின் தெற்கு புறமாக உள்ள சிவஸ்ரீ.சோ.**நந்தகோபாலகுருக்கள்** (பொனனுஜயா) வீட்டில் அவரின் பாவனையில் உள்ள மணவறை அலங்கார பொருட்கள் வைக்கும் அறையில் பாலர் பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்டது. இப்பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் முதலாவது ஆசிரியையாக **திருமதி. துரைராஜரட்ணம் தயாநிதி** அவர்கள் கடமையாற்றியுள்ளார். பின்னர் 1972.10.01 அன்று புதிய பாலர் பாடசாலைக்கட்டடத்திற்கு நிதி திரட்டும் முயற்சியின் முதற்கட்டமாக வல்வை ரஞ்சனா தியேட்டரில் "குழந்தைக்காக' என்னும் திரைப்படம் நிதியுதவிக் காட்சியாக காண்பிக்கப்பட்டது. திரைப்படக் காட்சி மூலமும், நன்கொடையாக பெற்ற பணத்தினையும் கொண்டு 1977 இல் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளயையார் ஆலய முன் வீதியில் பாலர் பாடசாலைக்கான நிரந்தரக்கட்டடம் ஒன்று 'போண்டா' கட்டியண்ணா, செல்வராசா, இ.அண்ணா, ஸ்பீக்கர் குட்டி, முருகதாஸ் உட்பட அன்றைய இளைஞர்கள் பலரின் சரீர உதவியுடன் கட்டி எழுப்பப்பட்டு இறுதிக்கட்டத்தில் ஆலய வீதி விஸ்தரிப்பிற்காக ஆலய நிர்வாகத்தினரதும், ஊர்ப்பெரியவர்களின்தும் வேண்டுகோள்களுக்கு இணங்க அக்கட்டடம் உடைக்கப்பட்டு ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் **1981ல்** கணபதி படிப்பக நிர்வாகத்தின் முயற்சியால் நெடியகாடு பிள்ளையார் கோவில் கிழக்கு திசைஆதனத்தில் நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டது. இந்தப் பாலர் பாடசாலைக் கட்டடம் அமைக்கும் பணியில் அன்றைய நிர்வாகிகளான **திரு.க.சதானந்தவேல், திரு.செ.விக்னராஜா, திரு.ஈ.கிருஷ்ணலிங்கம்** உட்பட பல நிர்வாக உறுப்பினர்கள் ஊதிய செலவைக் குறைக்கும் முகமாக தாங்களும் கல் மண் சுமந்து கட்டட வேலையில் தம்மை அர்ப்பணித்தார்கள் என்பது போற்றப்பட வேண்டிய விடயமாகும். இவ்ஆதனமானது **திரு.பொன்னம்பலம் ஓசியர்** அவர்களால் நெடியகாடு பிள்ளையார் ஆலயத்துக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கமையாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக தற்போது ஐக்கியராஜ்ஜியத்தைத் தளமாகக்கொண்டியங்கும் நெடியகாடு அபிவிருத்திச் சபையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு படிப்பகத்திற்கென அன்பளிப்புச்செய்யப்பட்ட காணியில் நெடியகாடு அபிவிருத்திச்சபையினரின் பிரதான நிதிஅனுசரணையுடனும் மற்றும் அவுஸ்ரேலியா வல்வை நலன்புரிச்சங்கம், கணபதி பாலர் பாடசாலை பழையமாணவர்கள், நலன்விரும்பிகளின் நிதி அன்பளிப்புக்கள் மூலமும் நவீன வசதிகளுடன் கூடிய பாலர்பாடசாலைக் கட்டடமும் அதனுடன்கூடிய மண்டபமும் மற்றும் பாலர் பூங்காவும் அமைக்கப்பட்டு மிக விரைவில் திறப்புவிழா காணத்தயாராகிக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973 இல் கணபதி படிப்பகத்திற்கான அமைப்பு விதிகள் அன்றைய செயற்குழுவின் தலைவர் திரு.ம.சந்திரகாந்திலிங்கம், செயலாளர்.திரு.சு.சே.குலநாயகம், மற்றும் பொருளாளர்.திரு.K.N.தேவதாஸ் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. அத்தோடு ***1977ல்*** படிப்பக நிர்வாகிகளால் இப்பகுதி நுகர்வோர்களின் நலன் கருதி பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி **நெடியகாட்டில் 13B என்ற சங்கக் கடைக் கிளையை** அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ததும் கணபதி படிப்பகமே என்பது சிறப்பு மிக்க பணிகளில் ஒன்றாகும் மற்றும் இதே ஆண்டில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணி வகுப்பினை நாடாத்தியிருந்தமை மட்டுமல்லாமல் 1983 இல் கலவரத்தினால் இடம்பெயர்ந்த அகதிகளுக்காக பொருட்கள் சேகரித்து கிளிநொச்சி, தர்மபுரம், புதுக்குடியிருப்புப் பகுதிகளில் வழங்கியமையும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

அத்தோடு கணபதி படிப்பகத்தால் இவ்வூர் பெண்களின் எதிர்கால முன்னேற்றம் கருதி **1983**ல் தையல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதோடு இதில் பலர் பங்கு பற்றி தொடர்ந்தும் பல நன்மைகளை பெற்றதோடு சுய தொழில் வாய்ப்பினையும் பெற்றுள்ளனர் இதற்காக 1985 இல் திரு.தி.செல்வராசா மற்றும் திரு.ஆ.ரவீந்திரன் ஆகியோர் தலா ஒவ்வொரு தையல் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்திருந்தனர். கணபதி படிப்பக நிர்வாகத்தினரால் தொடர்ந்தும் பிற்பட்ட காலங்களில் தையல் கண்காட்சிகள், பரத நாட்டிய நடன வகுப்புக்கள் கவின்கலை வகுப்புக்களும் சிறப்பாக நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். **1985ம்** ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமான "கவிஞன்" எனும் கையெழுத்துச் சஞ்சிகை 51 இதழ் வரையில் வெளியானதும், இரண்டு இதழ்கள் அச்சுப்பிரதியாக வெளிவந்ததும் கணபதி படிப்பக கலைப்பணியில் மேலுமோர் மைல்கல் என்று சொல்லலாம்.

வல்வையின் வரலாற்றிலே தனக்கென்று சிறப்பு மிக்க பாதையிலே பயணித்து கொண்டிருக்கும் கணபதி படிப்பகத்தின் சிறப்புக்களை மென்மேலும் நோக்கும்பொழுது **1986**ம் ஆண்டு நடைபெற்ற படிப்பகஆண்டு விழாவில் **வல்லையின் புகழ் பூத்த மூவர்களான பூ.க. முத்துக்குமாரசாமி ஆசிரியர் அவர்களுக்கு இயற்த்துறைக்கு ஆற்றிய சேவைகளுக்காக "மா அறிஞர்" எனவும் அ.நடராசா ஆசிரியர் அவர்களுக்கு இசைத்துறைக்கு ஆற்றிய சேவைகளுக்காக சங்கீத மாமணி எனவும் சா. மார்சலின் பிள்ளை ஆசிரியர் அவர்களுக்கு நாடகத்துறைக்கு ஆற்றிய சேவைகளுக்காக நாடக மாமணி எனவும் பட்டங்கள் அளித்து பொன்னாடை போர்த்தி பாராட்டும் வழங்கியதும்**, க.பொ.த சாதரண தரத்தில் 8D எடுத்தமாணவர்களுக்கான கௌரவிப்பும் சிறப்பானபணிகளாகும். அத்துடன் 1986 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கெழுத்து வகுப்பினை எமதுபிரதேச மக்களின் நன்மைக்காக ஆரம்பித்து நடாத்தியதுடன் அதே ஆண்டில் தையற்கண்காட்சி ஒன்றினையும், உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினையும் நடாத்தியமையும் மேலும் சிறப்பு மிக்க விடயங்களாகக் காணப்பட்டது.

தொடர்ந்து 1987ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி அன்றைய நிர்வாக உறுப்பினர்கள் நாடகப் போட்டி ஒன்றை நிதியுதவியாக நடாத்தி ஏறக்குறைய பத்தாயிரம் ரூபா அளவில் படிப்பகத்தின் வளர்ச்சி நிதியாகச் சேர்த்தார்கள். இந்த அரிய பணிக்கு அன்றைய தலைவர் அமரர்.சு.பழனிவடிவேல், பொருளாளர் திரு.பெ.லோகநாதன் இருவருடன் சகல நிர்வாக உறுப்பினர்களும் உறுதுணையாக இருந்தார்கள். அத்துடன் இதே ஆண்டில், யாழ் போதனா வைத்தியசாலையை மூடுவதற்கு ஏதிராக மகஜர் ஒன்றினையும் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கணபதி படிப்பகம் ஆனது வருடம்தோறும் தன்னகத்தே திறமையான நிர்வாகத்தினரை உள்ளடக்கி இருந்தமையால் சகல விடயங்களிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றால் மிகையாகாது.

1988 இல் நிர்வாகத்தில் பெண் உறுப்பினர்களாக திருமதி கமலா கந்தசாமி, அருண்மொழிதேவி சண்முகலிங்கம், சுமதி இராசகுரு ஆகியோர் உள்வாங்கப்பட்டு அதே ஆண்டில் திருமதி.கமலா கந்தசாமி தலைமையில் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றதுடன், 1987 இல் கணினி வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டது. குறித்த அக் கணனி வகுப்பிற்கு திரு.சி.மகாலிங்கம் அவர்கள் போதனாசிரியராகக் கடமையாற்றினார்.

**1992 ஆண்டு கணபதி படிப்பகம் 25வது ஆண்டில் காலடி எடுத்து வைத்து வெள்ளி விழா** ஆண்டாக பிரகடணப்படுத்தி சிறப்பாக மெருகூட்டி 25வதுஆண்டு விழாவினை 2நாள் விழாவாக சிறப்பித்து கலை நிகழ்வுகளையும் உள்ளடக்கி பாலர்களின் விளையாட்டு போட்டி வல்வைக்கலைஞர்களின் நாடகம், நடனம், பட்டிமன்றம் கணபதி பாலர்களின் கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெற்றதோடு 2ம் நாள் வெள்ளி விழாவை கணபதி -படிப்பகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகத்திகழ்ந்த பெருமைக்குரிய **திரு தெ.இலட்சுமிகாந்தன் அவர்கள்** படிப்பக கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார் என்பது மிகவும் சிறப்பான விடயமாகும். காலத்திற்குக் காலம் நிர்வகித்த நிர்வாகத்தினரால் உள்ளூராட்சி திணைக்களத்தின் அனுசரணையுடன் பல ஒப்பந்த வேலைகளை எடுக்கப்பட்டு சிறப்பாக முடித்து அதில் வரும் இலாபத்தினை படிப்பக முன்னேற்றத்திற்கு அர்ப்பணித்தது சிறப்பான விடயமாகும், உலகப் புகழ் பெற்ற நாதஸ்வர கலைஞர்களான கோண்டாவில் காணமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவயதில் இனம்கண்டு அவர்களுக்கு முதல்முறையாக தங்கப்பதக்கம் அணிவித்து பாராட்டியது எமது படிப்பகமே.

இவ்வாறு நீண்ட வரலாற்றுப்பின்னணியை கொண்ட கணபதி படிப்பகமானது, **1994**ம் ஆண்டு யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் நடாத்தப்பட்ட **தமிழின்பக்கண்காட்சியில்** மாவட்டத்தின் சிறந்த சனசமூக நிலையத்ததை தெரிவு செய்யும் போட்டிக்கு தோற்றிமுதலாவது இடத்தைபெற்று. வெள்ளிச்சுருள் கேடயமும்,சான்றிதலும் பெற்றுக்கொண்டமை மகுடம்சூடிய சாதனையாகும்.

1995 இல் அன்றைய இளைஞர்களின் பெருமுயற்சியினால் கோணேஸ் குழுவினரின் மாஜாயாலக் காட்சி மூலம் நிதி திரட்டி பாலர் பூங்கா ஆரம்பிக்கப்பட்டது. பாலர் பூங்காவினை திரு.த.வாசுதேவர் அவர்கள் திறந்து வைத்தார்கள். 2004ம் ஆண்டு மார்கழி மாதம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் எம் ஊரும் பாதிக்கப்பட்டது என்பதை யாவரும் அறிந்ததே அந்த தருணத்தில் கணபதி படிப்பகம் பல்வேறு வகைகளில் பல்வேறு தொண்டு நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களுக்கு பல்வேறு உதவிகளை பெற்றுக் கொடுத்துள்ளதுடன், வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற உயர்தர மாணவிகளுக்கு துவிச்சக்கர வண்டிகளையும் **கணபதி தையல் வகுப்புக்கு** தையல் இயந்திரங்களையும் பெற்றுக் கொடுத்தது கணபதி படிப்பகம் மேற்கொண்ட சமூகப் பணிக்கு எடுத்துக்காட்டாகும், அத்தோடு யாழ் போதனா வைத்தியசாலை இரத்ததான வங்கியினருடன் தொடர்புகளை ஏற்படுத்தி இரத்ததான முகாமினையும் அவ்வப்போது நடாத்தி வருவதுடன், 2015 ஆம் ஆண்டுதொடக்கம் "பூரணம் முதியோர் உதவிக் கொடுப்பனவு" வழங்கும் செயற்பாட்டின் கிழ் மாதாந்தம் வல்வெட்டித்துறை பிரதேசத்தில் வாழும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 30 முதியவர்களுக்கு லண்டனில் வசித்துவரும் திரு. இளையதம்பி தெய்வேந்திரன் அவர்களின் நிதிஅனுசரணையுடன் உதவித் தொகை வழங்கும் செயற்பாடு எமது படிப்பகத்தினூடாக முன்னனெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. திரு.இளையதம்பி தெய்வேந்திரன் அவர்கள் இக் கொடுப்பனவுத்திட்டத்தினை 2010 ஆம் ஆண்டிலிருந்து வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் முன்னெடுத்து வருவது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

எமது கணபதி படிப்பகமானது, மக்களுக்கு வழங்கி வரும் சேவைகள் அளப்பரியது அந்த வகையில்கணபதி படிப்பகத்தின் 44வது ஆண்டு விழாவில் **எமது வல்வை மண்ணை சேர்ந்த திரு.சு.வெற்றிவடிவேல் அவர்களுக்கு அவரின் கல்வி பணியை பாராட்டியும், திரு.இ.ஞானசுந்தரம் அவர்களுக்கு அவரின் ஆன்மீகப் பணியை பாராட்டியும் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிக்கப்பட்டனர் அத்தோடு ஆரம்ப காலங்களில் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பகுதி சிறப்பாக இயங்கியுள்ளது இவற்றோடு இன்றுவரை ஊறனி தீர்த்தக் கடற்கரையில் நீராடி வருகின்ற தெய்வங்களை நிறைகுடம் வைத்து வழிபடுவது வழமையான காரியமாக உள்ளது. அத்தோடு நவராத்திரி தினங்களில் கும்ப பிரதிஸ்டை செய்யப்பட்டு நவராத்திரி ஒவ்வொரு நாட்களும் விசேட பூஜைகள் செய்து விழாக்கோலம் பூண்டு அனுஸ்டிக்கப்படுவது இயல்பான ஒன்றாகும். மேற்படி படிப்பகத்தில் தினமும் **யாழில் இருந்து வெளி வருகின்ற பத்திரிகைகள்,கொழும்பில் இருந்து வெளிவருகின்ற தமிழ்,ஆங்கிலப் பத்திரிகைகளும்** நாளாந்தம் எமது படிப்பகத்தை அலங்கரித்து வாசகர்களை மகிழ்விக்கின்றது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட படிப்பகங்களுக்கு இடையில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற சிறந்த சனசமூக நிலையத்திற்கான போட்டியில் தொடர்ந்து பல வருடங்களாக கணபதி படிப்பகம் சிறந்த படிப்பகமாக தெரிவு செய்யப்படுகின்றமை சிறப்பான அம்சமாகும். மேலும் படிப்பகம் 2015ம் ஆண்டு மீளப் புனருத்தாரனம் செய்யப்பட்டு, வர்ண வேலைகளும் மின்சார வேலைகளும் மேற்கொள்ளப்பட்டதோடு படிப்பகத்தின் மேற்தளமும் மீளவும் சீர் செய்யப்பட்டது. இதற்கான செலவுகள் அன்பர்களால் வழங்கப்பட்டதோடு மட்டுமன்றி அரச பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் இருந்தும் அவ்வப்போது கிடைக்கப்பெறுகின்றமையும் சிறப்பான விடயமாகும்

வருடம் தோறும் படிப்பகம் தன்னுடைய திறமையான நிர்வாகத்தினர் மூலம் வருடாந்த பொதுக் கூட்டங்களை நடாத்தி நிறை குறைகளை ஆராய்வதனால் இன்றும் பல தடைகளை தாண்டி வெற்றி நடை போடுவதோடு.படிப்பகத்தால் நிர்வகிக்கப்படுகின்ற கணபதி பாலர் பாடசாலையும் மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. இப்பாலர் பாடசாலையின் அமைவிடத்தில் பாலர்களை மகிழ்வூட்டக்கூடிய வகையில் பாலர்களின் விளையாட்டு அம்சங்கள் பொருந்திய அமைவிடங்கள், இயற்கையான மரநிழல்கள், கண்கவர் காட்சிகள் சுற்றுச்சூழலில் இருப்பதோடுநவீன உலகில் பிரவேசிக்கும் எம்பாலர்களுக்கு கணினி மற்றும் ஆங்கில அறிவை வளர்க்கும் பொருட்டு கணினி கல்வியும் ஆங்கிலக் கல்வியும் கற்பிக்கப்படுவது சிறப்பான அம்சமாகும். மேற்படி ஆங்கிலக்கல்வி மற்றும் கணினி அறிவினை பாலர்களுக்குப் போதிப்பதற்கு ஏதுவாக 2009 ஆம் ஆண்டு கணபதி படிப்பகத்தின் மூத்தஉறுப்பினரும், படிப்பக்தினை ஆரம்பிப்பதற்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தவரில் ஒருவருமான அமரர்.தெ.லெட்சுமிகாந்தன் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் கணினி ஒன்று அன்பளிப்புச்செய்யப்பட்டதுடன், நெடியகாடு அபிவிருத்திச் சபையின் நிதி அனுசரணையுடன் ஆங்கிலக் கல்வியை போதிப்பதற்கான சாதனங்களும் கொள்வனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு 2011.07.16 அன்று கணினி மற்றும் தொலைக்காட்சியூடான ஆங்கிலக் கல்வியூட்டல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாலர் பாடசாலையில் வருடம் தோறும் விளையாட்டுப் போட்டி, பாலர்தின விழா, பாலர்களின் கால்கோள் விழா, ஆசிரியர் தினம், சிறுவர் தினம் மற்றும் மொழித்திறன் போட்டிகளையும் திறம்பட நடாத்துவதால் வல்வெட்டித்துறையின் சகல பகுதிகளிலும் இருந்து வருகைதந்து நூற்றுக்கனக்கான பாலர்கள் கல்வி பயில்கின்றார்கள். இன்றும் பல உயர் பதவிகளிலே வகிப்பவர்கள் கூட எமது கணபதி பாலர் பாடசாலையின் பழைய மாணவர்கள் என்றால் அது மிகையாகாது அந்தவகையில் இவ் வருடம் எமது படிப்பக பொன்விழா ஆண்டினைச் மேலும் சிறப்பிக்கும் வகையில் எமது பாலர்கள் யாழ் மாவட்ட ரீதியில் நடைபெற்ற மழலைகள் விளையாட்டு விழா - 2017 இல் பங்குபற்றி முதலாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. பொன்விழா ஆண்டினை முன்னிட்டு எமது படிப்பக உறுப்பினர் திரு.வி.டினேஸ்கரன் அவர்களின் இசையில் திரு.எஸ்.சிவா அவர்களின் பாடல் வரிகளில், திரு.ப.தனுராஜ் அவர்களின் குரலில், திரு.ஆா. ராஜேஸ் அவர்களின் ஒலிப்பதிவில் உருவாக்கப்பட்ட பொன்விழா சிறப்புப் பாடல் ஒன்றும் படிப்பகம் திறந்த நன்னாளில் 14.09.2017 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டமையும் சிறப்பான விடயமாகும்.

இவ்வாறு எதிர்கால தூர நோக்குடன் தனது பணிகளை உறுதியாக செய்து வருகின்றது.இவ்வாறு பல்வேறு வழிகளிலும் பாலர்களின் கல்வி அறிவில் கணபதி படிப்பகம் திறமையான பணியை செய்து வருகின்றமைக்கு அருகில் இருந்து நல்லாசி வழங்கும் திருச்சிற்றம்பலப்பிள்ளையாரின் திருவருள் கிடைத்திருப்பது எமக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். கணபதி படிப்பகம் சிறந்தமுறையில் இயங்கி வருகின்றமைக்கு மூலகாரணமாக **நிர்வாகிகளோடு இணைந்து நெடியகாடு இளைஞர்களும், கணபதி மின் அமைப்பாளர்களும் மற்றும் பாலர் பாடசாலையில் சிறந்த முறையில் சேவையாற்றிவரும் ஆசிரியைகளும்** கைகோர்த்து ஆற்றும்பணி அளப்பரியது. இவ்வாறு தன்னுடைய வரலாற்றிலே பயணிக்கும் கணபதி படிப்பகம் 2007ம் ஆண்டில் 40 வது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்து 2017ம் ஆண்டில் பொன் விழா ஆண்டாக அரை நூற்றாண்டை அழகாக எட்டிப்பிடித்து வீறுநடை போடுவதுமிகப்பெரிய சாதனையாகும்அத்தோடு பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தடைகள் தோன்றினாலும் விரைவாக தடைகள் சரிந்து படிப்பகம் நிமிர்ந்து நின்றமைக்கு வல்வையில் உறைகின்ற தெய்வங்களின் அருளும் மக்களின் மனம் நிறைந்த ஆசிகளும் அபிமானிகளின் தொடரான ஆதரவும் பதவி வகித்த நிர்வாகிகளின் தன்னலமற்ற சேவைகளும் தான் காரணம் என்று சொன்னால் மிகையாகாது.

பொன்விழாக் கொண்டாடும் சந்தோசமான வேளையிலே கடந்து வந்த பாதையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட வேதனைகளும், சோதனைகளும் மறுக்கவோ, மறைக்கவோ அல்லது மறக்கவோ முடியாதவையாகும்.

ஐம்பது வருடங்களில் 20 வருடங்கள் யுத்தமேகம் நிறைந்தே காணப்பட்டது அதில் கணபதி படிப்பகத்திற்கும் சில வடுக்கள் ஏற்பட்டது அதில் சில சம்பவங்கள் இளைய சமுதாயம் தெரிந்து கொள்வதற்கு தரப்படுகின்றது.

**1.** 1984, 1985 காலப் பகுதி கணபதி படிப்பகமும், கணபதி பாலர் பாடசாலையும் பாரிய வளர்ச்சியடைந்த நேரம் அந்நேரத்தில்தான் வானத்தில் முகில் கூட்டத்தில் மறைந்து வந்து ஊர் மனைகளில் குண்டுபோடும் வல்லூறுகள் (சியாமாசெட்டி விமானங்கள்) தங்கள் கைங்கரியங்களைச் கச்சிதமாக மேற்கொண்டது. மக்கள் பதுங்குகுழி (பங்கர்) வாழ்வை ஆரம்பித்தபோது கணபதி பாலர் பாடசாலையிலும் குழந்தைகள் இலகுவாய் பாதுகாப்பு தேடக்கூடியதாக பங்கர் அமைத்துக் கொடுத்ததுடன் பாடசாலை நேரங்களில் அருகிலேயே இருந்து அசம்பாவிதங்கள் ஏற்படும் நேரங்களில் இடைவெளிபார்த்து பாலர்களை வீடுகளிற்கு கொண்டுசேர்க்கும் செயலில் இறங்கிய நெடியகாடு இளைஞர் அணியின் தன்னலமற்ற சேவை இன்றும் பசுமையாய் பலரது நெஞ்சங்களில் படர்ந்துள்ளது.

**2.** கணபதி படிப்பகத்தின் அமைவிடத்தை வெளியிலிருந்து பார்க்கும்போது அரசமர நிழலிலே என்நேரமும் சில்லென்ற காற்று வருவதும் கடும் கோடை காலத்தில் கூட தென்றலாய் எம் மேனியை வருடியவாறு நாம் பத்திரிகை படித்து முடிப்போம். இவ்விடத்தை 25 வருடங்கள் பின்நோக்கிப் பார்ப்போமாயின் தற்போது அரசமரம் இருக்கும் இடத்தில் பாரிய அரசமரம் ஒன்று கணபதி படிப்பகத்தை காப்பதுபோல் கிளைகள் பரப்பி படிப்பகம் மட்டுமன்றி சுற்றாடலும் குளிர்மையாக இருந்தது. போர்க்காலத்தில் குண்டு வீச்சுக்களையும், பீரங்கிக் குண்டுகளையும், செல்களையும் தாங்கி படிப்பகத்தை அரண் போல் காத்து வந்தது. ஒரு தடவை நான்கு உயிர்களை தனது அண்மையில் காவு கொடுத்ததை பார்த்து அரசமரம் கண்ணீர் வடித்ததோடு மீண்டும் வீறுகொண்டு படிப்பகத்தை ஒரு துகளும் படாமல் பாதுகாத்து தன் மேனியெங்கும் ரணமாகி படிப்படியாக தன் வாழ்வை முடித்தது. அந்நேரத்தில் மரத்தின் மரணத்திற்காக கண்ணீர் விட்ட மாந்தரைப் பார்த்த கண்களிலும் நீர்த்துளி எட்டிப்பார்த்தது.

**3.** படிப்பகத்தின் வெளித் தோற்றத்திற்கு அரசமரம் எந்தளவு கம்பீரம் கொடுத்ததோ அதே போல உட்புறத்திற்கு மெருகூட்டியது எது? இதற்கும் காலத்தை பின்நோக்கிப் பார்ப்பது சிறந்தது. படிப்பகத்துள் நுழையும்போது வணக்கம் என்ற வாசகம் எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்கும், அதன் மேலே சுமார் 4 அடி உயரமான காந்தியடிகளின் படம் ஏகாதியபத்தியத்திற்கு எதிராக உப்பு அள்ளும் உப்புச்சத்தியாக்கிரகத்திற்கு கடற்கரை மணலில் நடந்து செல்லும் படம் எம்மனதை வருடியபடி இருக்கும். அதன் இரு புறத்திலும் பல அறிஞர்களின் படங்களும் நேரு போன்ற உலகத்தலைவர்களின் படமும், வல்வெட்டித்துறைக்கு பெருமை சேர்த்தவர்களான இயற்தமிழ் போதகாசிரியர் வல்வை வைத்திலிங்கம் புலவரின் படம், நீச்சல்விரர்களான திரு.மு.நவரத்தினசாமியின் படம், ஆழிக்குமரன் ஆனந்தனின் படம் என்பனவும் அலங்கரித்திருக்கும், "அமைதி நிலவுக" என்ற வாசகத்திற்கமைய அமைதியாக எந்நேரமும் வாசகர்கள் நிரம்பியிருக்கும். அக்கால மணிக்கூட்டின் பெண்டுலம் ஆடும் சத்தம் மட்டுமே வாசகர் மத்தியில் கேட்கும். இந்த ரம்மியமான சூழல் கண்திருஷ்டி பட்டது போல் 1984 ம் ஆண்டு போர்ச்சூலில் முதல் தடவையாக அறிவூற்றான எமது படிப்பகம் எரியூட்டப்பட்டது அதை கண்டு பதறிய வாசகர்கள் பலர் கண்கலங்கினர், இதனை உடனடியாக சீர்ப்படுத்திய நிர்வாகத்தினர் மீண்டும் பொலிவூட்டினர். ஆயினும் அசம்பாவிதம் தொடர் கதைபோல் ஆகி உச்சக்கட்டமாக அந்நியப்படை தமது தேசபிதாவின் படத்தை கீழே விழுத்தி அதன் கண்ணிலே கத்தியால் குத்தியும் சகல படங்களும் அடித்து நொருக்கப்பட்டது. ஆம் காந்தியைக் கொன்றது ஒரு கோட்சே, காலத்திற்கு காலம் காந்தியத்தை கொல்வதற்கும் பல கோட்சேக்கள்.........

பொன்விழாக் கொண்டாடும் இவ்வேளையிலே இப்படியான வேதனைகள், சோதனைகள் என்பவற்றை தாண்டி வந்ததை என்றும் மறக்க முடியாதது.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967 தொடக்கம் 2017 வரை 50 ஆண்டுகளாக கணபதி படிப்பகத்தினை சிறந்த முறையில் நிர்வகித்த செயற்குழுக்களில் முக்கிய பதவி களை வகித்தோர்.

| காலம் | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1967 | வே.ஆதி அருணாசலம் | தெ.லெட்சுமிகாந்தன் | வே.பாலசுப்பிரமணியம் |
| 1968 | தெ.லெட்சுமிகாந்தன் | இ.ஞானசுந்தரம் | பொ.மகேந்திரம் |
| 1969 | சிவ.சோதி அருணாசலம் | | |
| 1970 | | தெ.லெட்சுமிகாந்தன் | சு.சே.குலநாயகம் |
| 15.07.1971 - 25.09.1972 | திநாகேஸ்வரன் ஐயா | K.N.தேவதாஸ் | கா.றஞ்சனதாஸ் |
| 25.09.1972 - 04.02.1973 | இ.துரைரெட்ணம் | சு.இராசகோபால் | ஸ்ரீ.ஸ்ரீ.ராஜேஸ்வரன் |
| 04.02.1973 - 10.09.1974 | ம.சந்திரகாந்திலிங்கம் | சு.செ.குலநாயகம் | K.N.தேவதாஸ் |
| 10.09.1974 - 12.05.1976 | K.N.தேவதாஸ் | க.சதானந்தவேல் | S.S.U.தர்மரெத்தினம் |
| 12.05.1976 - 04.01.1977 | பூ.அகமணிதேவர் | சோ.மனோகரன் | க.சதானந்தவேல் |
| 04.01.1977 - 30.07.1978 | சிவ.சோதி அருணாசலம் | இ.வே.கதிர்காமலிங்கம் | இ.இராதாகிருஸ்ணன் |
| 30.07.1978 - 10.03.1979 | தி.குணசபாபதிப்பிள்ளை | தெ.லெட்சுமிகாந்தன் | இ.இராதாகிருஸ்ணன் |
| 10.03.1979 - 26.07.1981 | தி.குணசபாபதிப்பிள்ளை | பூ.அகமணிதேவர் | இ.இராதாகிருஸ்ணன் |
| 26.07.1981 - 08.07.1983 | க.சதானந்தவேல் | ஆ.சோமசுந்தரம் | இ.இராதாகிருஸ்ணன் |
| 08.07.1983 - 27.10.1985 | ந.யோகரட்ணம் | க.செல்வச்சந்திரன் | ஆ.சோமசுந்தரம் |
| 27.10.1985 - 14.10.1986 | க.பரமகுரு | யோ.வைத்தீஸ்வரன் | பெ.லோகநாதன் |
| 14.10.1986 - 07.02.1988 | சு.பழனிவடிவேல் | க.மகேந்திரராசா | பெ.லோகநாதன் |
| 07.02.1988 - 16.01.1989 | கு.குலராசா | ச.ஜெயகணேஸ் | பெ.லோகநாதன் |
| 16.01.1989 - 25.03.1990 | K.N.தேவதாஸ் | ச.ஜெயகணேஸ் | கா.வசந்தன் |
| 25.03.1990 - 24.03.1991 | பூ.அகமணிதேவர் | க.நந்தகுமார் | கா.வசந்தன் |
| 24.03.1991 - 15.03.1992 | K.N.தேவதாஸ் | க.நந்தகுமார் | கா.வசந்தன் |
| 15.03.1992 - 07.02.1993 | K.N.தேவதாஸ் | கா.வசந்தன் | இ.இராதாகிருஸ்ணன் |
| 07.02.1993 - 21.08.1993 | சு.பழனிவடிவேல் | தி.கணநாதன் | பெ.லோகநாதன் |
| 21.08.1993 - 11.01.1994 | இ.இராதாகிருஸ்ணன் | பூ.அகமணிதேவர் | பெ.லோகநாதன் |
| 11.01.1994 - 07.01.1995 | இ.இராதாகிருஸ்ணன் | பூ.அகமணிதேவர் | பெ.லோகநாதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 07.01.1995 - 28.01.1996 | சு.சே.குலநாயகம் | பூ.அகமணிதேவர் | பெ.லோகநாதன் |
| 28.01.1996 - 19.01.1997 | இ.தேவகுரு | பூ.அகமணிதேவர் | பெ.லோகநாதன் |
| 19.01.1997 - 08.02.1998 | இ.தேவகுரு | பூ.அகமணிதேவர் | பெ.லோகநாதன் |
| 08.02.1998 - 24.01.1999 | பூ.அகமணிதேவர் | இ.இராதாகிருஸ்ணன் | இ.தேவகுரு |
| 24.01.1999 - 13.02.2000 | க.தங்கத்துரை | இ.இராதாகிருஸ்ணன் | நா.யோகீஸ்வரராஜா |
| 13.02.2000 - 07.01.2001 | க.தங்கத்துரை | ஆ.பிறேம்குமார் | நா.யோகீஸ்வரராஜா<br>பெ.லோகநாதன் |
| 07.01.2001 - 17.03.2002 | நா.யோகீஸ்வரராஜா | பூ.அகமணிதேவர் | கி.மகாலிங்கம் |
| 17.03.2002 - 13.03.2003 | இ.இராதாகிருஸ்ணன் | சி.சிவச்செல்வன் | கி.மகாலிங்கம் |
| 13.03.2003 - 22.02.2004 | இ.இராதாகிருஸ்ணன் | தே.சுரேந்தர் | கி.மகாலிங்கம் |
| 22.02.2004 - 13.03.2005 | இ.இராதாகிருஸ்ணன் | ச.ஜெயகணேஸ் | கி.மகாலிங்கம் |
| 13.03.2005 - 09.04.2006 | K.N.தேவதாஸ் | ச.ஜெயகணேஸ் | பெ.லோகநாதன் |
| 09.04.2006 - 15.04.2007 | ச.பிரதீபன் | இ.ரமேஸ் | யோ.கரிகாலன் |
| 15.04.2007 - 11.05.2008 | ந.சரவணபவா | லோ.நாகராஜன் | சி.மதுசூதனன் |
| 11.05.2008 - 24.03.2009 | பூ.அகமணிதேவர் | லோ.நாகராஜன் | சி.மதுசூதனன் |
| 24.03.2009 - 09.05.2010 | பூ.அகமணிதேவர் | லோ.நாகராஜன் | சி.மதுசூதனன் |
| 09.05.2010 - 09.01.2011 | பூ.அகமணிதேவர் | த.மிரேஸ் | சி.மதுசூதனன் |
| 09.01.2011 - 22.01.2012 | ச.ஜெயகணேஸ் | ச.விஸ்வரூபன் | சி.மதுசூதனன் |
| 22.01.2012 - 03.02.2013 | ச.ஜெயகணேஸ் | கு.ஞானசேகரம் | இ.இராதாகிருஸ்ணன் |
| 03.02.2013 - 30.03.2014 | ச.ஜெயகணேஸ் | பூ.அகமணிதேவர் | இ.இராதாகிருஸ்ணன் |
| 30.03.2014 - 23.02.2015 | ச.ஜெயகணேஸ் | சி.மதுசூதனன் | இ.இராதாகிருஸ்ணன் |
| 23.02.2015 - 28.02.2016 | பூ.அகமணிதேவர் | சி.மதுசூதனன் | இ.இராதாகிருஸ்ணன்<br>வே.கண்ணதாசன் |
| 28.02.2016 - 19.02.2017 | பூ.அகமணிதேவர் | சி.மதுசூதனன் | வே.கண்ணதாசன் |
| 19.02.2017 - | சி.மதுசூதனன் | ச.பிரதீபன் | வே.கண்ணதாசன் |

*1984 இல் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக சில முக்கிய ஆவணங்கள் அழிக்கப்பட்டதனால் சில விபரங்களை திரட்முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கணபதி பாலர் பாடசாலையில் 1972 தொடக்கம் இன்றுவரை சேவையாற்றிய, சேவையாற்றிக் கொண்டிருக்கும் பாலர் பாடசாலை ஆசிரியைகள் விபரம்.*

| தொ.இல | பெயர் | காலம் |
|---|---|---|
| 01 | திருமதி.துரைராஜரட்ணம் தயாநிதி | 1972 -1974 |
| 02 | செல்வி.பாஸ்கரதேவி தில்லைநடராசா | 1972-1973 |
| 03 | செல்வி.இராணி கணபதிப்பிள்ளை | 1973 - 1983 |
| 04 | செல்வி.இராஜேஸ்வரி சேதுராஜா | 1976 |
| 05 | செல்வி.நிர்மலா செல்வசபாபதிப்பிள்ளை | 1980 - 1989 |
| 06 | செல்வி.பாலேந்திரராணி பொன்னம்பலம் | 1981 |
| 07 | திருமதி.அருமைலிங்கம் வேணுராதா | 1986 - 1987 |
| 08 | செல்வி.சாந்தினி கோபாலசாமி | 1988 - 1990 |
| 09 | செல்வி.சுகுணா சுப்பிரமணியம் | 1989 - 1993 |
| 10 | திருமதி.தமிழ்வாணன் ஜெகதீஸ்வரி | 1990 - 1995 |
| 11 | செல்வி.தனலட்சுமி தாயுமானவர் | 1993 - 1995 |
| 12 | செல்வி.கீதா பூபாலசிங்கம் | 1993 - 1995 |
| 13 | செல்வி.சியாமளா பிரான்சிஸ் | 1993 - 1995 |
| 14 | செல்வி.கயல்விழி மகேந்திரன் | 1995 |
| 15 | செல்வி.குமுதினி செல்வராசா | 1996 - 2006 |
| 16 | செல்வி.வத்ஸ்சலா ஜெயராசா | 2002 - 2015 |
| 17 | செல்வி.நித்தியா லோகநாதன் | 2007 - 2016 |
| 18 | செல்வி.லீலா இராசலிங்கம் | 2010 - 2011 |
| 19 | திருமதி.சாந்தன் சுஜாதா | 2011 - இன்றுவரை |
| 20 | திருமதி.ரமேஸ்குமார் சுவர்ணலதா | 2011 - இன்றுவரை |
| 21 | திருமதி.தர்மராசா மைதிலி | 2012 - 2015 |
| 22 | செல்வி.தர்சினி விநாயகமூர்த்தி | 2015 - இன்றுவரை |
| 23 | திருமதி.சிவதர்சினி ஹம்ஷன் | 2016 - இன்றுவரை |
| 24 | திருமதி.சுகன்யா கேதீஸ்வரன் | 2016 - இன்றுவரை |

இவர்களுடன் திருமதி.மைதிலி பால்ராஜ் அவர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஆசிரியைகள் பற்றாக்குறையான சந்தர்ப்பங்களிலும், பாலர் விளையாட்டுப்போட்டி மற்றும் பாலர் தின விழாக்களின் போதும் உதவியாளராக உன்னதமான சேவையாற்றியுள்ளார். மேலும் தற்போது செல்வி.தர்சினி விநாயகமூர்த்தி அவர்களும் நிர்வாகத்தினரின் உதவிக் கொடுப்பனவு இன்றி சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி படிப்பக தையற் பயிற்சி வகுப்பு ஆசிரியைகள்

| | |
|---|---|
| 01 | செல்வி.வசந்திராதேவி குலசேகரம் |
| 02 | செல்வி.தேசிங்குராணி மீனாட்சிசுந்தரம் |
| 03 | செல்வி.பரமேஸ்வரி செல்லையா |
| 04 | செல்வி.கலாநிதி தணிகாசலம் |

கணபதி படிப்பக நடன வகுப்பு ஆசிரியைகள்

| | |
|---|---|
| 01 | செல்வி. காமினி தங்கவேலாயுதம் |
| 02 | செல்வி.இ.ஞானதர்சினி |
| 03 | செல்வி.விசாமினி விசாகரத்தினம் |
| 04 | செல்வி.மேனகா சத்தியமூர்த்தி |
| 05 | திருமதி.செ.சுபாசினி |

படிப்பகத்திற்கு தற்போது பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை அன்பளிப்புச் செய்து வருவோர் .

| | | |
|---|---|---|
| 01 | திரு.யோ.கருத்திருமன் | தினக்குரல் |
| 02 | திரு.ச.பிரதீபன் | வலம்புரி |
| 03 | திரு.ச.சிவகுமார் | விஜய், ஜீனியஸ் |
| 04 | திரு.ம.சங்கரகாந்திலிங்கம் | Daily News |
| 05 | திரு.S.X.குலநாயகம் | Sunday Observer |
| 06 | திரு.பொ.மாணிக்கவாசகர் | வீரகேசரி |

படிப்பகத்திற்கு பலவழிகளில் நிதி அன்பளிப்புக்கள் மற்றும் சரீர உதவிகள் நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள் மூலம் கிடைக்கப்பெறுவதுடன் மற்றும் கடந்தகாலங்களில் சில வருடங்கள் பாலர் பாசாலை விளையாட்டுப் போட்டிகளுக்கு நிதி அனுசரணையினை வல்வை ஒன்றியமும், வல்வை நலன்புரிச்சங்கம் - பிரான்ஸ் ஆகிய அமைப்புக்களுக்கும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் தலைவர் அவர்களின் உள்ளத்திலிருந்து



**திரு.தி.நாகேஸ்வரன் ஐயா**
**இல 1 கிறகரி இடம்**
**கொழும்பு – 05**

எமது கணபதி படிப்பகம் 1967ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஐம்பது வருடங்களை கடந்து பொன்விழாவை கொண்டாட காத்திருக்கிறது. 1971ம் ஆண்டு எனது தலைமையில் ந.தேவதாஸ், காலம் சென்ற கா.றஞ்சனதாஸ் அகமணிதேவர் ந.துரைராஜரட்ணம், S.X குலநாயகம், சோமசுந்தரம் (சோமண்ணா) வே.பொன்னம்பலம், நா.குமரச்செல்வம், நா.கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் நிர்வாகசபை பொறுப்பில் கணபதி படிப்பகம் வந்தது. அந்த நேரத்தில் எமது படிப்பத்திற்கு ஒரு கொடியும் சின்னமும் அமைக்கவேண்டும் என்று சபை முடிவு எடுத்து. தற்பொழுது லண்டனில் வாழும் Dr.V.பழனிவேல் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அவர்கள் சிபார்சு செய்த சின்னத்தை மோகன் ஆட்ஸ், R.மோகனதாஸ் அவர்கள் அழகாக வரைந்துதந்தார். கொடியேற்றும் மேடையை திரு.சின்னராசா மேஸ்திரியார் அமைத்துத்தந்தார். வல்வை மகளிர்பாசாலை திறப்புவிழா அன்று அதே தலைவரைக் கொண்டு எமது படிப்பக கொடியையும் ஏற்றிவைத்தோம். 1972ம் ஆண்டு எமது சிறார்களுக்காக ஒரு பாலர்பாடசாலைஅமைக்க வேண்டும் என்று தீர்மானித்தோம். எங்கு ஆரம்பிப்பது, யாரை ஆசிரியராக நியமிப்பது என்றும் அந்நேரத்தில் படிப்பகத்திலும் நிதியில்லை, எமது கையிலும் நிதியில்லை. அதேநேரம் சிவஸ்ரீ.சோ.நந்தகோபாலகுருக்கள் (பொன்னு ஐயா) சப்பற பொருட்கள் வைக்கும் வீடு காலியாக இருந்தது. அவரிடம் சென்று கேட்டேன் சின்னையா பாலர் பாடசாலை ஆரம்பிக்க போகிறோம். அந்த வீட்டை எமக்கு உதவியாக தாருங்கள் என்று, அவரும் எதுவித மறுப்பும் இன்றி வீட்டுத்திறப்பைத்தந்தார்கள். இனி ஆசிரியைக்கு எங்குபோவது? ந.துரைராஜரட்ணத்தின் பாரியார் தயா அக்காவை அணுகி அவரிடம் எமக்கு உதவிசெய்ய வேண்டும், என்று கேட்டோம். எதுவித மறுப்பும் இன்றி சம்மதம் தந்தார். எமது கணபதியின் பெயரிலேயே கணபதிபாலர் பாடசாலை என்னும் பெயரை சூட்டி 1972ம் ஆண்டு தை பூச நன்நாளில் பாடசாலையை ஆரம்பித்தோம். தைபூசத்திற்கு சிறுவர்களுக்கு ஏடுதுவக்கும்நாள் கோவிலில் ஏடுதுவக்கிவிட்டு, பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்தார்கள். பாடசாலையும் திறம்படநடந்துகொண்டிருந்தது.

இன்று லண்டனில் வாழும் எமது நெடியகாட்டு இளைஞர்களின் பெரும் முயற்சியாலும் ஊர் மக்களின் உதவிகளாலும் சொந்தக் காணியில் கணபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர்பாடசாலையை அமைத்து கொண்டு இருக்கிறார்கள். அடுத்து படிப்பத்திற்கு எப்படி பணம் சேர்ப்பது என்ன தேவைகளுக்கும் ஊர் மக்களிடம்தான் போக வேண்டியிருக்கிறது என்று கவலைபட்டுக்கொண்டு இருந்தோம். அந்தநேரம் கிணற்றுக் கட்டும், சோமண்ணா வீட்டு திண்ணையும் தான் எமது பொழுது போக்குமிடம் அந்தநேரம்தான் தி.குணசபாபதிப்பிள்ளை வை.ஜெயச்சந்திரன் சேர்ந்து ஒரு யோசனை சொன்னார்கள். நாகர் கோவிலில் கப்பல்திருவிழா வருகிறது. அன்று நாம் அங்கே ஒரு தோசைக் கடையை போட்டால் நல்ல பணம் சேரும் என்று. உடனே அந்த இடத்தில் நின்ற நெடியகாட்டு இளைஞர்கள் அத்தனை பேரும் கட்டாயம் போடவேண்டும், எங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்வோம். ஐயா அதற்குரிய ஏற்பாட்டை நீங்கள் செய்யுங்கள் என்று உடனே அதற்குரிய ஏற்பாடுகளை செய்து குளத்தடி பொன்னுக்கண்டு ஆச்சியும், (குட்டியக்கா) திருமதி. அனந்தராசா மற்றும் நெடியகாட்டு பெண்கள் எல்லோரும் சேர்ந்து தோசைமா தயாரித்து தந்தார்கள். 1972ம் ஆண்டு நடந்த கப்பல் திருவிழாவில் கணபதி தோசை கடை பெரிய விளம்பர சேலையையும் கட்டி இரவு 9 மணியளவில் கடையை திறந்தோம்.

எமது இளைஞர்களின் சுறுசுறுப்பும், குணசாபாபதிப்பிள்ளை ஜெயச்சந்திரன் இருவரும் தான் தோசையை சுட்டுக் கொண்டே இருந்தார்கள். இரவு 2 மணியளவில் வியாபாரம் முடிந்துவிட்டது.... தோசைமா முடிந்துவிட்டது..... பணமும் குவிந்தது. அந்தப்பணத்தைக் கொண்டுதான் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா புத்தகக்கடையில் சகல புத்தகங்களையும் வாங்கினோம். பின்புதான் புதன், சனிக்கிழமைகளில் படிப்பகத்தில் புத்தக பரிமாற்றம் செய்தோம். இந்த பசுமையான நினைவுகள் இன்றும் பசுமரத்து ஆணிபோன்று பதிந்து இருக்கிறது. இப்படிநாம் கஷ்டப்பட்டு வளர்த்த கணபதி படிப்பகமும் கணபதி பாலர் பாடசாலையும் ஆல் போல் தளைத்து அறுகுபோல் வேர் ஊன்றி அந்த அழகான அரசமரத்தின் கீழ் ஐம்பது ஆண்டுகளாக கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. எமது காலத்திற்குபின் வந்த எமது நெடியகாட்டு இளைஞர்கள் எவ்வளவு இன்னல்கள் போர்கெடுபிடிகள், இடப்பெயர்வுகள் பொருளாதார கஷ்டத்தின் மத்தியிலும் இந்த படிப்பகத்தையும், பாலர்பாடசாலையையும் வளர்தெடுத்திருக்கின்றாரகள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை கூறிக்கொண்டு இந்த அரும்பெரும் காட்சியை காண்பதற்கு எனக்கு நீண்ட ஆயுளை தந்த கணபதியானுக்கு நன்றி கூறி அவரை எனது சிரம்தாழ்த்தி வணங்கி விடைபெறுகின்றேன்.

நன்றி

இவ்வண்ணம்
தி.நாகேஸ்வரன் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க ! வளர்க !!

**வல்வையூர் அப்பாண்ணா**

பத்தோடு பதினொன்றாக இல்லாமல் பலதரப்பட்ட பிரிவினருக்கும் பயன்தரக்கூடியதாக பல்வேறு விடயங்களிலும் அக்கறை செலுத்தி வெற்றி கண்டு இன்று பொன் விழாக் காணும் கணபதி படிப்பகத்திற்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள். ஆங்கில தமிழ் தினசரிகள், வாராந்த வெளியீடுகள் கவிஞன் கை யெழுத்து சஞ்சிகை ஆகியவற்றின் மூலம் ஆண், பெண் இரு பாலாருக்கும் வாசிப்புத்திறனை மேம்படுத்தி சமுதாய விழிப்புணர்வைத் தூண்டி வயது வந்தோரை வழி நடத்துகிறது கணபதி படிப்பகம். பெண்களுக்குத் தையல் வகுப்புக்களை ஆரம்பித்து தையல் கண்காட்சி - விற்பனை என்பவற்றின் மூலம் சுயதொழில் வாய்ப்புக்கு வழி ஏற்படுகிறது. படிப்பகம் இளம் பெண்களுக்கான கணபதி கவின் கலை மன்றத்தினூடாக பரத நாட்டிய வகுப்புக்கள் மற்றும் நடனப்பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. பாலர் பாடசாலையை ஆரம்பித்து கடந்த 45 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான சிறார்களுக்கு ஆரம்ப கல்வி புகட்டி சகல வசதிகளும் நிறைந்த முதற்தர சிறுவர் பாடசாலையாக மிளிர்கிறது. கணபதி பாலர் பாடசாலை. 1972ஆம் ஆண்டு ஆரம்ப காலங்களில் கணபதி பாலர் பாடசாலையில் கல்விபயின்ற பலரதும் பிள்ளைகள் இன்று உயர்தர பாடசாலையின் மாணவர்களாக உள்ளமை பெருமைக்குரியது. அந்தப் பெருமைக்குரிய உதவிகளை பெருவிருப்பத்தோடு வழங்கி வருகின்றனர். கணபதி படிப்பகத்திற்கு பொதுமக்கள் கொடுக்கும் அன்பளிப்புகள் (அது 50 ரூபாவாக இருந்தாலும், 50,000 ரூபாவாக இருந்தாலும்) உடனுக்கும் கணக்கில் வரவு செய்யப்பட்டு இணையத்தில் வெளியிடப்படுவது அனைவரதும் நம்பிக்கையை வென்றெடுக்கும் நல்லதொரு முன்மாதிரியாகும். படிப்பகம் ஆற்றிவரும் பயனுள்ள பணிகளைப் பட்டியலிட்டால் மலைப்பாக இருக்கிறது.

1967 - கணபதி படிப்பகம் ஆரம்பம்

1972 மகளிர் பாடசாலை ஆரம்பம் - பூரணமான ஒத்துழைப்பு

1972 - கணபதி பாலர் பாடசாலை ஆரம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 - பரு.ப.நோ.கூ.ச 13B நெடியகாடு கிளை ஆரம்பம்

1983 - தையல் வகுப்புக்கள் - கவின் கலை மன்றம் ஆரம்பம்

1985 - "கவிஞன்" கை யெழுத்து சஞ்சிகையின் முதற்பிரதி வெளியீடு

1986 - இயல் - இசை - நாடக முக்கலைஞர்களுக்குமான கௌரவிப்பு

1992 - கணபதி படிப்பகம் - 25 வது வெள்ளி விழா நிகழ்வுகள்

1994 - யாழ் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரினால் சிறந்த ச.ச நிலையமாக தெரியப்பட்டமை

2004 - சுனாமி அனர்த்தத்தின் போது உடனடி உதவிகள்

2015 - கணபதி படிப்பகத்தின் புனர்நிர்மான வேலைகள்

கணபதி படிப்பகத்தின் வருடாந்த நிகழ்வுகள்

தீர்த்தமாட வரும் சுவாமிகளுக்கான நிறைகுட வரவேற்பு

நவராத்திரி விழா

கணபதி படிப்பகம் ஆண்டு விழா

கணபதி பாலர் பாடசாலை - விளையாட்டுப் போட்டி

கணபதி பாலர் பாடசாலை - பாலர்தின விழா

கணபதி பாலர் பாடசாலை - கால்கோள் விழா

கணபதி பாலர் பாடசாலை - ஆசிரியர் தின விழா, சிறுவர் தின நிகழ்வுகள்

மேலும் பலதரப்பட்ட உதவிகள்

மகளிர் கல்லூரி மாணவிகளுக்கான துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

கணபதி தையல் வகுப்பிற்கான தையல் இயந்திரங்கள்

பாலர் பாடசாலைச் சிறார்களுக்கான ஆரம்ப கணினி கல்விப் போதனைக்கான சாதனங்கள்

இரத்ததான முகாங்களை நெறியப்படுத்தியமை

இன்னமும் விடுபட்ட விடயங்கள் பலதும் உள்ளன.

ச.ஜெயகணேஸ், பா.உதயகுமார் (தங்கத் தமிழன்) ஆகிய இரு துடிப்பான இளைஞர்களினதும் அவர்களது நண்பர்களினதும் பூரணமான ஒத்துழைப்போடு 1985 மார்கழியில் "கவிஞன்" கையெழுத்து சஞ்சிகையின் முதற்பிரதி வெளியாகி இன்றுவரை 51 பிரதிகள் வெளிவந்திருக்கிறது என்பது பெரும் சாதனையேயாகும். இந்தப் பிரதிகளுக்கான ஆக்கங்களை அளித்ததன் மூலம் புதிது புதிதாக கட்டுரையாளர்கள், சிறுகதை புனைவோர், கவிதையாளர்கள், ஓவியர்கள் எனப் பலரையும் சமுதாயத்தில் இனங்காண முடிந்திருக்கிறது. அவர்களிற் பலர் அந்தந்தத் துறைகளில் பலபடிகள் முன்னேறிவளர்ந்திருப்பது கவிஞன் சஞ்சிகைக்கு பெருமை சேர்ப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பானவர்களே! கணபதி படிப்பகத்தைத் தோற்றுவித்த அக்கால இளைஞர்கள் - குறிப்பாகத் தூணாகத் தாங்கி நின்ற தெ.லெட்சுமிகாந்தனும் அவரது தூக்குக்கூலி நண்பர்களும், ஆரம்பகால நிதி சேகரிப்பிற்காக நாடகம் அரங்கேற்றிய அந்நாளைய இளம் கலைஞர்களான கே.என்.தேவதாஸ் அவரது நாடக நண்பர்கள், படிப்பகத்தின் கட்டுமானப் பணியினைச் செய்து முடித்த து.சின்னராசா மேத்திரியாரும் அவரது உதவியாளர்களும் பொருளுதவி புரிந்தோர், சிரமதானப் பணிகள் மூலம் உடலுழைப்பு நல்கிய இளைஞர்கள் எனப் பங்குகொண்ட அனைவருக்குமே பொன்விழா சமர்ப்பணமாகிறது, கணபதி படிப்பகத்தின் பணிகள் மேலும் மேலும் தொடர......

வாழ்த்துவது நம் கடன்! வளர்த்தெடுப்பது கணபதியின் அருட்திறன்!!

வாழ்க! வளர்க!!
வல்வையூர் அப்பாண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1967 இல் படிப்பக திறப்பு விழா அன்று



நிற்பவர்கள்–பின்வரிசை : சி.கணேசமூர்த்தி, வே.கதிர்காமலிங்கம், பொ.தேவராசா, ந.அழகராசா, சு.தங்கேஸ்வரராசா, சோ.வாமதேவர், சி.பொன்னம்பலம்,
(இடமிருந்து வலமாக) மு.துரைரெத்தினம், செ.கணேசமூர்த்தி

நிற்பவர்கள்–முன்வரிசை : வ.பற்குணம், வே.மயிலேறும்பெருமாள், சிவ.ரெட்ணவேல், அ.வேதவனம், தெ.லெட்சுமிகாந்தன், கி.சந்திரசிவா, வே.ஆதிஅருணாசலம்,
(இடமிருந்து வலமாக) திருநாவுக்கரசு

முழங்காலில் நிற்பவர்கள் : இ.சிவஞானவேல், அ.ராஜசேகரம், இ.பாலேந்திரன், சி.மார்க்கண்டு, க.தயாளசுந்தரம், வே.ரெத்தினசோதி, க.நடேசலிங்கம்
(இடமிருந்து வலமாக) ......................

அமர்ந்து இருப்பவர்கள் : கா.ரவீந்திரதாஸ், சோ.தர்மகுலசிங்கம், இ.சிதம்பரநாதன், இரா.அமுதகணேஸ், சோ.மனோகர், இ.சுகதேவன், ந.மோகனதாஸ்
(இடமிருந்து வலமாக) பெ.லோகநாதன், இரா.செல்வச்சந்திரன், ச.உதயகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் இன்றும் கணபதி படிப்பகம்



1967 இல் திறப்பு விழா அன்று கம்பீரமான தோற்றத்துடன்



1967 இல் திறப்பு விழா அன்று உட்புறத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய
வெளிப்புறத்
தோற்றம்



இன்றைய உட்புறத்
தோற்றம்




2017 ஐம்பதாவது
இந்திர விழாவில்
அழகிய மின்
அலங்காரத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967-ம் ஆண்டு ஆவணி 29-ந் திகதி (14-9-67) 6-15க்கு
திரு. மு. வி. இரத்தினவடிவேல் (தலைவர். ப. ச. வல்வை) அவர்களால் திறக்கப்பட்ட

# "கணபதி படிப்பகம்" கட்டிட

## வரவு செலவு விபரம்.

| வரவு | ரூ. | ச. |
|---|---|---|
| [illegible] மன்றத்தார் அளித்த "[illegible]" [illegible] கிடைத்தது | 2499 | 35 |
| [illegible] தொழிலாளர் வகையில் | 3458 | 70 |
| [illegible] தொழிலாளர் 1966-ம் "[illegible]" [illegible] போட்டிக்க வகையில் கிடைத்தது | 650 | 00 |
| திரு. A. S. [illegible] & சகோதரர்கள் | 600 | 00 |
| ,, செ. [illegible]துரை (கட்டிட) | 225 | 00 |
| [illegible] | 125 | 00 |
| T. M [illegible] | 100 | 00 |
| செ. [illegible] & முருகுப்பிள்ளை | 100 | 00 |
| A. R [illegible] & A. S. [illegible] | 100 | 00 |
| V. [illegible] & S. இரத்தினவேல் | 100 | 00 |
| செ. [illegible] | 50 | 00 |
| N [illegible] | 50 | 00 |
| [illegible] | 40 | 00 |
| S [illegible] | 30 | 00 |
| [illegible] | 30 | 00 |
| [illegible] | 30 | 00 |
| [illegible] | 25 | 00 |
| [illegible] | 22 | 70 |
| [illegible] | 10 | 00 |
| மொத்த வரவு | 8245 | 75 |

| செலவு | ரூ. | ச. |
|---|---|---|
| [illegible] செலவு | 1034 | 35 |
| 182 [illegible] & கூலி | 1812 | 70 |
| கல் [illegible] & [illegible] | 493 | 00 |
| [illegible] கூலி | 1333 | 15 |
| மரம் [illegible] & [illegible] கூலி | 695 | 25 |
| [illegible] & [illegible] கூலி | 728 | 95 |
| கட்டிடம் யன்னல் வகைக்கு [illegible] | 563 | 50 |
| [illegible] சாமான் & கூலி | 419 | 50 |
| 1967-ம் ஆண்டு [illegible] வசந்தோற்சவ திருமலை இசைக்கோஷ்டி & கோட்டல் | 479 | 00 |
| [illegible] வாசிகசாலை வாடகை வகையில் | 57 | 60 |
| கடை [illegible] வகையில் & பிற செலவு | 396 | 83 |
| திறப்பு விழாவுக்கு 2 இசைக் கோஷ்டி | 155 | 00 |
| [illegible] பெருக்கம் | 30 | 00 |
| வெடி (அவுட்) | 25 | 00 |
| போட்டோ | 35 | 00 |
| வெற்றிலை வகை | 65 | 00 |
| மேளம் | 30 | 00 |
| அன்றைய பிற செலவு | 171 | 80 |
| வரவு செலவு நோட்டீஸ் | 25 | 00 |
| மொத்த செலவு | 8548 | 63 |
| மொத்த வரவு | 8245 | 75 |
| [illegible] | 302 | 88 |

## அன்பளிப்புகள் :

திரு. ஐ. காத்தாமுத்து : நிலைக்குரிய மரம் 2 யன்னல், ச சின்னத்துரை : 1 கதவு,
றைலியன்ஸ் நண்பர்கள் : 3 ரியூப் பல்ப் செற். சோ வாமதேவர் : 1 ரியூப் பல்ப்.
K சாந்தரட்ணம் : சாமிப்படங்கள், K சந்திரசிவா : 1 மேசைக்கம்பளம்,
க சிவலிங்கம் : 2 யன்னல் கதவு.

[illegible] எமது படிப்பகத்திற்கு சஞ்சிகைகள் பத்திரிகைகள் தந்து உதவிய அன்பர்களுக்கும் [illegible] [illegible] கணபதி படிப்பகத்தின் [illegible] நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வணக்கம்.**

இங்ஙனம்,

ஒப்பம் : தெ. லெட்சுமிகாந்தன், வே ஆதியருணாசலம், வே. கதிர்காமலிங்கம்,
கி [illegible]ரசிவா, வே [illegible]ரேஸ்வரன், வே பாலசுப்பிரமணியம்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986 இல் நடைபெற்ற தையற் கண்காட்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1993 இல்
நடைபெற்ற
தையற்
கண்காட்சி
திறப்பு விழா
மற்றும்
குழுப் புகைப்படம்





2009 இல் நடைபெற்ற கேக் ஐசிங் கண்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





1986 ம் ஆண்டு பழம்பக
ஆண்டு விழாவில் வல்வையின்
புகழ் பூத்த மூவர்களான
பூ.க.முத்துக்குமாரசாமி ஆசிரியர்
அவர்களுக்கு இயற்துறைக்கு
ஆற்றிய சேவைகளுக்காக
"மா அறிஞர்" எனவும்
அ.நடராசா ஆசிரியர்
அவர்களுக்கு இசைத்துறைக்கு
ஆற்றிய சேவைகளுக்காக
"சங்கீத மாமணி" எனவும்
சா.மார்சலின் பிள்ளை
அவர்களுக்கு நாடகத்துறைக்கு
ஆற்றிய சேவைகளுக்காக
"நாடக மாமணி" எனவும்
பட்டங்கள் அளித்து
பொன்னாடைப் போர்த்தி
கௌரவிக்கப்பட்டபோது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1980 களில் நடைபெற்ற பாலர் விளையாட்டுப் போட்டி



1986 இல் நடைபெற்ற பாலர் தின விழா



1995 இல் திரு.த.வாசுதேவர் அவர்கள் கணபதி பாலர் பூங்காவினை திறந்துவைக்கும் தருணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1992 ஆண்டு வெள்ளி விழாவில்
கணபதி படிப்பகத்தை
ஆரம்பிப்பதற்கு
முன்னோடியாகத்திகழ்ந்த
பெருமைக்குரிய திரு
தெ.இலட்சுமிகாந்தன் அவர்கள்
படிப்பக கொடியை ஏற்றி விழாவை
ஆரம்பித்து வைக்கும் தருணம்.



வருடம் தோறும்
நடைபெறும்
நவராத்திரி வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ம் ஆண்டு யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் நடாத்தப்பட்ட தமிழின்பக்கண்காட்சியில் மாவட்டத்தின் சிறந்த சனசமூக நிலையத்ததை தெரிவு செய்யும் போட்டிக்கு தோற்றி முதலாவது இடத்தை பெற்றமைக்காக வழங்கப்பட்ட வெள்ளிச்சுருள் கேடயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



VALVETTITURAI URBAN COUNCIL

LOCAL GOVERNMENT WEEK

2008

*This Certificate is awarded to* Kanapathy Padippaham

*of* Nediyakadu, Valvettiturai *for Securing* First (1st)

*place in* Management Competition *held at Valvettiturai on* 10th *July* 2008.

Secretary
Urban Council
Valvettiturai

Regional Assistant Commissioner
of Local Government
Jaffna

2008ம் ஆண்டு உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் முதலாமிடத்தினை பெற்றமைக்கான சான்றிதழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின்பக் கண்காட்சி - '94

## உள்ளூராட்சித் திணைக்களம் - யாழ்ப்பாணம்

## சான்றிதழ்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1994 அக்டோபர் 15 முதல் 18-ஆம் நாள் வரை நடைபெற்ற "தமிழின்பக் கண்காட்சி 94" ஐ முன்னிட்டு நடாத்தப்பட்ட பல்துறைப் போட்டிகளில் ~~திரு / திருமதி / செல்வி~~ தலைவர், கணபதி படிப்பகம், வல்வெட்டித்துறை அவர்களுக்கு ...சிறந்த சன சமூக நிலையத்திற்... காகப் பாராட்டி இச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
18-10-1994

பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்கள்
இணைப்பாளர் - கண்காட்சிக் குழு.

**1994ம் ஆண்டு யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆனையாளரினால் நடாத்தப்பட்ட தமிழின்பக்கண்காட்சியில் மாவட்டத்தின் சிறந்த சனசமூக நிலையத்ததை தெரிவு செய்யும் போட்டிக்கு தோற்றி முதலாவது இடத்தை பெற்றமைக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1977ம் ஆண்டு படிப்பகத்தினால் நடாத்தப்பட்ட சென்ஜோன்ஸ் படையணி பயிற்சி நெறியை நிறைவு செய்தமைக்காக திரு.ந.விநாயகமூர்த்தி அவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1993ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட 39 வது கவிஞன் கையெழுத்துச் சஞ்சிகையின் அட்டைப்படம்

பொருளாதாரத்தடை நேரம் : மண்ணெண்ணை விலை...

கொழும்பில் : 1 லீட்டர் 13.00 ரூபா

குடாநாட்டில் : 1 லீட்டர் 220.00 ரூபா

அந்நாளைய இளைய ஓவியன் : செல்வன்.ச.வாசனின் அட்டைப்படம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 இல் நடைபெற்ற பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் வல்வையின் சிறந்த எழுத்தாளர்களும், ஆசிரியர்களுமான திரு.அப்பாத்துரை மாஸ்டர் மற்றும் திரு.அதிரூபசிங்கம் மாஸ்டர் ஆகியோர் நடுவர்களாக...









2011ம் ஆண்டு படிப்பகத்தின் 44வது ஆண்டு விழாவில் வல்வை மண்ணை சேர்ந்த திரு.சு.வெற்றிவடிவேல் அவர்களுக்கு, அவரின் கல்வி பணியை பாராட்டியும், திரு.இ.ஞானசுந்தரம் அவர்களுக்கு, அவரின் ஆன்மீகப் பணியை பாராட்டியும் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்.தெ.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஞாபகார்த்தமாக 2009 இல் பாலர் பாடசாலைக்கு அவரது குடும்பத்தினரால் கணனி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்ட பொழுது.





நெடியகாடு அபிவிருத்திச் சபையின் நிதி அனுசரணையுடன் 2011.07.16 அன்று கணனி மற்றும் தொலைக்காட்சி ஊடான ஆங்கிலக் கல்வியூட்டல் ஆரம்பித்து வைக்கப்பட்ட தருணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடியகாடு
அபிவிருத்திச்
சபையினால் பாலர்கள்
விளையாடி
மகிழ்வதற்கென
அன்பளிப்புச்
செய்யப்பட்ட துள்ளும்
கோட்டை




கணபதி பாலர்
பாடசாலையின்
முதலாவது
ஆசிரியையான
திருமதி.து.தயாநிதி
அவர்கள் 2016 ஆம்
ஆண்டு பாலர்
விளையாட்டுப்
போட்டியில் கலந்து
சிறப்பித்த பொழுது.





கடந்த 10 வருடங்களாக பல வழிகளில்
கணபதி படிப்பகத்திற்கும், கணபதி பாலர்
பாசாலைக்கும் சேவையாற்றிய
திருமதி.மைதிலி பால்ராஜ் 2015 ம் ஆண்டு
பாலர் விளையாட்டுப் போட்டியில்
வெற்றிபெற்ற பாலர்களுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



46வது
ஆண்டுவிழாவும்
பாலர்
தினவிழாவும்
– 2013



பாலர்களின்
ஆக்கக்
கண்காட்சி
– 2015



கால் கோள்
விழா– 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலர்களின் உடற்பயிற்சி - பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி - 2015



பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி - 2016 வினோதஉடைப் போட்டி



பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி - 2017 விருந்தினர் வரவேற்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



17.09.2017 அன்று யாழ் மாவட் ரீதியில் நடைபெற்ற மழலைகள் விளையாட்டு விழாவில் பங்குபற்றி முதலாம் இடத்தினைப்பெற்ற பாலர் அணியினரும் அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட ஆசிரியைகளும்.





2017 ஆசிரியர் தின விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கணபதி பாலர் பாடசாலையின் தோற்றம்

18.05.2017 முதல் இம்மலர் அச்சேறும் வரையில்.....



18.05.2015 அன்று காணி கொள்வனவு செய்யப்பட்ட போது



24.09.2015 அன்று சுற்று மதில் வைக்கப்பட்ட நிலையில்



25.10.2015 அன்று நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



07.05.2016 அன்று அத்திவாரம் மற்றும் தூண்கள் இடப்பட்ட நிலையில்



04.08.2016 அன்று முதலாம் தளமிடுவதற்குத் தயாரான நிலையில்



24.11.2016 அன்று இரண்டாம் தளமிடும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



14.04.2017 அன்று பாலர் பாடசாலைக்கு மாபிள் பதிக்கப்பட்ட நிலையில்



21.04.2017 அன்று பாலர் பூங்கா வடிவமைப்பு ஆரம்ப வேலைகள்



இன்றைய நிலையில் (19.11.2017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சனசமூக நிலையங்களின் வகிபாகம்

ந.அனந்தராஜ் B.A.(Hons.) ,M.A

Dip-In-Edu. ,Dip-In-Journalism, SLPS, SLEAS

வல்வெட்டித்துறையில் கடந்த 50 வருடங்களாக கல்விப்பணி, வாசிப்புத்திறன் விருத்தி, கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு மற்றும் கலை இலக்கியப் போட்டிகள் போன்ற சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்துவரும் நெடியகாடு கணபதி படிப்பகம் 2017 ஆம் ஆண்டு தனது பொன்விழாவைக் கொண்டாடுகின்றது. பல சமூக சேவையாளர்களின் அர்ப்பணிப்புடன் சிறப்பாக இயங்கிவரும் கணபதி படிப்பகம், தனது 51 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்து இன்னுமொரு புதிய பரிமாணத்தை எடுத்துவைக்கின்றது.

அந்த வகையில் வல்வெட்டித்துறையில் பல சனசமூக சேவாநிலையங்கள் இயங்கிவருகின்ற போதிலும், சனசமூகநிலையங்களின் வகிபாகம், அவை சமூகத்திற்கு எந்தெந்தவழிகளில் சேவையாற்றலாம் என்ற விழிப்புணர்வு குறைவாக இருக்கின்றது. கணபதி படிப்பகம் வருடா வருடம் பொதுக் கூட்டங்களை நடாத்தி புதியவர்களையும் உள்வாங்கி மிகச் சிறந்த பணிகளை ஆற்றிவருகின்றது. அவை போன்றதான சிறந்தசேவைகளை ஆற்றுவதற்கு ஒவ்வொரு சனசமூகநிலையங்களும் முன்வரவேண்டும்.

பிரதேசரீதியாகச் செயற்பட்டுவரும் உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில், அவற்றின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை வழிகாட்டலின் கீழ் செயற்படுகின்றனவும், பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவையுமானநிறுவனங்களாக சனசமூகநிலையங்கள் உள்ளன. இவைஅந்தந்த உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் வழிகாட்டலின் கீழ் இயங்குகின்றன.

### சனசமூகநிலையங்கள்என்றால்என்ன?

ஒரு கிராமத்தில் வாழும் சமூகங்களிடையே பயன்தரக்கூடிய பல்வேறு சமூக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் அவர்களிடையே ஒரு கூட்டிணைப்பை ஏற்படுத்தி கிராம அபிவிருத்தியை முன்னெடுக்கும் நிறுவனமயப்படுத்தப்பட்ட சமூகம்சார் அமைப்புக்களாக சனசமூகநிலையங்கள் விளங்குகின்றன.

"கூடுதல், பகிர்தல், அறிதல், விளையாடுதல் என்பன போன்ற சமூகத்தின் தேவைகள் பலவற்றை பூர்த்தி செய்வதற்காக நிறுவப்படும் ஒரு சமூக நிறுவனமே சனசமூகநிலையம் ஆகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூகநிலையங்கள்என்பன, "ஒரு குறிப்பிட்ட இடத்தில் நெருங்கிச் சேர்ந்து வசிக்கும் பல குடும்பங்கள் தமக்குள் எண்ணங்கள், குறிக்கோள்கள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறைகள், தொழில்கள், போன்ற ஏதாவது ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ சில பொதுப் பண்புகளைக் கொண்டிருக்கும். குடும்ப அமைப்பில் உள்ள உறுப்பினர்கள், சேவை மனப்பான்மையுடன் தமக்குள் ஒன்று சேர்ந்து தமது மக்களுக்குச் சேவை புரிவதற்கென உருவாக்கப்பட்ட நிலையங்களே சனசமூகநிலையங்களாகும்' என்றும்

"மனிதர் ஒருவருக்கொருவர் உதவுவதற்கும், உறவு கொள்வதற்கும், ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் தமக்குள் நேரடித் தொடர்புகளைப் பேணுகின்றவையும் அந்தக்கிராமத்தில் கல்வி, பண்பாடு போன்றவற்றின் மீதான விழிப்புணர்வை உருவாக்குவதற்குமான சிறிய எண்ணிக்கை உடைய உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பே சனசமூகநிலையங்கள்" என்றும் அவற்றின் குறிக்கோளின் அடிப்படையில் வரையறை செய்யலாம்.

பொதுவாக சனசமூகநிலையங்கள் இலாப நோக்கமற்ற, மதம், சாதி, பிரதேசம், அரசியல் வேறுபாடு போன்ற சார்புகளற்ற உள்ளூர் மயப்படுத்தப்பட்ட உள்ளூரவர்களால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களாகும். இவற்றின் சேவைகளின் அடிப்படையில் சமயம் சார் நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், வர்த்தக நிலையங்கள் போன்ற அமைப்புக்களில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கலாம்.

சனசமூக நிலையங்களை நிர்வகிப்பதற்காக உள்ளூராட்சித்திணைக்களம், பிரதேசமட்டத்தில் செயற்படும், உள்ளூராட்சி மன்றங்களினூடாக ஒரு தொகை பணத்தை மானியமாக வழங்கிவருகின்றது. அவற்றின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை, செயற்படும் எல்லையின் அளவு என்பவற்றின் அடிப்படையில் இத் தொகையானது, ருபா 4000.00 தொடக்கம் ருபா 5000.00 வரை வேறுபடலாம்.

**சனசமூகநிலையங்களின் பணிகள்**

- கிராமிய மட்டத்தில கல்வித்தர மேம்பாட்டைப் பேணுவதில், முன்பள்ளிகள், அறநெறிப் பாடசாலைகள போன்றவற்றைச் செயற்படுத்துதல்.
- மக்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்த படிப்பகங்களை நடாத்துதல்.
- முதியோர் கல்வி மற்றும் நடைமுறை நிகழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- சூழல் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் ஆகியவற்றைப் பேணுவதில் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
- மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்கி தேவைக்கேற்ப நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மரநடுகைத் திட்டங்களை முன்னெடுத்தலும் பேணுதலும்.
- வீதி விளக்குகளைப் பொருத்துவதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் மக்களுக்குத் தெளிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல்.

போன்ற பல்வேறு மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உள்ளூராட்சி நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாக இவை செயற்படுகின்றன.

**முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டில் சனசமூகநிலையங்கள் ஆற்றிவரும் பணிகள்:-**

சனசமூகநிலையங்கள் பலவற்றினால் 4-5 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக முன்பள்ளிகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவை பாடசாலைக் கல்விக்கான ஒரு அடித்தளத்தை இடக்கூடிய அளவுக்கு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றன. கல்வி மேம்பாடு தொடர்பாகவும், மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் பின்வரும் பணிகளை சனசமூகநிலையங்கள் ஆற்றிவருகின்றன:

1. முன்பள்ளிகள் இயங்குவதற்கான காணி மற்றும் கட்டிடங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
2. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான தளபாட வசதிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள், நூல்கள், விளையாட்டு உபகரணங்களை வழங்கி பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டை முன்னெடுத்தல்.
3. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வடக்கு மாகாண சபைமூலம் வழங்கப்படும் உதவித் தொகைக்கு மேலதிகமாக மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குதல்.
4. மாதாந்த பெற்றோர் சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தி, பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தி மற்றும் அடைவு மட்டம் தொடர்பாக மீளாய்வு செய்தல்
5. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான சத்துணவு, பால் போன்றவற்றை சில சனசமூநிலையங்கள் வழங்கிவருகின்றன.
6. பிள்ளைகளினதும், ஆசிரியர்களினதும் செயற்பாடுகளை ஊக்கிவிக்கும் வகையில் கண்காட்சிகள், விளையாட்டுப்போட்டிகள், மாதிரிச்சந்தைகளை ஒழுங்கு செய்தல்.

**வாசிப்புத் திறன் விருத்தியை வளர்ப்பதற்கான வேலைத் திட்டங்கள்:**

குறித்த சனசமூகநிலையங்களின் நுகர்வோர் உள்ள பிரதேசங்களில் வாழ்கின்ற பொதுமக்களிடையேயும், மாணவர்களிடையேயும் வாசிப்புத்திறன் அதிகரிக்கும் பொழுது பிள்ளைகளின் கற்றல் மேம்பாடு மேலும் வினைத்திறனுடையதாகும். அதேவேளை பொதுமக்களிடையே ஆக்க இலக்கியத்தைப் படைப்பதற்கான ஆற்றலும் வளர்க்கப்படும், அந்த வகையிலேயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொது மக்களின் வாசிப்புத் திறன் விருத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு சனசமூகநிலையங்களும் "படிப்பகங்கள்" அல்லது "நூலகங்கள்" என்பவற்றை நடாத்திவருகின்றன.

2. வாசிப்புத்திறனை மேம்படுத்தும் நோக்கில் செய்தித்தாள்கள், சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்து, பொதுமக்களின் பாவனைக்குக் காட்சிப்படுத்தல்.

3. நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்றுவாசிப்பதற்கேற்ற வகையில், இரவல் வழங்கும் பணியை மேற்கொள்ளுதல்.

4. சில சனசமூகநிலையங்கள் தமது கட்டுபபாட்டின் கீழ் உள்ள படிப்பகங்களினூடாக மாலை நேர முதியோர் கல்வித்திட்டங்கள், விவரணப்படக்காட்சிகள், மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஒழுங்கு செய்துவருகின்றன.

5. ஆக்க இலக்கியத்திறன், மொழித்திறன் விருத்தியை மேம்படுத்துவதற்காக மாணவர்களிடையேயும், வளர்ந்தவர்களிடையேயும் சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை வருடாவருடம் நடாத்தி பரிசளிப்பு விழாக்களையும் நடாத்திவருகின்றன.

6. பொதுமக்களிடையே ஆன்மீக உணர்வையும், ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதற்காக வருடாவருடம் கல்வித் தெய்வத்திற்கு நன்றிகூறும் வகையில் "வாணிவிழா" போன்றவற்றை வருடா வருடம் நடாத்திவருகின்றன. இந்தக் காலப் பகுதியில் சிறுவர்களிடையே கல்வி தொடர்பான முக்கியத்துவமும், நல்லொழுக்கத்துடன் வாழவேண்டுமென்ற முக்கியத்துவத்தையும் உணர்த்தப்படும்.

ஆனால், இன்று பல சனசமூகநிலையங்கள் தமது இலக்குகளை இழந்து பாதை தவறிச் செல்வதைக் காணலாம். பின்வரும் வகைகளில் அவற்றின் செயற்பாடுகள் காரணமாக அத்தகைய சனசமுகநிலையங்கள் பொதுமக்களிடம் இருந்தும் அந்நியப்படும் தன்மையே காணப்படுகின்றது. உதாரணமாகப் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டலாம்.

- பல சனசமுகநிலையங்கள் மூடப்பட்டுக் காணப்படுதல்
- செயற்குழுவில் உள்ள பதவிகளைப் பெற்ற பின்னர், செயற்பாடுகளில் அக்கறையின்றி இருத்தல்.
- மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த முன்வராமை.
- கூட்டம் கூட்டப்பட வேண்டிய காலம் கடந்தும், அவற்றைக் கலைத்து புதிய செயற்குழுவைத் தெரிவு செய்யநடவடிக்கை எடுக்காது, வருடக்கணக்காகக்காலத்தைக் கடத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் கணபதி படிப்பகம் குறித்த காலப்பகுதியில் தமது வருடாந்த பொதுக்கூட்ட்ததை நடாத்தி வருவதுடன், உரியமுறையில் கணக்கறிக்கையையும் வெளியிடுவதால், பொதுமக்களின் நம்பிகைக்குரியதாக விளங்குகின்றது.

மக்களுடன் நேரடியாகத் தொடர்புபட்ட நிறுவனங்கள் என்ற வகையில் சனசமூக நிலையங்கள் மேலும் பின்வரும் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வரவேண்டும்

1. அயலில் உள்ள பாடசாலைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி குறித்த சனசமூகநிலையங்களின் செயற்பாட்டு எல்லைக்குள் இருக்கும் மாணவர்களின் கல்வி அடைவு தொடர்பாகக் கலந்துரையாடி, மாணவர்களின் முன்னேற்றங்ளை மீளாய்வு செய்தல். ஏனெனில் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சமூகமும் பாடசாலையும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டே கல்வி அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான ஒரு சிறந்த ஊடகமாக விளங்குவதே சனசமுக நிலையங்களாகும்.

2. இனங்காணப்பட்ட கல்விப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மேம்பாடடையச் செய்யவும், மாலை நேர சுயகற்றல் மற்றும் வழிகாட்டல்களுக்கான நேரத்தையும் இடத்தையும் ஒதுக்கிக் கொடுத்தல்.

3. பொதுப் பரீட்சைகளுக்கான கருத்தரங்குகளை படிப்பகங்களினூடாக நடாத்துதல்

4. தொற்று நோய்த்தடுப்பு நடவடிக்கைகள், சுகாதார நடவடிக்கைகள், நாய்கள் மற்றும் கால் நடைகளுக்கான தடுப்பூசிகளைப் போடுவதற்கான ஏற்பாடுகளை உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஏற்படுத்திக் கொடுத்தல்.

5. பெண் வாசகர்கள் பயனடையக்கூடிய வகையில் அவர்களுக்கென மாலை நேரங்களில் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக்கொடுத்தல்.

ஒரு கிராமமானது ஒன்றிற்கு மேற்பட்ட பல்லின சமுதாயங்களை உள்ளடக்கியிருப்பதனால், இவர்களிடையே காணப்படும் சமூக பொருளாதார, கலாச்சார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பிரதேச உணர்வுகள் போன்றவை காரணமாக "கிராம அபிவிருத்தி" என்ற எண்ணக்கரு விருத்திக்குச் சரியான பங்களிப்புச் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன. எனவே குடும்பத்திற்கு அடுத்ததாக சுற்றுப்புற சமுதாயத்தினின்றும் தோற்றம் பெறும் சனசமூகநிலையங்கள் கிராம அபிவிருத்திக்கான தள மையமாக உருவாக்கப்படக்கூடிய வாய்ப்பு உண்டாகிறது. இதனூடாக மக்களிடையே புரிந்துணர்வு, ஒருவரை ஒருவர் மதித்தல், விட்டுக்கொடுப்பு போன்ற உயர் மட்டச் சிந்தனைகள் பொதுமக்கள் மத்தியிலே உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்விழா சிறப்புப் பாடல்

*திரு.பா.உதயகுமார்*
*(தங்கத் தமிழன்)*

*பல்லவி*

அறுபத்தேழாம் வருடமதில் மலர்ந்தது - இன்று
அகவையிலே ஐம்பதாக உயர்ந்தது
அறிவுக்கடலைத் தன்னகத்தே வைத்து - அதை
சிறுக சிறுக யாவருக்கும் பகிர்ந்தது

அநுபல்லவி

மூட்டைதூக்கிப் பணம்திரட்டித் திட்டம் தீட்டினார் - அறிவுக்
கோட்டை எங்கள் படிப்பகத்தை உயர்த்திக்கட்டினார்
கலைஞர்களும் நாடகத்தால் காசுதிரட்டினார் - எங்கள்
இளைஞர்களும் வியர்வைசிந்தி உறுதிகூட்டினார் (அறுபத்தேழாம்)

சரணம் : 1

கணபதியின் பெயரோடு அமைந்தது - எமக்குக்
கல்விஞானம் தினம்தினமும் தந்தது
கணப்பொழுதும் எம்மோடு இணைந்தது - எங்கள்
அறிவுக்கண்ணை அற்புதமாய் திறந்தது
அள்ளிஅள்ளிப் பலகலைகள் வளர்த்தது - பாலர்
பள்ளியினைத் தன்னுடனே இணைத்தது
கலைமகளின் இருப்பிடமாய் இருந்தது - இங்கே
அலைமகளின் செல்வம்கூடத் தவழ்ந்தது (அறுபத்தேழாம்)

சரணம் : 2

ஆழ்ந்தநல்ல அன்புடனே சேவைசெய்து - அன்றே
அரசுஉன்னை முதலிடமாய் தெரிவுசெய்தது
யாழ்ப்பாணத்து நூலகத்தை வரிசைப்படுத்தினார் - அங்கே
உயர்ந்த இடத்தில் உன்னைவைத்து அழகுபடுத்தினார்
பொன்விழாவின் பொன்மகனே வாழ்கவே
உந்தன் கண்மணிகள் வாழ்த்துகின்றோம் வாழ்கவே
இன்னும்பல சந்ததிகள் காணவும் - எங்கள்
மார்க்கண்டேய கணபதி படிப்பகம்.

*இசை : வி.டினேஸ்கரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைபெற்றுக் கொண்டிருக்கும் புதிய கணபதி பாலர் பாடசாலை கட்டடப்பணிகள்...

வல்வை நெடியகாடு கணபதி பாலர் பாடசாலையில் கல்விகற்கும் பாலர்களின் எண்ணிக்கை அதிகரிப்பாலும் மற்றும் நவீன கற்றல், கற்பித்தல் முறைகளிற்கேற்ப செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் தற்போதைய கட்டடத்தில் இடப்பற்றாக்குறை நிலவுகின்றது. (தற்போதைய கட்டடம் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் குத்தகை அடிப்படையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது) இதனைக் கருத்திற் கொண்டு பாலர் பாடசாலைக்கான புதிய கட்டடம் ஒன்றினை நிர்மானிக்கும் முகமாக நெடியகாடு அபிவிருத்திச்சபையின் நிதி மூலம் நான்கு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இக் காணி நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வடமேற்கு மூலையில் பிரதான வீதியோரமாக அமைந்துள்ளது.

மேலும் இக்காணிக் கொள்வனவிற்னான முழுநிதிப்பங்களிப்பையும் (பதிவுக்கட்டணம் உட்பட) நெடியகாடு அபிவிருத்திச்சபையின் அங்கத்தவர்களான லண்டன், அவுஸ்திரேலியா, கனடா, சுவிஸ், ஜேர்மன், டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வாழும் நெடியகாடு சமூகத்தினரதும், நலன்விரும்பிகளினதும் சார்பில் நெடியகாடு அபிவிருத்திச் சபையினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கணபதி படிப்பகத்தின் நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள் மற்றும் கணபதி பாலர் பாடசாலை பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்புக்கள் மற்றும் எமது சமூகத்தின் கல்வி மற்றும் கலை காலாச்சாரத்தினை மேம்படுத்தும் நோக்கத்திலும், எதிர்காலத்தில் கணபதி படிப்பகமும், கணபதி பாலர் பாடசாலையும், வெளிநாட்டு உதவிகள் இன்றி தமது சேவையினை எதுவித தடையுமின்றி சுயமாக முன்னெடுப்பதற்கு ஏதுவாக ஓர் சிறந்த முதலீடாக பாலர் பாடசாலைக் கட்டடத்துடன் கூடிய மண்டபத்தினையும் அமைப்பதற்கான அனுசரணையினை நெடியகாடு அபிவிருத்திச் சபை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2015.10.25 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, கடந்த தைப்பூச நன்நாளில் (24.01.2016) முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் கணபதி பாலர் பாடசாலையின் புதிய கட்டடப் பணிகளில் தற்போது இறுதிக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது எதிர்வரும் தைப்பூச நன்னாளில்(31.01.2018) திறப்புவிழாவினை நடாத்த எல்லாம்வல்ல நெடியம்பதியான் துணைபுரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *வாசிப்பு மனிதனைப் பூரணமானவனாக்கும்.*

**பா. மதுரா**
**கீழ்ப்பிரிவு - கட்டுரைப்போட்டி முதலாமிடம்**
**யா/கம்பர்மலை மகாவித்தியாலயம்**

விநோதமான புவிதனில் வாழும் மனிதர்களுக்கு அறிவு என்பது மிகவும் இன்றியமையாததாகும். இவ் அறிவினை மனிதர்கள் பெற்றுக்கொள்வதற்கு சாலச்சிறந்த ஒரு ஊடகமாக நூல்கள் திகழ்கின்றன. கடவுள் உறையும் இடம் திருக்கோயில் எனில் புத்தகங்கள் உறையும் இடம் அறிவுத் திருக்கோயில்கள் ஆகும். நூல்கள் மனிதனை வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றன. நூல்கள் மனிதர்களின் நல்ல நண்பர்கள் ஆகும்.

இன்று புவியினில் பல நூலகங்கள் உள்ளன. இவ் நூலகங்களிலிருந்து நாம் நூல்களை இரவலாக வாங்கிப் படிக்கலாம். பணம் செலுத்தி நூல்களை வாங்கும் அளவிற்கு வசதிஅற்றவர்களுக்கு இரவல் வாங்கிப் படிக்கும் முறையானது பெரிதும் உதவுகின்றது. தேனீக்கள் எவ்வாறு தேனைச் சேர்த்து ஒரு தேன் கூட்டை அமைக்கின்றனவோ, அதே போல மனிதனானவனும் அருமையான நூல்களைத் தேடித்தேடிக்கற்று தமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மனிதர்களாகிய நாம் பல நூல்களை வாங்கி வீட்டில் அடுக்கி வைத்தால் மட்டும் போதாது, அதனை வாசித்து, அதிலுள்ள நல்லவிடயங்களை நாம் அறிந்து கொள்ளவேண்டும். பெறற்கரிய நூல்கள் பல இருந்தாலும், அதனை வாசிப்பதனூடாகவே மனிதனானவன் தனக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றான்.

நாம் நமது ஓய்வான நேரங்களில் பல்வேறுபட்ட பொழுதுபோக்குகளில் ஈடுபடுகின்றோம். தொலைக்காட்சி பார்த்தல், முத்திரை சேகரித்தல், வீட்டுத்தோட்டம் அமைத்தல், மீன்கள் வளர்த்தல் போன்றன அவ்வாறான சில பொழுது போக்கு அம்சங்களாகும். ஆனால் நமது ஓய்வினை மிகவும் பயனுள்ள வகையில் மாற்றிக்கொள்ள நல்ல நூல்களை வாசித்தலை ஒரு பொழுதுபோக்காக நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

நூல்களை வாசித்தல் என்று கூறும்போது.... அந்நூல்கள் சிறுகதையாகவோ, நாவல்களாகவோ, காப்பிய நூல்களாகவோ, நாடக நூல்களாகவோ, நமது பாடம் தொடர்பான நூல்களாகவோ இருக்கலாம். இப்புவியில் பல நூல்களுள்ளன. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அடிப்படையில் வேறுபடுத்தப்படுகின்றன. மொழி அடிப்படையில் தமிழ், ஆங்கிலம், சிங்களம், பாளி போன்ற பலமொழி அடிப்படையான நூல்களுள்ளன. இன அடிப்படையில் தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள், பறங்கியர்கள் போன்ற இனத்தவர்களுடைய கலாச்சாரம் பற்றி கூறும் நூல்களுள்ளன. சிறியோர், முதியோர்கள் என்ற அடிப்படையில் நூல்கள் வேறுபடுத்தப்படுகின்றன.

இவ்வாறு பலவகையான நூல்கள் காணப்படினும் நாம் அவற்றை வாசிப்பதனூடாக நமது அறிவு வளர்ச்சி அடையுமே தவிர, ஒரு பொழுதும் குறைவடைவதில்லை. ஒரு மனிதனானவனுக்கு கல்வி அறிவு என்பது இன்றி அமையாததாகும். இக்கல்வி அறிவைப் பெற்ற ஒருவனால் மட்டுமே தனது வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளிற்கு சிறப்பாக முகங்கொடுத்து தனது வாழ்க்கையை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்ல முடியும். இக்கல்வி அறிவைப் பெறுவதற்காக முதலில் எழுத்துக்கள் கற்பிக்கப்படும் பின்னர் இவ் எழுத்துக்களைத் தொகுத்து சொற்கள், பின் சொற்களைத் தொகுத்து வாக்கியங்கள் இவ்வாறு ஒரு மனிதனானவனுக்கு எழுத்துக்களை உச்சரித்து எழுதி வாக்கியமாக்கி வாசிக்கக் கற்பிக்கப்படும்.

நாம் அறிவைப்பெற வேண்டுமாயின் நூல்களை வாசிக்கவேண்டும். மனிதனானவன் வாசிப்பதனூடாக தனக்கு வேண்டிய கல்வி அறிவினைப் பெற்றுக்கொள்கின்றான். கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு என்ற கூற்றானது விளக்கிநிற்பது யாதெனில் ஒரு மனிதனானவன் கற்கவேண்டியது உலகம் போன்ற அளவு. அதாவது இந்த உலகமானது எவ்வாறு பரந்துபட்டதாகக் காணப்படுகின்றதோ அதைப்போன்றது கல்வி. இப் பரந்த கல்வியில் நாம் இதுவரை கற்றது ஒரு கைமண்ணளவு அதாவது மிகவும் சிறிய அளவு.

ஒரு மனிதனானவன் ஒரு நூலை வாசித்து அதிலுள்ள விடயங்களை அறிந்தால் மட்டும் போதாது அக்கற்ற கல்விப்படி ஒழுகவேண்டும். அப் பொழுதுதான் மனிதன் தான் கற்ற கல்வியின் பெறுபேற்றை முழுமையாக அடைகின்றான். இதனை வள்ளுவப் பெருமான் தனது திருக்குறளில் கூறுகையில் ***"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக"*** என்றார். ஒருவன் கல்வியினை நன்கு கற்றால் மட்டும் போதாது. கற்ற நெறிப்படி ஒழுகவேண்டும் என்பதே அதன் பொருளாகும்.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பல்வேறுபட்ட தொழில்நுட்ப சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி போன்றன மிகவும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. இன்றைய மாணவர்களும் அறிவுக்கு விருந்தாக அமையும் நல்ல நூல்களை வாசிப்பதை விடுத்து தொலைக்காட்சி பார்த்தல், தொலைபேசியில் நீண்டநேரம் உரையாடல் தொலைபேசியிலுள்ள விளையாட்டுக்களை விளையாடுதல் போன்றவற்றிலும் ஈடுபடுகின்றனர். அது மட்டுமன்றி கணினியில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையற்ற விடயங்களைப் பார்க்கின்றனர். அச் சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டது. மனிதனுடைய வேலைகளை இலகுவாக்கவே ஆகும். இச்சாதனங்களை நாம் பயன்படுத்தத்தான் வேண்டும். ஆனால் எதுவும் அளவுடன் இருத்தல் வேண்டும். ***"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு"*** என்ற கூற்று நமக்கு இதனை உணர்த்துகின்றது.

நல்ல நூல்கள் நல்ல ஆசான்களுக்குச் சமனாகும். ஆசான்கள் நமக்கு நல்ல கல்வியை போதிக்கின்றனர். நாம் நூல்களை வாசிப்பதனூடாக நல்ல கல்வியைப் பெற்றுக்கொள்கின்றோம். இவ்வாறு நூல்களை வாசிப்பதனூடாக உயர்ந்த மகான் ஒருவரை நாம் பார்ப்போமாயின் அவர் ஆபிரகாம் லிங்கனே ஆவார். இவரது சிறுவயதில் இவர் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. வறுமையே மிகவும் மோசமான சவாலாக இருந்தது. இருப்பினும் இவர் பத்திரிகை விற்று அதில் வரும் பணத்தில் தனது குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றினார். அதுமட்டுமன்றி தனது அலுவலக நண்பர்களிடமிருந்து நூல்களைப் பெற்று தனது அறிவை வளர்த்துக்கொண்டார். அதுமட்டுமன்றி எதிர்காலத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆகி நாட்டை நல்முறையில் ஆட்சிபுரிந்தார்.

இவரது இந்த வெற்றிக்குப் பின்னுள்ள முக்கிய காரணமாக புத்தகங்களை வாசிக்கும் பழக்கமே அமைந்துள்ளது. ஒரு மனிதன் புதிய புதிய நூல்களைத் தினந்தினம் வாசிப்பானாயின் அவன் அனுதினமும் தனது அறிவை வளர்த்துச் செல்கின்றான் என்பதே இதன் பொருளாகும். ஒரு மனிதன் வாசிப்பதனூடாக தனது வாழ்க்கைக்குத் தேவையான பூரண அறிவைப் பெற்றுக்கொள்கின்றான்.

***"பாடை ஏறினும் ஏடது கைவிடேல்"*** எனும் முதுமொழியானது புலப்படுத்துவது யாதெனில், ஒரு மனிதனானவன் இறக்கும் வரையும் நூல்களை வாசித்துத் தமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும். ***"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"*** என்ற பழமொழிக்கு இணங்க மனிதனானவனின் அருமையான இளமைப்பருவத்தில் உள்ள மாணவர்களாகிய நாம் நல்ல நூல்களை வாசித்து நமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதனால் ஒரு மனிதன் பூரணமானவனாகின்றான். எனவே நாம் நல்லநூல்களை வாசித்து நமது அறிவை வளர்த்துக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா கலை இலக்கியப்

# போட்டிகளில் முதலாம் இடம் பெற்ற

# ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் யதார்த்தமும் அம்மாவும்
## ("தாயிற் சிறந்த கோவில் இல்லை")

ம.மலர்நிலா

**கீழ்ப்பிரிவு - சிறுகதைப் போட்டி முதலாமிடம்**

**யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்**

தாய் என்பவள் இச்சமுதாயத்திலே போற்றப்படவேண்டியவள் மட்டுமல்ல, மதிக்கப்படவேண்டியவளும் ஆவாள். ஒருவரை ஆக்குவதும் பெண், அழிப்பதும் பெண் என்று முன்னோர்கள் கூறுவார்கள். அதில் ஒருவனை ஆக்குபவளே தாய் ஆவாள். நடந்து செல்லும் மனிதன் தொடக்கம் நகர்ந்து செல்லும் விலங்குவரை தமக்கு ஏதும் துன்பம் நிகழ்ந்தாலோ இன்பம் நிகழ்ந்தாலோ "அம்மா" என்று தான் அழைப்பார்கள். பல தியாகங்களை செய்து தன்னை ஒரு மெழுகுவர்த்தியாகவும் பிள்ளைகளை சுடர்விடும் தீபமாகவும் நினைப்பவளே தாய் ஆவாள்.

நான் ஒரு பத்திரிகை பேட்டியாளர், என்னை வெளிநாட்டிலிருந்து வரும் ஒரு வைத்தியரை பேட்டி எடுக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி நானும் அவரை பேட்டியெடுத்தேன். "உங்கள் பெயர் என்ன" என அவரை கேட்டபோது, அவர் எனது பெயர் சண்முகதாஸ் என்றார். உங்களின் இந்த நிலைக்கு யார் காரணம் என்று கேட்டபோது, அவர் சொன்னவார்த்தை என் கல் நெஞ்சையும் கரைத்துவிட்டது. அவர் என் இந்த நிலைக்கு காரணம் எனது தாய் தான் என்றார். ஒருவனது வெற்றிக்கு பின் ஒரு பெண் இருப்பாள். ஆனால் என்வெற்றிக்கு பின் என் தாய் தான் உள்ளார் என சொன்னார். "உங்கள் தாய் எங்குள்ளார்" என்று கேட்டபோது அவர் தன் களங்கமில்லாத கண்ணினால் கண்ணீரை வடித்தார். அதிலிருந்தே நான் புரிந்து கொண்டேன்..... "உங்கள் வாழ்க்கை வரலாற்றை கூறுங்கள்" அப்போது அவர் தொடங்கினார்...... நாங்கள் ஆரம்பத்தில் மிகவும் பணக்காரராக இருந்தோம். ஆனால் எனது அப்பா எங்களை மறந்துவிட்டு இரண்டாவதாக மறுமணம் செய்தார். எனது அம்மாவும் அந்த இராட்சத தாடகை சித்தியும் அங்குதான் இருந்தார்கள். எனது அப்பாவும் அந்த தாடகையும் அம்மாவின் சொத்துக்களை பறிப்பதற்காகவே என் இரு தம்பிகளையும் கொடுமைப்படுத்தினர். எனது மூத்த தம்பியின் பெயர் தர்மதாஸ், இளையவனின் பெயர் துரைதாஸ், எனது அம்மாவின் பெயர் கஸ்தூரி ஆகும். இறுதியாக எங்களை கொடுமைப்படுத்துவதை பொறுக்கமுடியாத அந்த தெய்வம், சொத்துக்களை தூக்கி எறிந்துவிட்டு எங்கள் மூவரையும் அழைத்து வந்தார். எங்களை படிக்கவைக்க மிகவும் சிரமப்பட்டார். எங்களுக்காக தன்னை வருத்தினார். இரவு பகல் பாராது உழைத்தார். காலையில் வீட்டுவேலைக்கும் இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயாவேலைக்கும் சென்றார். எங்களை படிப்பித்தால் தான் வாழலாம் என்று புரிந்து கொண்டார். கல்வியே சமுதாயத்தின் சிறந்த கூர்மையான கத்தி என்று புரிந்து கொண்டார். ஒருவழியாக எங்கள் மூவரையும் படிப்பித்து முடித்தார். என்னை வைத்தியராகவும், தர்மதாஸை வழக்கறிஞராகவும், துரையை பொறியியலாளராகவும் மாற்றினார். நாங்கள் பழையபடி வசதியாக மாறினோம். எங்கள் அம்மா எங்களுக்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுத்தார். அவரின் ஆசைப்படி நாங்களும் திருமணம் செய்து கொண்டோம். மூன்று மருமகளும் ஒன்றாக இருந்த எங்களை பிரித்து தனித்தனியாக சென்றனர். ஆலமரம் போல் இருந்த என் அம்மா சரிந்து போனார். கல்யாணம் நடந்தவுடன் மனைவியின் பக்கம் நிற்க வேண்டுமோ, என்னவோ தெரியவில்லை, ஒரு நாள் எனது அம்மாவிற்கும் மனைவிக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. அம்மா பொறுத்து பொறுத்து இயலாத கட்டத்தில் ஓங்கி எனது மனைவியின் கன்னத்தில் அடித்துவிட்டார். அப்போது எனக்கு கோபம் வந்து ***"போடி வெளியே வேலைக்கார நாயே"*** என திட்டிவிட்டேன். அம்மா பழையபடி அந்தக் குடிசை வீட்டிற்கு சென்றுவிட்டார். சொந்தக்காலில் நின்று உழைத்தார். யாரிடமும் இரங்கி நிற்கவில்லை. ஒருமுறை எனக்கு விபத்தில் ஒரு சிறுநீரகம் செயலிழந்து விட்டது அப்போது எனது மனைவியின் சிறுநீரகம் பொருந்திவிட்டது. ஆனால் அவளோ அதனைக் கொடுக்க மறுத்துவிட்டாள் தாயும், மனைவியும் ஒன்றாகிவிடுமா! அப்போது தான் எனது அம்மாவின் அருமை விளங்கியது, அவள் போல் வருமா? இத்தகவலை அறிந்த எனது தாய் தன்னிடமிருந்த ஒரு சிறுநீரகத்தை எனக்கு கொடுத்து, தன்னை மாய்த்துக்கொண்டாள். அம்மா என்பவள் பிள்ளைகளுக்கு அடைக்கலம் கொடுப்பவள் மட்டுமல்ல, பிள்ளைகளுக்காக உயிரையும் கொடுப்பாள், என அப்போது தான் எனக்கு புரிந்தது. அவள் இருந்த போது அவளினை ராணிபோல் பார்க்க முடியாத பாவி ஆகிவிட்டோம். அவள் இறந்த பின்னரே அவளின் அருமை புரிந்தது என்று சண்முகதாஸ் கூறினார். இதனைக் கேட்டவுடன் சுற்றியிருந்த அனைவரும் அழுதனர். அவர் இறுதியதாக சொன்னது, பிள்ளைகளே! எல்லா அம்மாவும் என் தாய்போல் தான் அவர்களை பார்ப்பது நம் கடமை தான் எனக்கூறினார்கள். அப்போது தான் என் அம்மாவின் அருமை எனக்கு தெரிந்தது. இதனை பத்திரிகையில் எழுதும் போது என் கண்ணிலிருந்து வந்தது வெறும் உப்புக்கலந்த கண்ணீர் அல்ல இரத்தக்கண்ணீர்.

**"தாயிற் சிறந்த கோயில் இல்லை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுயர்த்தும் கல்விக்காய் வாசி

பா.மதுரா
கீழ்ப்பிரிவு - கவிதைப் போட்டி முதலாமிடம்
யா/கம்பர்மலை வித்தியாலயம்

இப் புவியில் மனிதன் சிறப்பாய் வாழ
கல்வி எனும் அறிவுப் புதையல் அவசியமாம்.
கல்வி எனும் சொல்லில் மூன்றெழுத்தே உள்ளது
ஆனால் கல்வி எனும் சொல்லின் அர்த்தங்கள் பலவிதமாம்
கல்வி எனும் அறிவுப் புதையலை நாம் அடைய
நூல்கள் எனும் வழிகாட்டிகள் நமக்கு உதவுகின்றன
மனிதன் வாழ கல்வி அவசியமாம்
கல்வியைப் பெற நூல்கள் அவசியமாம்.

நூலகம் என்பது இனிய தேன்கூடாம்
அதிலுள்ள நூல்கள் ஒவ்வொன்றும் இனிய தேன்துளிகளாம்.
அவ் இனிய தேன்துளிகளை சுவைத்திட நமக்கு
வாசிப்பு எனும் கரண்டி அவசியமாம்
பெறற்கரிய நூல்கள் பல இருந்தாலும் அதனை
வாசித்தால் மட்டுமே பொருள் புரியும்
நாம் வாசித்தால் மட்டுமே நம் அறிவும் வளரும்.

நூல்கள் ஒவ்வொன்றும் பலவிதமாம் - அவை
மொழி, இன, வயது அடிப்படையில் வகைப்படுமாம்
சின்னஞ் சிறு பாலகர்களுக்கு வண்ண வண்ணமாய்
கதைப்புத்தகங்கள் வயதில் முதிர்ந்த மூத்தோருக்கு
மகிழ்ச்சிதரும் நாவல்கள், நூல்கள் பல
இருந்தாலும் மனிதன் வாசிப்பதால் அறிவு வளருமாம்.

நாம் கற்றகல்வி கை மண்ணளவாம்
கற்க வேண்டிய கல்வி இப் பாரிய உலகளவாம்.
கல்வி எனும் சமுத்திரத்தை மனிதன் கடக்க
வாசிப்பு எனும் கப்பலே உதவுகின்றது.
புத்தம் புதிய நூல்களை அனுதினமும் வாசித்தால்
மேடுபள்ள வாழ்க்கையில் சிறப்பாய் நாமும் வாழலாம்.

வாழ்க்கைக்குத் தேவையான கல்வியை
நல்ல நூல்களை வாசிப்பதனூடாகப் பெற்று
பெறற்கரிய மனிதப் பிறவியின்
பெரும் பயனைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விழுமியங்களைப் பேணுவதில் வாசிப்பின் முக்கியத்தவம்

**செ.ஆர்த்திகா**
**மேற்பிரிவு - கட்டுரைப் போட்டி - முதலாமிடம்**
**யா/வல்வைமகளிர் மகா வித்தியாலயம்.**

***"அரிது அரிது மானிடராதல் அரிது"*** என்றார் ஔவையார் அத்தனை சிறப்புமிக்கது மானிடப்பிறப்பு. இந்த மனிதப் பிறப்பிற்கு அர்த்தத்தை வழங்குவது கல்வியாகும். கல்வி ஒரு பெருங்கடலைப் போன்றது. அதில் பயணிப்பதற்கு வாசிப்பு எனும் படகு அவசியமே ஆகும். ***"வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்"*** என்றார் அறிஞர் பேக்கன். இதன் மூலம் வாசிப்பு வாழ்வுக்கு எவ்வளவு அவசியமானது எனவும் அறிந்து கொள்ளலாம். மனிதன் பல நூல்களை வாசிப்பதன் மூலம் நல்ல அறிவை வளர்த்துக்கொள்கின்றான் என்றால் அது மிகையாகாது. தற்போதைய உலகம் உள்ளங்கையளவுக்கு சுருங்கிவிட்டது என்றால் அது மிகையாகாது.

இந்த நவீன உலகிலே தற்போது வாசிப்பு பழக்கம் அருகிப்போய்விட்டது. எனவே அனைவரிடமும் வாசிப்புப்பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அது நம் சமதாயத்தின், நாட்டின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை புத்தகங்கள் நல்ல நண்பனுக்கு ஒப்பானது.

"பழகும் நண்பர்கள் மாறிடலாம்.
பழகும் நூல்கள் மாறிடுமோ?
பழகிப் பழகி நம்மனத்தை
பக்குவப்படுத்துமாம் நூல்கள்"

என முன்னோர் கூறியுள்ளனர். நாட்டின் வளர்ச்சியில் தனிமனிதனது பங்களிப்பு உள்ளது எனவே தனிமனிதனது வாசிப்புப் பழக்கத்தை முன்னேற்றுவதன் மூலம் நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்லலாம்.

உலகின் பல சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துநோக்கினால், அவர்களது வாழ்வில் வாசிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படும். வாசிப்புப் பழக்கத்தை நம்மிடம் ஏற்படுத்திக்கொள்ள சிறந்த இடம் நூல்நிலையம் ஆகும். இதனால்தான் பாடசாலைகளில், சமுதாயத்தில் பல நூல்நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடவுள் இருக்குமிடம்
திருக்கோயில்கள் - என்றால்
நூல்கள் இருக்குமிடம்
அறிவுக் கோயில்கள்"

என நம் முன்னோர் கூறியுள்ளனர். முன்னோர்கள் பலர் வாசிப்புப் பழக்கத்தை கைக்கொண்டிருந்த போதிலும், தற்போது சமுதாயத்தில் வாசிப்புப் பழக்கம் அருகி காணப்படுகின்றது. இதனை தடுக்குமுகமாக அனைவரிடத்திலும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இது அனைத்து மக்களினதும் கடமையாகும்.

தற்போது சமூகத்தில் நடக்கும் வன்முறைகளுக்கு காரணம் வாசிப்புப் பழக்கம் இல்லாமையே ஆகும். இன்றைய காலகட்டத்தில் கொலை, களவு, துஷ்பிரயோகம், கடத்தல் போன்ற பல வன்முறைகளால் சமுதாயம் சீரழிந்து காணப்படுகின்றது. மக்கள் பல துன்பங்களுக்கு உள்ளாகி பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தற்போது கல்வி கற்கும் மாணவர்கள் பல தீய வழிகளில் சென்று தமது எதிர்காலத்தை வீணடிக்கின்றனர். "இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்" என முன்னோர் கூறுவர். அப்படிப்பட்ட மாணவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டால் என்ன நிலைமை ஏற்படும்? என அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு சரியான தீர்வு அனைவரிடத்திலும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஆகும். உடலுக்கு தேகாப்பியாசம் போன்றதே மனதுக்கு வாசிப்பு என்றார், அறிஞர் ரிச்சர்ட்ஸ்டீல் வாசிப்புப் பழக்கம் நமது மனதுக்கும் ஆறுதலளிக்கின்றது. அத்தோடு ஒரு சிறந்த பொழுதுபோக்காகவும் அமைகின்றது எனலாம். நாம் நூல்களை கற்பதை விட சரியான நூல்களை தேர்ந்தெடுத்து கற்க வேண்டும். அன்னம் எவ்வாறு நீரும், பாலும் கலந்த பாத்திரத்திரலிருந்து நீரைமட்டும் விட்டு விட்டு பாலை அருந்துகின்றதோ, அதுபோல நமது அறிவுக்கு ஏற்ற நல்ல நூல்களை தேடிக் கற்க வேண்டும். இதன் மூலம் நாம் தேடும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ளலாம்.

நாம் சமூக விழுமியங்களை போதிக்கும், நீதிக் கருத்துக்களை உணர்த்தும் நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் சமூக விழுமியங்களையும் எம்முள் வளர்த்துக்கொள்ளலாம். அன்பு, ஒழுக்கம் உண்மை பேசுதல், தலைமைத்தவம், உதவி செய்தல், ஒப்புரவு, ஈகை போன்ற விழுமியப் பண்புகளை எம்முள் வளர்த்துக்கொள்ளலாம். இவை யாவற்றிற்கும் அத்திவாரமாக இருப்பது வாசிப்புப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கமே ஆகும். மகாபாரதம், இராமாயணம், திருக்குறள் போன்ற பல நூல்கள் சமூக விழுமியங்களை மக்களுக்கு போதிக்கின்றன. மகாபாரதத்தை எடுத்துக்கொண்டால் தர்மன் உண்மை பேசுபவராகவும் நீதியை நிலைநாட்டுபவராகவும் சித்திரிக்கப்பட்டுள்ளார். அரிச்சந்திரபுராணத்தில் அரிச்சந்திரனும் உண்மை பேசுபவராக சித்திரிக்கப்பட்டுள்ளார். "கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்" என அரிச்சந்திரன் கூறியுள்ளார்.

சிபிச்சக்கரவர்த்தி இலக்கியங்களிலே அன்பிற்கு இலக்கணமாக திகழ்ந்துள்ளார். குமண வள்ளல், பாரி, கர்ணன் போன்றோர் கொடையிற் சிறந்தவராக விளங்கினார்கள். இவர்களது வரலாறுகளை வாசிப்பதன் மூலம் பல நற்பண்புகளை நாமும் வளர்த்துக் கொள்ளலாம். அடுத்ததாக அனைவராலும் போற்றப்படும் ஒரு நூலாக திருக்குறள் விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. உலகில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு நூல் திருக்குறளாகும். உலகின் அனைத்து நாட்டவருக்கும், அனைத்து சமயத்தினருக்கும் பொதுவான நற்கருத்துக்களை கூறுவதால் திருக்குறள் "உலகப்பொதுமறை" என சிறப்பாக அழைக்கப்படுகிறது. இன்றும் சமுதாயத்தில் மக்களால் வாசிக்கப்படும் அழியாத கோலமாக திருக்குறள் விளங்குகின்றது. திருக்குறளில் 1330 குறட்பாக்கள் உள்ளன. எனினும் ஒவ்வொரு குறட்பாவினுள்ளும் பல்லாயிரம் நற்கருத்துக்கள் ஒளிந்துள்ளன. அதனை கற்பதற்கு வாசிப்புப் பழக்கம் இன்றியமையாததாகும். அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம்லிங்கன் வீதிவிளக்கில் படித்து பெரிய சாதனையாளராய் உலகை வலம் வந்தார். எனவே இன்றையகால மக்கள் ஏன் நூல்களை வாசித்து பல சாதனைகளை புரியமுடியாது? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஆபிரகாம்லிங்கனை முன்னுதாரணமான எடுத்த நம் முன்னோர் "வீதிவிளக்கிலே படித்து மேதையானோரும் உள்ர்" என கூறியுள்ளனர். இவற்றையெல்லாம். வாசித்ததன் மூலமாக முன்னோர் கூறிய விடயங்களை அறிந்துகொண்டோம். எனவே வாழ்க்கையில் வாசிப்பு இன்றியமையாதது என அறிந்துகொள்ளலாம்.

நம்முன்னோர் ஏட்டுச்சுவடிகளிலே கல்வியை கற்றனர். அதன் மூலமே வாழ்வில் முன்னேறினர். இதனைத்தான் "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என முன்னோர் கூறினர். ஆனால் தற்போது எமக்கு நூல்கள் பல உள்ளன. அதற்காக பல நூல்நிலையங்கள் உள்ளன. எனினும் வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குவதில்லை. நாம் ஓய்வுநேரங்களில் திரைப்படம் பார்ப்பதைவிட நூல்களை வாசிப்பது சிறந்தது. வாசிப்பதற்கு வயதெல்லை கிடையாது. சிறுவர் முதல் பெரியவர் வரை யார் என்றாலும் வாசிக்கலாம். வாசிப்பு என்பது அறிவை மட்டுமல்ல நற்பண்புகளையும் விருத்தி செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எங்கு ஒரு நூல்நிலையம் திறக்கப்படுகின்றதோ, அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது.” என்பது முன்னோர் வாக்கு. பாடசாலைகளில் மாணவர்கள் ஓய்வுநேரத்தை பயனுள்ளதாக்க நூல்நிலையத்தை பயன்படுத்த வேண்டும். அதைவிட நமது வீட்டிலேயே சிறு நூல்நிலையத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இது தனிமனிதனது வாழ்வை சிறப்பாக மாற்றியமைக்க உதவும். நம் நாட்டில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவர்கள் வாசிப்புப் பழக்கத்தை கொண்டிராதவர்கள் எனலாம். ஏனெனில் வாசிப்புப் பழக்கமுடையோர் நற்பண்புள்ளவார்களாக திகழ்வார்கள். அவர்களது வாழ்க்கை உயர் நிலையில் இருந்திருக்கும் எனவே நாம் சிறுவயதிலேயே மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை எற்படுத்தினால், அவர்கள் தரமான மாணவர்களாக நற்பிரஜைகளாக உருப்பெறுவார்கள் என்பது நம்பிக்கையாகும்.

ஒருவரின் பழக்கவழக்கங்கள், நடத்தையை கொண்டே, அவர்களை கணிப்பிடலாம். எனவே நற்பழக்கங்கள், நல்ல நடத்தை உடையவர்களாக வாழ வேண்டும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ வேண்டும். இவற்றையெல்லாம் நம்முள் வளர்த்துக்கொள்ள, நல்ல வாசிக்கும் ஆற்றல் வேண்டும் நாம் எதிர் காலத்தில் சூரியன் போல ஒளிவீசிட, வாசிப்பு ஒரு ஊன்றுகோலாக அமையும். மேலும் மேலும் நல்ல நூல்களை தேடிக் கற்று நல்ல அறிவையும் சமூக விழுமியப் பண்புகளையும் விருத்தி செய்யவேண்டியது நமது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றெடுத்த தாய்

**இ.தர்சினி**
**மேற்பிரிவு -சிறுகதைப்போட்டி - முதலாமிடம்**
**யா.்.வல்வை மகளிர் மகா வித்தியாலயம்**

மெல்லிய காற்றோடு நிலா பேசிக் கண்ணயர்ந்து ஊரே உறக்கத்தில் இருக்கும் போது, ஓர் உயிர் மட்டும் தன் சோககீதத்தை வாசித்துக்கொண்டிருந்தது. அந்த உயிர் மாலாதான். பச்சைப் பசேலென வயல்வெளிகளைக் கொண்ட அப்புட்டி கிராமத்தில்தான் மாலா சிறகடித்து திரியும் வண்ணத்துப்பூச்சி போல, தன் கணவனுடனுடம் பிள்ளையுடனும் வாழ்ந்து வந்தாள். மாலாவின் கணவன் கமல், யாழ்ப்பாணத்தில் ஒரு சிறப்பு சந்தையை சொந்தமாக வைத்திருந்தார். வானில் சிறகடித்து பறந்த வண்ணத்துப்பூச்சிகள் திடீரென வீசிய காற்றால் திசை மாறிச் சென்றது போல, கமலின் வாழ்க்கையும் மாறியது. வங்கியில் கடனைப் பெற்று, அதனைக் கூடுதலான வட்டிக்கு மக்களுக்கு கொடுத்தான். ஒரு நாள் மாலா, "இஞ்ச பாருங்கோ இதெல்லாம் வேணாம், கடையால கிடைக்கிற பணமே போதும். அதிகமாக ஆசைப்படாதீங்க" என்றாள்.

பணத்தின் மோகத்தில் இருந்த கமலுக்கு, மாலா கூறிய வார்த்தைகள் செவிடன் காதில் ஊதிய சங்கு போல இருந்தது. நல்ல வருமானமும் கிடைத்தது. நாட்கள் உருண்டோடின அனேகமானோர் வட்டி கொடுப்பதை நிறுத்தினர். அதனால் கமல் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று கடும் சொற்களால் ஏசினான். எவ்வளவு நாள்தான் மக்களும் வட்டியைக் கொடுப்பது. இவ்வாறே செல்லச் செல்ல சிலர் கமலின் தொந்தரவு தாங்க முடியாமல் ஊரை விட்டு தப்பிச் சென்றனர். இதை அறிந்த கமலனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தான். மாலா, 'நான் சொன்னனன்..... எப்ப என்ரை பேச்சை நீங்க கேக்கிறனீங்கள்? இனி என்ன செய்யிறது? பாங்கில இருந்தும் வரப் போறாங்கள் இதுக்கு ஒரே வழி குடும்பமாகச் சேர்ந்து தூக்கில் தொங்கிறதுதான்' என்று புலம்பினாள். அடுத்தநாள் காலை தனது கடைப் பத்திரத்தையும் எடுத்துக்கொண்டு வங்கிக்குச் சென்றான் கமல்.

வங்கி அலுவலகரிடம் சென்று " இப்பத்திரத்தை வைத்துக்கொண்டு எனது கடனை அடைத்து விடுங்கள்" என்றான் கமல். "சொறி சேர் உங்க கடைப்பத்திரத்தின் பெறுமதி நீங்கள் வாங்கின கடனின் அரைவாசிதான் வரும்" மீதிக் கடனை எவ்வாறு செலுத்துவீர்கள்? என்றார் வங்கி அலுவலர். "என்ரை தலையை அடகு வைத்தாவது கடனைச் செலுத்துவேன்" என்று கூறி விட்டுச் சென்றான் கமல் தனது வீடு, வாசல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டம் துரவு எல்லாவற்றையும் விற்றான். விற்ற பணத்தை வைத்து தனது கடனை அடைத்தான். அன்றுதான் மாலாவுக்கு நிம்மதி, "இஞ்ச பாருங்க, போனது போயிட்டு அத நினைக்காம முன்னேறுற வழியைப் பாருங்க"என்று மாலா தனது கணவனுக்கு ஆறுதல் கூறினாள். பொழுதும் விடிந்தது அறையை விட்டு வெளியே வந்தாள். ஐயோ என்ன காரியம் பண்ணீட்டிங்கள் என்று கத்தினாள். மாலாவின் சத்தத்தைக் கேட்ட அயலவர்கள் ஓடி வந்தனர். கமல் அவமானம் தாங்காமல் தூக்கில் தொங்கினான் என்பதைக் கேட்டவர்கள் அசைவற்ற ஜடம் போல் இருந்தனர்.

கமல் சாவதற்கு முன்பு தனது மனைவிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். மாலா உன்ன விட்டிட்டுப் போறதுக்கு எனக்கு மனசே இல்லை. ஆனால் இந்த அவமானத்தோட என்னால் வாழவும் முடியாது. அன்றொருநாள் என்ரை கடைக்கு வங்கியில இருந்து சிலர் வந்து "கடனை அடைக்க வழியில்லை. நீ பெரிய பவரா திரியிறா" என்று கண்டபாட்டுக்கு எல்லாருக்கும் முன்னாலையும் திட்டினாங்க. அந்த நொடியே செத்திட்டன். அதுக்குப் பிறகுதான் கடைப் பத்திரத்தை கொண்டு போய் கொடுத்தனான். இதைச் சொன்னா நீ தாங்கமாட்டாய் என்று தெரியும். அதனாலதான் சொல்லேல்ல. நீதான் நம்மட பிள்ளையளை நல்லா வழக்கோனும்" என்று எழுதியிருந்த கடிதத்தை வாசித்த மாலா அடியற்ற மரம் போல கீழே விழுந்தாள்.

ஒன்றும் அறியாத சின்னப்பிள்ளையான மாலாவின் மகன் சிவா எழுந்து வந்து மாலாவிடம் "அம்மா! ஏன் அப்பா இவ்வளவு நேரம் தூங்குறாங்க? ஆமா இவங்க எல்லாரும் ஏன் வந்திருக்கிறாங்க? ஏன் அப்பா தூங்கிறதைப் பார்த்ததில்லையா? என்று அறியாமல் கேட்டான். "அப்பா அப்புச்சாமிகிட்ட போட்டாரு இனி திரும்பி வரமாட்டார்" என்று கலங்கிய கண்களுடன் சொன்னாள். கமலனின் உறவினர்கள் இறுதிச் சடங்கை செய்து முடித்தனர். அடுத்தநாள் காலை வங்கி அலுவலகர் வந்து "இது வங்கிக்கு சொந்தமாயிற்று உடனடியாக நீங்க இந்த வீட்டை காலிபண்ணனும்" என்று சொன்னார்கள். அதையும் தாங்கிக்கொண்டு தனது மகனுடன் தனது தாய் வீட்டிற்குச் சொன்றாள். காலம் யாருக்காவும் காத்திருப்பதில்லை. ஓர் நாள் மாலாவின் அண்ணி "இதுகளுக்கு சோறு ஆக்கிப் போடுறதிலேயே என்ரை உசிரு போயிடும். வந்து வாச்சிருக்குதுகள் வைரவருக்கு நாய் வாச்சமாதிரி" என்று மாலாவுக்கு முன்னிலையில் பேசினாள்.

அந்நேரமெல்லாம் சாக வேண்டுமென்று தோன்றும்.... ஆனால் தனது கணவன் கூறிய வார்த்தைக்காக வாழ்ந்தாள். தனது தாய் வீட்டிற்கு அருகே ஒரு குடிசை அமைத்து அவளும் மகனும் வாழ்ந்தனர். சிவாவை நன்றாகப் படிக்க வைத்து ஆளாக்குவதே மாலாவின் குறிக்கோளாக இருந்தது. அதற்காக கல் உடைக்கச் சென்றாள். சிவாவும் நன்றாகப் படித்தான். மாலா தான் ஒருவேளை உணவு உண்டாலும் சிவாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வேளையும் உணவு உண்ணக் கொடுப்பாள். மாலா தனது கஸ்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் இருந்தாள். ஆனால் சிவாவோ தனது தாயின் கஸ்டத்தை உணர்ந்து இருந்தான். சிவா எப்போதும் கலகலப்பாக இருப்பான். மாலாவின் அண்ணிக்கு சிவாவை கண்ணிலேயும் காட்டக்கூடாது. "என்னடா நேரத்துக்கு ஒரு உடுப்புப் போட்டுக்கொண்டு திரிகிறாய் படிக்கிறியோ? இல்லாட்டி வேற உத்தியோகம் பாக்கிறியோ? என்று நக்கலாகக் கேட்பாள்" இல்லை என்ரை வேலை எதுவோ அதைத்தான் நான் பாக்கிறன் என்று பதில் கூறுவான் சிவா .இளைஞனாக வளர்ந்தான் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றினான், உயிரியல் பிரிவைத் தெரிவு செய்த சிவா நன்றாகப் பரீட்சை எழுதினான்.

பரீட்சை முடிந்த பின்பு, அம்மா! இனி நானும் உங்களோட வேலைக்கு வாறன். உங்கட கஸ்டத்தை குறைக்கோனும் எண்டு நினைக்கிறன். நீங்க என்னம்மா சொல்றீங்க? இஞ்ச பாரு ராசா அம்மாட கஸ்டம் அம்மாவோட போகட்டும் நீ ரிசல்ட் வரும் வரைக்கும் உன்ட ப்ரண்ஸோட சந்தோசமா இரு என்று சொல்லிவிட்டுச்சென்றாள். அப்போது அவனுக்குத் தெரியவில்லை தான் சொன்னது தவறு என்று, இன்றைய இளைஞர்கள் தமது நேரத்தை வீணாகவே கழிக்கின்றனர். அவ்வாறே சிவாவின் நண்பர்கள் அனைவரும் பணக்காரர்கள். அதனால் மது, புகை, போதை போன்றவற்றிற்கு அடிமையாகினர். சிவா "மச்சான் இதெல்லாம் வேண்டாமடா இதாலை என்னடா இலாபம்? எங்கட சமூகத்திற்குத்தான்டா கெட்டபெயர் சொன்னாக்கேளுங்கோ" "டேய் பேசமல் இரு இது பாவிச்சாத்தான்டா கெத்து நீ ஒருக்காப் பாவிச்சுப் பாரன்" "உங்கட சகவாசமும் வேண்டாம்" என்று சொல்லி விட்டு சிவா வந்து விட்டான்.

பரீட்சை முடிவுகளும் வந்தன சிவா 3A சித்திகளைப் பெற்று யாழ்மாவட்டத்தில் 1ம் இடத்தைப்பெற்றான். மாலா மகிழ்ச்சியின் உச்சத்தில் சென்று ஊர் முழுவதும் தம்பட்டம் அடித்துச் சொன்னாள். இந்த சந்தோஷமான விடயத்தை தன் நண்பர்களுக்குச் சொல்வதற்காக ஓடோடிச் சென்றான், சிவா "மச்சி நான் றொம்ப சந்தோசமாக இருக்கேன்டா" நான் நினைச்சமாதிரி எங்க அம்மாவின் ஆசையை நிறைவேத்திட்டன்டா" என்றான். "சூப்பர்டா எங்களுக்கு ஒன்றும் இல்லையோ?" "என்னடா வேணும்! உனக்குத் தெரியாதா? சரி இண்டைக்கு இரவு" என்று சொல்லிவிட்டுச் சென்றான். மாலாவும் சிவா கேட்டவுடன் பணத்தைக் கொடுத்தாள் அன்றே இரவு சிவாவும் நண்பர்களும் மதுப்பார்ட்டியில் இருந்தனர். ஒருநாளும் குடிக்காத சிவா, நண்பர்களின் வற்புறுத்தலினால் குடித்தான். மது குடித்தால் பித்துப் பிடித்தவன் போல் ஆகிவிடுவார்கள் என்று ஆன்றோர் கூறுவது உண்மைதான்.

எல்லோரும் மதுபோதையில் வாகனங்களை ஓட்டிச்சென்றனர். பின்னால் காரில் வந்த வாகனம் சிவாவின் வாகனத்தின் பின்பல்ப்பை தவறுதலாக இடித்தது. போதையில் மூழ்கியிருந்த அவர்கள் "டேய் யாருடா பல்பைப் உடைச்சது. வெளியே வாடா என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாவின் நண்பர்கள் கூறினர். வாகனத்தில் இருந்த நபர் சேர் சொறி நீங்கள்தான் வாகனத்தைத் தப்பா ஓட்டிக்கொண்டு வந்தனீங்கள்... அதனால்தான் இடிபட்டுட்டு சொறிசேர்". வாகனத்தை இடிச்சிட்டு கதை வேற சொல்லிறியா உன்னை... என்று சொல்லிவிட்டு காலில் இருந்த செருப்பைக் கழற்றி அடித்தான். சிவா, "டேய் மச்சி வாடா போவோம" என்றான். ஆனால் நண்பர்களோ கேட்கவில்லை "டேய் போடா இஞ்சநின்டா உன்னைக் கொண்ணே போடுவன்" என்று அலம்பினர். "தம்பீங்களா இதுக்கு நீங்க அனுபவிப்பீங்களடா" என்று கூறிவிட்டு வாகனத்தை எடுத்துச் சென்றார் அந்த நபர்.

சிவா மாலாவிற்குத் தெரியாமல் சென்று படுத்துவிட்டான் நாளை விடியலை நினைத்து மகிழ்வுடன் எழுந்தாள் மாலா. காலைச்சாப்பாட்டை செய்து வைத்துவிட்டு மகனைச் சென்று பார்த்துவிட்டு வேலைக்குச் சென்றாள். நித்திரை விட்டு எழுந்த சிவா தனது காலைக்கடன்களை முடித்துவிட்டு, சாப்பிட்டு விட்டு வெளியே சென்றான். அவர்கள் அரட்டை அடிக்கும் இடத்தில் எல்லோரும் இருந்தனர். வழமைபோல் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தனர். எப்பையோ பார்த்தமாதிரி இருந்த ஓர் வாகனம் அங்கு வந்தது. அவர்களுக்கு நேற்று நடந்தது எதுவுமே ஞாபகத்தில் இல்லை. வாகனத்தில் இருந்து ஒரு சில பேர் வந்த வேகத்தில் சிவாவையும் நண்பர்களையும் அடித்தனர். என்ன நடக்கிறது என்பது புரியாமல் "ஏன் எங்களை அடிக்கிறீங்கள்? நாங்க என்ன செஞ்சனாங்க?" என்றனர் என்ன செஞ்சனீங்களா "என்ன தைரியம் இருந்தா எங்கட அண்ணாவை செருப்பாலை அடிச்சிருப்பீங்க" "இஞ்ச பாருங்க தெரியாமல் நடந்திருச்சு என்றனர் உடனே அவர்கள் கோபமிகுதியால் பெரிய கத்திகளை எடுத்தனர் அதைப்பார்த்துப் பயந்த சிவாவின் நண்பர்கள் ஓடினர். அப்பாவியான சிவாதான் அவர்கள் கையில் மாட்டுப்பட்டு வாள்வெட்டுக்கு ஆளானான். நண்பர்கள் எல்லோரும் ஓடிவிட்டனர். தெருவில் அவன் மட்டும் அனாதைப்பிணமாகக் கிடந்தான்.

மாலா வேலை செய்யும் இடத்திற்கு கடிதம் ஒன்று வந்தது. மாலா அதை வாங்கி வாசித்தாள். சிவாவிற்கு கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது. மாலாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேலை செய்யும் உடுப்போட வீட்டுக்கு ஓடினாள் வீட்டிற்குச் செல்லும் வழியில் ஒரே கூட்டமாக இருந்தது. மெதுவாக எட்டிப்பார்த்தாள் "ஐயோ என்ட ராசா என்னடா அம்மாவைப் பயமுறுத்தாதையடா அப்பா எழும்பையா" என்று கத்தினாள். "இங்கே பாரய்யா பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைச்சிட்டு எழும்படா என்னடா கடவுளே நான் என்ன செய்வேன் டொக்டரா ஆளாக்கிப் பாக்கணும் என்று ஆசைப்பட்டன் உதுக்காகவா உன்னைப் பத்துமாதம் சுமந்து பெற்றேன். அம்மாவைப் பாரய்யா. என்ட பிள்ளைக்குப் பதிலா என்னுடைய உயிரை எடுத்திருக்கலாமே" என்று கத்தினாள். சுற்றியிருந்தோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் கண் கலங்கியது. அயலவர்களால் எல்லாக்காரியங்களும் சிவாவுக்குச் செய்யப்பட்டன.

மாலா உயிரற்ற ஜடமாகவே ஒரு மூலையில் கிடந்தாள் இவ்வாறு சமூக சீர்கேட்டினால் தமது குடும்பத்தை இழந்த பலர் இன்னும் உலகத்தில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.

**ஒரு தாய்க்கு பெற்ற பிள்ளையை விட மேலான சொத்து உலகில் வெறொன்றுமில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பை நேசித்தால் வாழ்வொளிரும்.

பா. கீர்த்தனி
மேற்பிரிவு - கவிதைப் போட்டி - முதலாமிடம்
யா/சிதம்பராக்கல்லூரி

மனிதா உன் வரண்டு கிடக்கும் வாழ்வை
வளமுடன் வாசிப்பை நேசி
வாழ்வு தந்த அன்னை அவள் மனம் குளிர
வாசிப்பை நேசி
வறுமை என்னும் மடியில் சிக்கிக் கிடக்கின்றாய்
வாழ்வொளிர வாசிப்பை நேசி
வந்த தடைகளை தகர்த்தெறிந்து நீ
வானுயர வாசிப்பை நேசி.

அறியாமை எனும் இருளில் அறிவிழந்து அலைகின்றாய்
அறிவைப் பெற வாசிப்பை நேசி
அகிலம் அழுக்கடைந்து கிடக்கின்றது அழுக்கை போக்கி
சுத்தமாக்கிட வாசிப்பை நேசி
வன்மைகளால் வாழ்விழந்து நிற்கின்றாய் வந்த துயர்
அன்பினால் நீங்கிட வாசிப்பை நேசி
பெண்களைக் கண்டு மனம் பேதலித்து விட்டாய்
பெண்மையை மதித்திட வாசிப்பை நேசி.

ஏடுகளை மறந்து ஏனோ கோடுகளை மீறிவிட்டாய்
ஏடுகளை நேசி வாசிப்பை நேசி
போதையின் பாதையால் சென்று பண்புகளை இழந்தாய்
பண்பினைப் பெற வாசிப்பை நேசி
கடத்தல்கள் செய்து கம்பி எண்ணுகின்றாய் மன
கலக்கம் நீங்க வாசிப்பை நேசி

நாட்டின் கண்கள் நீ ஏன் சரிந்து போகின்றாய்
நிமிர்ந்து நிற்க வாசிப்பை நேசி
தீய நடப்பால் தீய பெயர் பெற்றாய் நல்லொழுக்கம்
பெற்றிட வாசிப்பை நேசி
ஏடு சுமக்கும் கைகளில் ஆயுதம் சுமக்கின்றாய்
அகிம்சையை அறிய வாசிப்பை நேசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்த பெற்றோரை பாரமாக எண்ணுகின்றாய்
பாசத்தைக் கற்றிட வாசிப்பை நேசி
வெளிநாட்டு மோகத்தால் கலாசாரம் மறந்துவிட்டாய்
பண்பாட்டை கற்றிட வாசிப்பை நேசி
தாய்மொழியை தரம் குறைவாய் எண்ணுகின்றாய்
மொழியை நேசிக்க வாசிப்பை நேசி.

கண்டதும் காதல் கொண்டு உயிரை மாய்கின்றாய் உயிரின்
மதிப்பினை அறிய வாசிப்பை நேசி
வெறி கொண்டு நீ உயிரைப் பறிக்கின்றாய்
அமைதி கிடைக்க வாசிப்பை நேசி
வாகனத்தில் ஏறியதும் வீதி ஒழுங்குகளை மீறுகின்றாய்
ஒழுங்கை அறிய வாசிப்பை நேசி.

கல்வி கற்பதை கடினமாக எண்ணுகின்றாய் கல்வியின்
அருமையை அறிய வாசிப்பை நேசி
விழுமியங்களை மறந்து வீண் சேஷ்டைகள் செய்கின்றாய்
சமயத்தை மதிக்க வாசிப்பை நேசி.
வாழ்க்கை வெறுக்கின்றது என வீணே புலம்புகின்றாய்
வாழ்வொளிர வாசிப்பை நேசி.


மரங்களை வெட்டி சுவாசிக்க சிரமப்படுகின்றாய் மரத்தின்
பயனறிய வாசிப்பை நேசி
வாழ்க்கை எனும் பாடத்தை படிக்க மறுக்கின்றாய்
வாழ்வை அறிய வாசிப்பை நேசி
சொந்தங்களை விரட்டிவிட்டு தனிமையில் கிடக்கின்றாய்
உறவுகளை நேசிக்க வாசிப்பை நேசி.

மனிதா உன் வாழ்வு உன்கையில் உன்னை
நீ அறிய வாசிப்பை நேசி
வாழ்க்கை பிரகாசமானது அதில் வாழ்ந்து களிக்க
நீ வாசிப்பை நேசி
அறியாமையால் அகிலத்தை அழிக்காதே உன்
வாழ்விலும் விளக்கேற்றி வாசிப்பை நேசி
வாசிப்பை நேசித்தால் உன் வாழ்வும் ஒளிரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதில் வாசிப்பின் முக்கியத்துவம்



**திரு.ம.செல்வரத்தினம்**

*திறந்த பிரிவு - கட்டுரை - முதலாமிடம்*

*யா/ தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்*

**அறிமுகம்**

அறிவுசார்ந்த சமூகத்தை உருவாக்குவதில் பல்வேறு காரணிகள் பங்களிப்பு செய்தாலும் நிகழ்காலத்திலும் சரி, எதிர்காலத்திலும் சரி பெரும் உந்து சக்தியாக ஆற்றல் மிகு காரணியாக வாசிப்பு எனும் மகோன்னத ஊட்டச்சத்து முக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வகையில் இக் கட்டுரையில் பிரதிபலீப்பாக அறிவுசார் சமூகம் பற்றிய நோக்கு அத்தகைய சமூகத்தை உருவாக்குவதில் வாசிப்பின் பங்கு, முக்கியத்துவம் வாசிப்பை மேம்படுத்தும் உத்திகள் தொடர்பாக நோக்கப்படுகின்றது.

**அறிவுசார் சமூகம் பற்றிய நோக்கு**

“அரிது அரிது மானுடராதல் அரிது” என்ற ஔவையாரின் வாக்குக்கு அமைய உலகில் தோன்றிய ஜீவராசிகளில் மகத்தான திறனை தம்மகத்தே கொண்ட இனமாக மனித இனம் சிறப்பு பெற்றுள்ளது. பேராசிரியர் ஹொவார்ட்காட்னரினால் முன்வைக்கப்பட்ட பல்வகைப்பட்ட அறிவுசார் கோட்பாட்டிற்கமைய ஒவ்வொரு மனிதனிடமும் இயற்கை அறிவு, மொழிசார் அறிவு, இசைஞான ஆற்றல், தர்க்க ரீதியான ஆற்றல், கட்புலதிறன், உடல் வலிமை, ஆற்றல், ஆளிடைத் தொடர்பு, ஆற்றல் உள்ளார்ந்த ஆற்றல் எனும் பல்வகை ஆற்றல் பொக்கிஷமாக உள்ளமைந்துள்ளது. இந்த பாரினில் உள்ள ஒவ்வொரு மானுடனும் அறிவுடன் வாழவே விரும்புகின்றான். அதற்கமைய தம்முன்னே உட்பொதிந்து உள்ள ஆற்றல்களை புரிந்து கொண்டு தமக்கிருக்கும் ஆற்றல்களுக்கு எற்ப சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் எதிர்நோக்குவதன் ஊடாக அறிவுசார் சமூகம் கட்டி எழுப்பப்படுகின்றது எனலாம். சேர் ரிட்சட்ஷடீவ் அவர்களது புத்தகங்களை வாசிப்பது மூளைக்குரிய பயிற்சியாகும் எனும் சிந்தனை இங்கு குறிப்பிடற்பாலது.

அறிவு சார் சமூகம் என்பது தமது பலம், பலவீனம் என்பவற்றை சுய மதிப்பீடு செய்து அறிவு எனும் திறவுகோல் ஊடே ஆக்கத்திறன் பெற்று பிரச்சினைகளில் இருந்தும் விடுவித்துக் கொண்டு உலக மயமாக்கலுக்கு எற்ப இணைந்து இற்றைப்படுத்தப்பட்டஓர் குழுமமாக வளர்ந்துவரும் ஒன்றிணைந்த சமூகம் ஆகும். இன்றைய விந்தை மிகு புதுயுகத்தில் நாள்தோறும் புதிய புதிய சிந்தனைகள், கருத்தாடல்கள், மாயவிம்பங்கள். தொழில்நுட்ப உத்திகள், வேலைவாய்ப்புக்கள் என உலகம் விரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்து நீட்சி பெற்றுச்செல்லும் நிலையில்இன்றைய சமூகம் அறிவுசார் சமூகமாக திகழவேண்டியதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இன்றைய உலகம் நாளுக்குநாள் மாறுபடும் உலகமாக தோற்றமளிப்பதனால் அத்தனை மாற்றங்களையும் உள்வாங்கும் சமூகம் உருவாக்கப்பட்ட அறிவு எனும் திறவுகோல் ஆதாரமாக அமைகின்றது. இதன் விளைவாகவே இன்றைய சமூகம் பொருளாதாரம் நிலைத்துநிற்கும் அபிவிருத்தியினை அடைந்துகொள்ள முடியும் தனிமனித சமூகம் சார்ந்த திறன்களை வளர்த்துக் கொண்ட சமூகத்தையே உலகம் அரவணைத்துச் செல்லும், இன்றேல் உலகில் இருந்து தூர தூக்கி எறியப்படும் சமூகமாகமாறிவிடும்.

## அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதில் வாசிப்பின் பங்கு

ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் அறிவு என சொல்லப்படுகின்றது. வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்றவாக்கு அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதில் அறிவு எனும் சொத்தின் ஊட்டமுறை புலப்படுகின்றது. அத்தகைய அறிவினை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளில் வாசிப்பு முக்கியம் பெற்றுள்ளமை வெள்ளிடை மலை.

உளவியலாளர்களின் கருத்துப்படி குழந்தை தாயின் கருவறையிலே கற்றுக்கொள்ளத் தொடங்குகின்றது. என்பது நோக்குதற்குரியதாகின்றது. இன்றைய நவீன உலகில் மருத்துவ இயலில் அறிவுசார் சமூகத்திற்கு நவீன உலகில் மருத்துவ இயலில் அறிவுசார் சமூகத்தின் கரு பிள்ளைகளின் பிறப்பிற்கு முன்பே விதைக்கப்பட்ட சிந்தனையாக அமைந்துள்ளது. கருவுற்றதாய் நல்ல நூல்களை கட்டுரைகளை வாசிப்பதன் மூலம் கருவில் உள்ள சிசுவின் மூளை விருத்தியடையும் என்பதனை நவீன சிந்தனையாளர்கள் மீளவும் மீளவும் வலியுறுத்தி வருகின்றது நோக்குதற்குரியது.

வாசிப்பு பல திறன்களை தம்மகத்தே கொண்ட செயன்முறையாகும். சிந்தித்தல், ஆராய்தல், கண்டறிதல் துலங்கல், தர்க்கித்தல் போன்ற பல திறன்களை கொண்டமைந்துள்ளது. இவை அறிவுசார் சமூகத்தை உருவாக்கும் படி முறைகளாகவும் அமைந்துள்ளன. எனவே வாசிப்பு ஒரு மனிதனில் உயிர் மூச்சாக யாசகம் செய்து பேணப்படவேண்டிய ஒன்றாகின்றது. இன்றைய சமூகம் இன்றைய நவீன உலகில் வெற்றி எனும் கயிற்றினை பெற்றுக்கொள்ள வாசிப்பு ஓர் ஆயுதம் என்றால் அதில் மிகையில்லை.

## வாசிப்பின் முக்கியத்துவம்

புத்தகமொன்றின் பக்கங்களுக்கிடையே யதார்த்தமான மனிதர்கள் வாழ்கின்றனர் என்ற போஸ்டர் என்பவரது சிந்தனையும் மனிதனை மனிதனாக உருவாக்குவதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக் கல்வியின் நோக்கம் என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனையும் கல்வியின் ஊடாக பெற்றக்கொள்ளப்பட இருக்கும் விளைவுகளில் வாசிப்பு எவ்வளவு தூரம் சாத்தியமாக்கி காட்டும் வல்லமை உள்ளது என்பது நிதர்சனமானது ஆகும்.

அறிவுசார் சமூகத்தின் வெற்றி தகவல்களை பெற்றுக்கொள்வதிலும், அவற்றை பயன்படுத்துவதிலும் தங்கி உள்ளது. அத்தகைய தகவல்களை பெற்றுக்கொள்ள முதன்மையான கருவி வாசிப்பு ஆகும். எனவே அனைத்து கல்விசார் சாரா திறன்களுக்கும் வாசிப்பே மூலதனம் என்பதனை உணர்ந்து அதனை செயற்படுத்தும் ஓர் சமூகம் இன்றைய உலகில் வெற்றிபெற்ற ஓர் அறிவுசார் சமூகமாக மிளிரும்.

வாசிப்பின் மூலம் மனிதனுடன் புதைந்துள்ள பல்திறன் அறிவுசார் கோட்பாட்டை அடையத் தக்க மொழி விருத்தி, உளவிருத்தி, ஆளிடைத் தொடர்பு, சொல்வளம், தர்க்கத்திறன், பிரச்சினை விடிவிப்பதற்கும் திறன் போன்ற பல திறன்கள் வளர்க்கப்படுகின்றது. எனவே இன்றைய மாணவர்கள் பெரியோர்கள், சமூகத்தவர்கள், வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படின் இன்றைய உலகின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்க முடியும்.

வாசிப்பை மேம்படுத்தும் செயற்பாடுகள்

மனிதன் வாசிப்பதனால் பெற்ற பயன்களை எம் முன்னோர்களின் வெற்றிகளின் மூலம் அறிந்தும் கொண்ட நாம் அத்தகைய வெற்றிகளை பெற்றுக்கொள்ள நாமும் அவற்றை பயன்படுத்தி பயன்அடைய வேண்டும். அறிவு விருத்தியே இன்றைய, சமூகத்தின் வெற்றிக்கு அடித்தளமாக அமையும். எனவே வாசிப்பின் மீதான ஆர்வம் மேம்பாடு அடைய வேண்டும்.

இன்றைய காலத்தில் நவீன தொடர்பு சாதனம் பலம் அடைந்து காட்சிப்புலம் விரிவடைந்து செல்லும் நிலையில் வாசிப்பு புலம் வீழ்ச்சியடைந்து செல்வதாகவே நோக்கப்படுகின்றது. இது மறைக்க, மறுக்க முடியாத உண்மை. எனவே இத்தகைய வாசிப்பு பழக்கம் அருகிவருகின்றமை. மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் வீழ்ச்சியினை பகுப்பு செய்து வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகின்றது.

எனவே வாசிப்புத்திறன் சமூகத்தின் ஒவ்வொரு நிலைகளிலும் ஊட்டப்படவேண்டிய ஒன்றாக அமைகின்றது. பாடசாலைகளில் மாணவர்களுக்கு வாசிப்பினை மேம்படுத்த முன்னோர் கண்ட நடைமுறைகளை நடைமுறைப்படுத்த யாவரதும் தலையாய கடனாகின்றது. அவர்கள் மத்தியில் வாசிப்பின் மீதான ஆர்வத்தை தூண்ட அதுவே அறிவுசார் சமூகத்தை உருவாக்கும். வாசிப்பினை மேம்படுத்த பல உத்திளை நடைமுறைபடுத்தல் அவசியமாகின்றது.

வாசிப்பினை மேம்படுத்த நூல்கள் பத்திரிகைகள் தினசரி வார இதழ்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவ இதழ்கள், சஞ்சிகைகள், கட்டுரை துணுக்குகள், துறைசார் வல்லுனர்களின் அறிக்கைகள் என்பவற்றினை பேணுவதுடன் மாணவர்கள் பயன்பாட்டுக்கு ஏற்ற வசதிகளை உருவாக்கவேண்டும். மாணவர்கள் மத்தியில் வாசிப்பின் மீதான போட்டியினை ஆர்வத்தினை ஏற்படுத்தும் வகையில் சமூகம்சார் செயற்பாடுகளை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

இன்றைய சமூகம் வாசிப்புத்தளம் மீதான முக்கியத்துவத்தை உணர்ந்து அது மேலதிக காலத்தில் அறிவுள்ள சமூகம் உருவாக்கும் மூலதனம் என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும். அதறகான சூழல் பாடசாலை, சமூக நிறுவனங்கள், ஆலயங்கள் பொது இடங்களில் உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய உருவாக்கமே அறிவுசார் சமூகத்தை உருவாக்கும் என்பது அசைக்க முடியாத உண்மையாகும்.

**நிறைவாக**

இன்றைய உலகம் சவால்கள் பலநிறைந்த மாற்றங்கள் பலவற்றை காலத்துக்கு காலம் தூவிச் செல்கின்ற விஞ்ஞான விந்தைகள், நவீன தொடர்பாடல் மேம்பாடுகளுடன் துரிதமாக சுற்றிவரும் பூமியாக காட்சி அளிக்கின்றது. அத்தனை மாற்றங்களுக்கும், சவால்களுக்கும் ஒவ்வொரு மனிதனும் தம்மை தயார்ப்படுத்தல் அவசியமாகின்றது. எனவே அத்தகைய எதிர்வு நிலை தோற்றத்தினை இந்த பூவுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பெற்றுக்கொள்ளல் அவசியமாகின்றது. இதற்கு வாசிப்பு எனும் தளம் இன்றியமையாததாகின்றது. எனவே அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதில் வாசிப்பு எனும் திறன் முக்கியத்துவம் பெற்றுள்ளது எனலாம்.

உசாத்துணை

01. வாசிப்பின் முக்கியத்துவமும் பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை
ஊக்குவிப்பதன் அவசியமும்
முஹம்மட் மஜீட் மஸ்றூபா ஹமீம், சிரேஷ்ட உதவி நூலகர்
தென் கிழக்குப் பல்கலைக்கழம்

02) வாசிப்பும் சமூக மேம்பாடும்
ஸ்ரீ.அருளானந்தம், முதுநிலை உதவி நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

03) உதயன் பத்திரிகை
எஸ்.ரி.அருள் - கட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் ஒரு புலம்பெயர்வு

**எஸ்.ஜெ.ஜெயக்குமார்**
திறந்த பிரிவு - சிறுகதை - முதலாமிடம்
குளுந்தவேலி,
கரணவாய் தெற்கு கரவட்டி.

வசந்த காலத் தென்றல் காற்றும், பூத்துக்குலுங்கும் மரம், செடி, கொடிகளும் மனதுக்குச் சுகத்தைத் தந்த போதும், அதை அனுபவிக்க முடியாத மனத்துயருடன் வாடிய கொக்காகத்தேம்ஸ் நதிக்கரையில் அமர்ந்திருந்தான், தேவராஜா சில மாதங்களாக அவனை வாட்டி வரும் ஒரு நிகழ்ச்சியோடு ஒன்றியிருந்தது அவனது மனம்.

எத்தனையோ துரயங்களைச் சுமந்துகொண்டு வாழும் அவனுக்குத் தனது மகள் லண்டனுக்கு வந்தபிறகு நடந்து கொள்ளும் முறையும், அதைப்பற்றி அவளிடம் கேட்டபோது துளி கூடத் தயக்கம் இல்லாமல் அதற்கு அவள் சொன்ன பதிலும், அவனது நெஞ்சில் நெருப்பைக் கொட்டியது போலாக அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவன் தடுமாறினான்.

நாலு ஆண் பிள்ளைகளுக்கு ஒரேயொரு பெண் பிள்ளை என்று அவளை மண்படாமல் அவளது மனம் புண்படாமல், ஆண்களின் கண்படாமல் வளர்த்தேனே. இப்போ அவள் மண்ணையே வாரி என் தலையில் கொட்டிவிட்டாளே... கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கை இப்படித்தானா கறைபட்டுப் போகும்? அவன் பதைபதைக்கிறான்.

அவனது வீட்டில் மகள் விவேக்காவோடு நடந்த வாக்குவாதம் அவன் கண்களில் தெரிகிறது. விவேக்கா உனது போக்கு எனக்கு துளிகூடப் பிடிக்கவில்லை. நீ கண்டவர்களுடன் சுற்றுவதாக எனக்கு பல முறைப்பாடுகள் வந்திருக்கிறது. இது லண்டன் என்றாலும் எங்கள் தமிழ் பண்பாட்டிற்கு அமைய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற் குணங்களோடு வாழவேண்டிய தமிழ்ப்பெண்ணான நீ இப்பிடி கிழமைக்கொருவனோடு சுற்றுவது முறையா? அவனது இதயத்தில் வேதனையின் ரணங்கள் உறுத்தின.

எங்கடை தாய் மொழி தமிழ் என்பது யாழ்ப்பாணத்தோடை சரி லண்டனிலை எங்கடை தாய் மொழி ஆங்கிலம் தான் ஆங்கிலம் தாய் மொழியாக இருக்கும் போது எங்கடை பண்பாடு மட்டும் எப்பிடி அப்பா தமிழ்ப் பண்பாடாக இருக்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் ஆங்கிலேயருக்குரிய பண்பாடுதான். எனவே, என் நடை, உடை, பாவனைகள் பற்றி நீங்கள் வருந்துவது பிழை அவளது துணிச்சலான பேச்சைக் கேட்டுத் தேவராஜா அசந்து போய்விட்டான்.

"ஒரு பெற்ற தகப்பனுக்குச் சொல்லும் பதிலா இது? மூக்கைப் பிடிச்சால் வாயைத் திறக்கத் தெரியாமல் யாழ்ப்பாணத்திலை இருந்தவள் இப்பிடிப் பேசுகிறாளே" அவன் அதிகமாக வருத்தப்பட்டான்.

இந்தத் துன்பமான பொழுதுகளில் அவனால் தன் பிறந்த பொன்னாட்டை நினைக்காமல் இருக்க முடியவில்லை அவனது மன விமானம் அவனையுமறியாமல் எத்தனையோ ஆயிரம் மைல்களைக் கடந்து அவனது தாயகமான யாழ்ப்பாணத்தில் தரித்து நின்று பழைய நினைவுகளை மீட்டுப்பார்த்தது தேவராஜாவின் மகள் விவேக்கா யாழ்ப்பாணத்தில் இருந்தபோது பாடசாலையிலும் சரி, வீட்டிலும் சரி எல்லோரிடமும் அளவாகத்தான் பேசிக்கொள்வாள். அதுவும் ஆண்களோடு பேசுவதோ, பழகுவதோ மிக மிகக் குறைவு. 'இருந்தால் தேவராஜாவின் மகள் மாதிரி அடக்க ஒடுக்கத்தோடு பிள்ளையள் இருக்க வேணும்' என்று ஊர் பேசின. பிள்ளையா இன்று லண்டனிலை இப்பிடிக் கேவலமாக நடக்கிறாள் அவனை வெட்கமும், ஆத்திரமும் பிய்த்துத் தின்றன.

ஒருவனோடு பழகினாலாவது அவளுக்குத் திருமணம் செய்து கொடுத்து விடலாம். இப்பிடிப் பலபேரோடும் பழகும் அவளை என்னதான் செய்யலாம். எதை இழந்தாலும் பரம்பரை பரம்பரையாகப் பேணிக்காப்பாற்றி வந்த தமிழ்ப் பண்பாட்டை அதனோடு ஒட்டிப் பிறந்த மானத்தை இழப்பதா? அவனது மனம் கல்லெறியுண்ட பறவைகளாக அலைக்கழிந்தது.

அடிச்சுவளர்க்காத பிள்ளையும், முறுக்கி வளர்க்காத மீசையும் உருப்படாதென்று நம் முன்னோர்கள் சொன்னது உண்மைதான். அவன் ஒடிந்து போனான்.

தேவராஜா தன் பெற்றோருடன் வாழ்ந்த காலத்தில் நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாவுக்கு ஒரு முறை தனது மூத்தசகோதரியையும் அழைத்துக்கொண்டு போனது ஞாபகத்துக்கு வருகிறது போகும் வழியில் எவனோ ஒருவன் தனது சகோதரியோடு சேட்டை செய்ததை நினைத்துப் பார்க்கிறான்.

என்னுடைய அடியின் அகோரம் தாங்காமல் அவன் என்னையும், அக்காவையும் மாறி மாறி மன்னிப்புக் கேட்டது இன்று போல் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. அன்றுயாரோ ஒருவன் என் அக்காவின் கையைப் பிடித்ததுக்கு இப்பிடி மரண அடி அடித்த நான் இன்று எனது மகள் கிழமைக்கு ஒருவனின் கையைப் பிடித்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றித் திரிவதை எப்படிச் சகித்துக்கொள்ள முடியும். அன்று பேணிக் காப்பாற்றிய தமிழ்ப் பண்பாடு நான் லண்டனுக்கு வந்ததால் சிதைவடைவதா? கோபத்தில் தனது பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டான்.

அடுத்து இறந்துபோன அவனது ஒரே தங்கை அவனது நினைவில் வந்து நிற்கிறாள். அவள் திருமணமாகி ஒரு வருட காலத்துக்குள் அவளது கணவன் பலாலியில் இருந்து வந்து வெடித்த செல் ஒன்றுக்கு இலக்காகி இறந்து போன பரிதாபகரமான சம்பவமொன்று அவள் வாழ்க்கையில் நடந்துவிட்டது. அவள் உயிருடன் இருந்திருந்தால் அவளை வற்புறுத்தியாவது இன்னொரு திருமணத்தைச் செய்து கொடுத்திருப்பேன்.

கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்வதில் தப்பேதும் இல்லைத்தானே. ஆனால் அவள்தன் கணவன் இறந்த துயர் தாங்காது அவன் இறந்து சில நாட்களிலேயே நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டாள். இப்படி உயிரை இழந்தும் தன் கணவன் மீது வைத்திருந்த பாசத்தை நிரூபித்தாள். இதனை அவனால் நினைத்துக்கூடப்பார்க்க முடியவில்லை.

ஆண்பிள்ளையாக இருந்தாலும் தனது மூத்த மகன் நடந்து கொண்ட முறையை நினைத்துப் பெருமைப்பட்டுக்கொள்கிறான். என் மகனது மனைவி போர் விமானம் போட்ட குண்டு வீச்சுக்குப் பலியாகி இறந்து போன போது கூட இன்னொரு திருமணம் செய்து கொள்ளாது தனது மகளின் வாழ்வே தன் வாழ்வாகக் கருதி லண்டனில் தன் மகளோடு வாழும் ஒரு அண்ணனோடு கூடப் பிறந்த தங்கையா இப்படி ஏறுமாறாக நடந்துகொள்கிறாள். அவன் நிலை குலைந்து போனான்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் "நற்றவ வானிலும் நனிசிறந்தனவே" என்று அன்றோர் கவிஞன் பாடிய கவிதை அவனது மனதில் நின்று உறைத்தது எனது தாய் நாடு, எனது வீடு, நான் ஓடி விளையாடிய அகலமான தெரு, என்னைப் பெற்ற தாய், போரின் கொடுமையால் பல நாடுகளிலும் சிதறி எறியப்பட்ட பிரிந்து போன எனது சுற்றம், தேனினுமினிய என் தமிழ் மொழி, அதனோடு ஒட்டிப் பிறந்த எங்கள் தமிழ்ப் பண்பாடு இவை எல்லாம் இனிமேல் எமக்கில்லாத காணல் நீரோ? அவன் பதைபதைக்கிறான்.

எனது வீட்டு முற்றத்து வேப்பமர நிழலில் போடப்பட்ட குறு மணலில் பாய் போட்டுப் படுத்த சுகத்துக்கு இந்த லண்டன் மாநகரும், தேம்ஸ் நதியும் அதனோடு கூடிய சுகங்களும் எந்த மூலைக்கு? ஊர் கூடித் தேரிழுத்து ஒன்றாக இருந்த எங்கள் இனம் இன்று போர்மேகம் சூழ்ந்ததினால் பரதேசிகளாகப் பார் முழுவதும் சிதறி மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து நாடிழந்து பண்பாடு இழந்து வாழ்வதா? அவனது மனம் அழுதது.

சூரியக் கதிர் நடவடிக்கையின் போது அவனது குடும்பத்தில் நடந்த சம்பவங்கள் அவனது மனதில் நிலை குத்தி நின்றன. ஒருநாள் பலாலியில் இருந்து ஒன்றன்பின் ஒன்றாக ஏவப்பட்ட செல்களில் ஒன்று எனது அம்மா சமைத்துக்கொண்டிருந்த குசினியின் மேல் விழுந்து வெடித்ததத்தில் அம்மா குசினியோடு சமைந்துவிட்ட அந்த நிகழ்ச்சியை என்னால் எப்படி ஜீரணிக்க முடியும், வயது போனாலும் இளமையான தோற்றத்துடன் ஓடியாடித் திரிந்த எனது தாயின் இழப்பு என்னைப் பொறுத்தவரை பொறுத்துக்கொள்ள முடியாததுதான். அவன் கலங்கினான்.

எனது தங்கையின் கணவன், எனது தங்கை, எனது மூத்த மகனின் மனைவி என்று அந்த வரிசையில் எனது தாயும் போர்க்கால அனர்த்தங்களால் இறந்த போது எனது மனைவி பதட்டப்பட்டாள்.

ஊரிலை எல்லோரும் தங்கள், தங்கள் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு கொழும்புக்கும் இந்தியாவுக்கும் வேறுநாடுகளுக்கும் ஓடுறாங்கள். நாங்கள் மட்டும் இந்த நாலு பிள்ளையளையும் வைச்சுக்கொண்டு துணிவோடு இஞ்சை இருக்கிறம் எங்கடை மூத்த மகன் லண்டனிலை இருக்கிறபோது நாங்கள் மட்டும் இங்கு இளம் பிள்ளையளை வைச்சுக்கொண்டு ஏங்கிக் கொண்டு இருக்கத்தான் வேணுமா? நீர்வேலி மட்டும் வந்தவங்கள் எங்கடை இடத்துக்கும் வராமலா இருக்கப் போறாங்கள்? எங்கடை பிள்ளையள் பருந்திட்டை அகப்பட்ட கோழிக்குஞ்சுகள் மாதிரி அவங்களிட்டை அகப்பட்டால் நான் உயிரோடு இருக்கமாட்டேன் தேவராஜாவின் மனைவி சுபாசினி பதைபதைத்தாள்.

சுபா நிலவுக்கொழிச்சுப் பரதேசம் போவதா? அதுவும் அந்தப் பனி உறையும் நாட்டுக்குப் போய் என்னதான் செய்ய முடியும்? எங்களைப் போலப் பல பேர் தங்கடை இளம் பிள்ளையளை வைச்சுக்கொண்டு எங்கேயும் போக முடியாமல் இருக்கவில்லையா? அது போல நாங்களும் எங்கள் சொந்த மண்ணை விட்டு விட்டுப் போறது எனக்கு நல்லதாகத் தெரியவில்லை எதுக்கும் கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போமே அவன் சர்வசாதாரணமாகச் சொன்னபோது அவள் குழம்பிப்போனாள். வெள்ளம் வர முன்புதான் அணை கட்டுவார்களேயொழிய வெள்ளம் வந்தபின் அணைகட்ட நினைக்கமாட்டார்கள். நான் இந்தப் பிள்ளையளை வைச்சுக் கொண்டு மடியுக்குள்ளை தணலைக் கட்டி வைச்சுக்கொண்டு இருக்கிறமாதிரித்துடிச்சுக் கொண்டிருக்கிறன் அவள் எடுத்துச் சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சுபாசினி சொல்லிச் சில நாட்களிலேயே வீடு, வாசல்களையும் சொத்துச் சுகங்களையும் விட்டு அகப்பட்ட சில பொருட்களுடன் கால் நடையாகத் தென்மராட்சிக்குப் போக வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. சுபாசினியின் வற்புறுத்தலின் பேரில் அவர்கள் தென்மராட்சியையும் விட்டுக் கால்கடுக்கக் கிளாலிக்குப் போய் அந்தக் கடலையும் கடந்து ஒருபடியாகக் கிளிநொச்சிக்கு வந்தபோது அவர்களுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

அங்கு சுபாசினியின் உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த போது தான் அவர்களுக்குத் தங்கள் வீட்டின் நினைப்பு வந்தது. எலி வளையானாலும் தனி வளை வேண்டும். என்பது அப்பொழுது தான் அவர்களுக்கு விளங்கியது.

யாழ்ப்பாணமும் கைமாறிப் பல நாட்களாகி விட்டன. தேவராஜா குடும்பம் போலப் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அங்கிருந்து பலவிதமான இன்னல்களை அனுபவித்தபடி பொறுமையுடன் வாழ்ந்து கொண்டிருந்தன. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிச்ச கதையாக அங்கும் தேவராஜா குடும்பத்துக்குச் சோதனைகள் காத்திருந்தன.

தேவராஜாவின் இரண்டாவது மகன் பார்த்தீபன் ஒரு நாள் தன் நண்பர்களுடன் இரணைமடுக்குளத்தில் நீச்சலடித்த போது சுழியொன்று பார்த்தீபனை இழுத்துக்கொண்டது. எத்தனையோ பேர் அவனைக் காப்பாற்றுவதற்காகப் பெரிய பிரயத்தனப்பட்டும் அவனை உயிருடன் மீட்கமுடியவில்லை. அந்த ஏக்கத்தோடு பாயில் படுத்த அவனது தாய் சுபாசினி மீண்டும் எழுந்திருக்கவில்லை.

"கெட்ட குடியே கெடும் பட்ட காலிலே படும்" என்பது போலத்தனது தாயை தனது தங்கையைத் தங்கையின் கணவனை, தனது மருமகளைத்தன் ஊரைத்தன் வீட்டைத் தன் சொத்தை இழந்து விட்ட தேவராஜா தனது மகனையும், மனைவியையும் இழந்து போனான்.

மேலும் அங்கிருக்கப்பிடிக்காதவனாய்த் தாண்டிக்குளம் தாண்டி அக்காலப் பயணச்சிரமங்களோடு தன் மூன்று பிள்ளைகளையும் அழைச்சுக் கொண்டு வவுனியாவுக்கு வந்து கோழிக்கூட்டு முகாமில் பல நாட்கள் தங்கி அங்கும் பல தொல்லைகளுக்கு முகம் கொடுத்த பின் ஒருவாறாகக் கொழும்புக்குவந்து விடுதி ஒன்றில் தங்கும் வரை அவர்கள் பட்டபாடு பெரும்பாடு.

கொழும்புக்கு வந்த பின் லண்டனில் உள்ள மகனோடு கதைப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனிடமிருந்து செலவுக்குப் பணம் பெற்றுக்கொள்ளுவதும் சுகமாக இருந்தது. ஏற்கனவே இளவயதில் மனைவியை இழந்து தவிக்கும் அவனுக்கு நானும் தொல்லை கொடுக்கலாமா? என்று அவனது மனச்சாட்சி அவனை உறுத்தினாலும் அவனுக்கே பாரமாயிருப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் தடுமாறினான். எஞ்சியிருக்கும் இரு மகன்களையும், ஒரு மகளையும் பொறுப்பான ஒரு இடத்தில் ஒப்படைக்கும் வரை அவனால் எதையும் சிந்திக்க முடியவில்லை.

ஒருநாள் இரவு ஒன்பது மணிபோல அவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்த இரகசியப் பொலிஸார் தேவராஜாவின் முன்றாவது மகன் பிரதீபனை விசாரணைக்காக அழைத்துச் செல்ல எத்தணித்த போது தேவராஜா துடித்தப் போய்விட்டான் "புலியூருக்கு அஞ்சி நரியூருக்குவந்தால் நரியூரும் புலியூராகிவிட்டதே" அவன் குழம்பினான்.

"ஐயா நாங்கள் லண்டனுக்குப் போக வந்திருக்கிறம் என்ரை மகன் பிரச்சினை இல்லாதவன் அவனைவிட்டு விட்டவிடுங்கோ" தேவராஜா கொஞ்சினான்.

வெளிநாட்டக்குப் போற தெண்டால் பாஸ் போட்டைக்காட்ட வேண்டும் படிக்கிறபிள்ளையெண்டால் பாடசாலை அடையாள அட்டை காட்ட வேண்டும். நீங்கள் உங்கள் படிக்கிற பிள்ளையள் இரண்டினதும் அடையாள அட்டையைக் காட்டியது போல லண்டனுக்குப் போகப் போகிற மகன்ரை பாஸ்போட்டைக் காட்டவில்லை. அவர் தேவையில்லாமல் கொழும்பில் இருக்கிறார் என்றதன் பேரில் அவரை விசாரணைக்காகக் கூட்டிக்கொண்டு போகவேண்டியது எங்கடை பொறுப்பு வந்தவர்களில் ஒருவன் கடுமையாக நின்றான்.

அவனது பாஸ்போட்டை ஏஜன்சியிடம் கொடுத்து விட்டோம் இனி அவனைத் தேடிப் பிடிச்சுத்தான் வாங்க வேணும். இப்ப இரவில் போக முடியாதே அவன் கலங்கினான்.

அப்பிடியானால் நாங்கள் ஒண்டுமே செய்ய முடியாது. உமது மகனைக்கொண்டு போறதைத் தவிர வேறு வழியில்லை நாளைக்கு ஏஜன்சிக்காரனிடம் பாஸ்போர்ட்டை வாங்கிவந்து காட்டினால் உடனே விட்டு விடுவோம் அதுவரை அவர் எமது பாதுகாப்பில் இருக்கட்டும்.

தேவராஜாவின் மகனை அவர்கள் கொண்டு போனபோது அவன் செயலிழந்து நின்றான். என் துயரங்களில் பங்கு கொள்ள நீ கூட இல்லையே சுபாசினி தன் மனைவியை நினைத்து அழுதான் யாழ்ப்பாணத்தில் தான் கெடுபிடி என்றால் கொழும்பிலுமா? அவன் கலங்கினான்.

மறுநாள் விடிந்ததும் விடியாதது மானபொழுதில் ஏஜென்சிக்காரனிடம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்போட்டை வாங்கிக் கொண்டு வந்து பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அவர்களிடம் காட்டிப் பிரதீபனை அழைத்துக் கொண்டு வருவதற்குள் அவனுக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது.

இப்பொழுது தானும் லண்டனுக்குப் போய் விடுவதுதான் மேல் என்று தோன்றியது அவனுக்கு ஏஜன்சிக்காரனையும் அவசரப்படுத்தி தன் மனைவியின் நகைகளையும் விற்றுக் கைவசம் இருந்த பணத்தையும் சேர்த்துப் போதாததற்குதன் மூத்த மகனிடமிருந்தும் தேவையான பணத்தைப் பெற்று எஞ்சிய மூன்று பிள்ளைகளுடன் தப்பினேன். பிழைத்தேன் என்று லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தான் அவன்.

அத்தனையையும் இழந்து லண்டனில் வந்து நிற்கும் நான் எனது பண்பாட்டை அதனோடு ஒட்டிப்பிறந்த என் மானத்தை இழந்து விடவில்லை என்பதில் தலை நிமிர்ந்துதான் நின்றேன். ஆனால் இன்று எனது மகளால் என் மானம் கப்பலேறி விடும் போலத் தெரிகிறது. அவனது மனம் குமுறியது அவன் மெதுவாக எழுந்து வீட்டை நோக்கி நடக்கிறான்.

யாழ்ப்பாணத்தில் அயல் வீட்டில் வசித்த சிவலிங்கம் அனெக்சுக்கு வந்த போது தேவராஜாவிடம் சொன்ன விடயம் அவனை அவமான உணர்சிக்குள்ளாக்கியது. ராசா உன்ரை மகள் விவேக்கா ஊரிலை நல்ல பிள்ளையாய்த்தானே இருந்தவள். ஒரு கிழமைக்கு முன் நீச்சல் உடையிலை ஒரு வெள்ளைக்காரப் பொடியனோடை நீச்சல் தடாகத்தில் நீந்திக்கொண்டிருந்ததைப் பார்த்து மலைச்சுப்போனன். நீ என்ன நினைக்கிறியோ தெரியாது. நாங்கள் நாடுவிட்டு நாடு வந்தாலும் எங்களோடை கூட வந்தது எங்கடை பண்பாடுதான் ஏதோ புத்திசாலித்தனமாக அவளுக்குத் திருமணத்தைச் செய்து கொடுத்தாவது உன்ரை மானத்தைக் காப்பாற்றிப்போடு என்று அவன் சொன்னபோது தேவராஜா வாயடைத்துப் போனான்.

மகளே உன்னை எலுமிச்சங்காய் என்றல்லவா நினைத்துவிட்டேன். இப்பத்தானே எலுமிச்சங்காயல்ல கச்சல் கொம்மட்டியங்காய் என்பது புரிகிறது. உன்ரை கண்ணை நீயே குத்திக்கொள்கிறாயே உனக் கொரு திருமணம் செய்ய நினைத்தாலும் உன்னைப்பற்றிப் பலவித கதைகள் அடிபடும் போது யார் மகளே உன்னைக் கட்டிக் கொள்ள முன்வருவார்கள்? அவன் கொந்தளித்தான்.

என் மகள் நாடு விட்டு நாடு வந்து தன்பாரம்பரிய பண்பாட்டை மறந்து மேல்நாட்டவரின் பண்பாடுகளுக்கு மாறியதில் இப்படி ஏறுமாறாக நடக்கிறாள். நல்லவன் கெட்டவனாகிறதும், கெட்டவன் நல்லவனாகிறதும் சூழ்நிலையிலைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருக்கும்போலும் இத்தனை காலமும் கட்டிக்காத்து வந்த பண்பாட்டை அதனோடு ஒன்றாகப் பிறந்த மானத்தை இழந்த விட முடியாது. இப்படியே விட்டால் என்னென்ன நடக்குமோ? மனதைக் குழப்பிக் கொள்கிறான்.

அப்பா உங்களோடை ஒரு விஷயம் கதைக்கவேணும் என்று சொல்லிக் கொண்டு அவனது மூத்த மகன் கீர்த்தீபன் தன் தந்தை அருகே வந்து நின்றான்.

அப்பா விவேக்காவின் எனக் கென்னவொ பிடிக்கவில்லை அவளும் யாரோ முகம் தெரியாத வாலிபனும் பார் ஒன்றில் இருந்து கதைத்துக் கொண்டிருந்ததைக் கண்டதாக எனது நண்பன் ஒருவன் சொன்ன போது என் உடுப்பெல்லாம் கழன்று விழுந்தது போல இருந்தது. அவள் ஏனப்பா எங்கடை மானத்தை வாங்குகிறாள்? அவனை வெட்கம் பிய்த்துத்தின்றது.

தம்பி அவளுக்கு அதிகம் செல்லம் குடுத்து வளர்த்தது தான் பிழைபோல எனக்குப் படுது அவன் இடிந்துபோனான்.

அப்பாவெந்த புண்ணிலை வேல்பாய்ச்சிற மாதிரி இன்னுமொரு அதிர்ச்சியான கதையொன்ற சொல்லப்போறன் விவேக்கா தன் சிநேகிதியின் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு வருவதாக உங்களிடம் சொல்லும்படி எனக்குச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள். நான் அவள் சொன்ன அவளது நண்பியின் வீட்டுக்குப் போய்ப் பார்த்தபோது விவேக்கா அங்கே வரவேயில்லையாம், மூன்றாவது மகன் பிரதீபன் பயத்தோடும் ஏக்கத்தோடும் சொன்னபோது துடித்துப் போனான் தேவராஜா.

இனியும் தாமதிக்கக் கூடாது வெள்ளம் தலைக்குமேல் வந்துவிட்டது என்று நினைத்த அவனது மனதில் விவேக்கா தன்னிடம் சொன்ன வார்த்தைகள் வந்து அவனைப் பயமுறுத்தின.

எங்கடை தாய் மொழி தமிழ் என்பது யாழ்ப்பாணத்தோடு சரி லண்டனிலை எங்கடை தாய்மொழி ஆங்கிலம் தான் இங்கு ஆங்கிலம் தாய்மொழியாக இருக்கும் போது எங்கடை பண்பாடு மட்டும் எப்படி யப்பா தமிழ்ப்பண்பாடாக இருக்க முடியும்? அதுவும் ஆங்கிலேயருக்குரிய பண்பாடுதான் எனவே என் நடை, உடை, பாவனைகள் பற்றி நீங்கள் வருந்துவது பிழை அப்பா, அவள் சொன்ன இவ் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் முள்ளாய்க்குத்தின.

விவேக்கா துணிச்சலோடு தன்னிடம் சொன்ன வார்த்தைகள் அவனது மனதில் பெரு நெருப்பாக எரிந்த போது அவனது மனமும் உறுதியான தீர்மானம் ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துகொண்டது.

என் தாய் உட்பட நான் உயிருக்கு உயிராக நேசித்த பல உயிர்களையும் தாய் நாட்டையும், வீட்டையும் சொத்துக்களையும் இழந்த போது நான் கலங்கினேனேயொழிய நிலையிழக்கவில்லை தமிழ்ப் பண்பாட்டோடு சேர்த்து என்மானமும் தலைசாய்வதை மட்டும் என்னால் எற்றுக்கொள்ள முடியாது. பரம்பரை பரம்பரையாகக் கட்டிச் காத்து வந்த இவற்றை இழந்த விட நான் தயாரில்லை.

தம்பி கீர்த்தி உன் தம்பிமார் இருவரையும் இங்கு உன் பொறுப்பிலை விட்டிட்டு விவேக்காவையும் கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் போகப்போகிறேன். அவனது உறுதி கீர்த்தியை அதிரவைத்தது.

அப்பா அவள் உங்கள் பேச்சைக் கேட்டு ஒத்துவராவிட்டால் என்று இழுத்தான் கீர்த்தி ஒத்து வருவதும் வராததும் எனக்குத் தெரியும், கோழியைக் கேட்டா குழம்பு வைப்பார்கள் என்ரை பண்பாடு அதோடு ஒட்டிய மானம் இவைகள்தான் எனக்குப் பெரிது அவனது இந்த முடிவுக்குக் குறுக்கே யாருமே நிற்க முடியாத பெருநெருப்பாக நின்றான் அவன்.

புலம் பெயர்ந்து சென்றும் தமிழ்ப் பண்பாட்டில் இருந்து சிறிதேனும் வழுவவிரும்பாத தேவராஜா மீண்டும் தாயகம் புலம்பெயர ஆயத்தமாகிறான்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாசிப்பே அறிவுக்கு வலுவூட்டும்

**சி.தங்கராசா செல்வகுமார்**
திறந்த பிரிவு - கவிதை - முதலாமிடம்
நாவற்கிணற்றடி,
குப்பிழான் தெற்கு, ஏழாலை

சுடுநிலம் மீது வீழ்ந்த துளிமலை போல வாழ்க்கை
முடிகிற போது நீயும் மிகுதியாய் என்ன காண்பாய்?
வறுமையில் வாழ்ந்த போதும் வாசிக்க வேண்டு மென்ற
பெருமையே உன்னை ஏற்றும் பெறல்அரி தான செல்வம்!

புத்தகம் உறங்கி மீண்டும் பொலிந்திடும் விதையைப் போல
சத்திய மாக உன்னைச் சரித்திரம் படைக்க வைக்கும்
இத்தரை மீது வாழ்ந்த ஏற்றத்தை அடைந்த வர்கள்
நித்தமாய் நெஞ்சில் வாழ்தல் நீடித்த வாசிப்பாலே.

இணையத்தில் வாழ்ந்து நீயும் எரிந்தது போதும் மண்ணில்
இணையற்ற செல்வம் என்று எத்தனை நூல்கள் உண்டு
கணைகளாய் நெஞ்சில் பாயும் கணக்கற்ற சொற்கள் உன்னை
துணையெனக் காவல் செய்யம் தொடர்ந்துன்னில் வேகம் கொள்ளும்.

உண்டது போதும் என்று உணவைநீ மறுக்க வில்லை
கண்டது போதும் என்று காட்சியும் மறுக்க வில்லை
உன்னிரு கண்கள் என்றும் இடைவிடா வாசிப்பாலே
வென்றிடும் உலகை என்று வென்றவர் சொல்லி வைத்தார்.

கண்டதை வாசிக் கின்ற கடமையைச் செய்வா யென்றால்
பண்டித னாவாய் என்று படித்தவர் சொல்லி வைத்தார்
இன்றிசைச் சிரமேற் கொண்டு ஓரிரு நூல்கள் நெஞ்சில்
ஒன்றினால் வெற்றி என்ற உண்மையை மறக்க வேண்டாம்

வயிறுக்கு உணவை இட்டு வாசலில் படுத் துறங்கும்
உயிரினைப் போலத் தானோ உன்னுடல் வாழ வேண்டும்?
வயிறுக்கும் உணவை இட்டு வாசிப்பால் அறிவைக் கூட்டி
உயிருக்கும் மதிப்பைச் சேர்த்தால் உலகமே சொர்க்கம் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவது அறிவை அல்ல அறியாமை தன்னைத் தானே!
அறிந்தவர் சொல்லி வைத்த அறிவுரை மனதிற் கொண்டு
உறியிடை தயிரைப் போல உயிரையே கலங்க வைத்துத்
தெறிக்கிற அறிவைக் கொஞ்சம் தேடினால் குறைந்தா போவாய்?

பொருள்படப் பேசுகின்ற பொறுமையும் வாய்க்கும் நெஞ்சில்
இருள்கெடும் உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தானே தோன்றும்
உருள்கிற பூமி தன்னில் உருப்பட வேண்டும் மென்றால்
அறிவுதான் வேண்டுமென்ற அறிவினை எப்போ தறிவாய்?

கைபேசி ஒன்றை வாங்கி கணக்கற்ற நேரம் பார்த்து
சொல்பேசித் தேயும் நேரம் துயரத்தைத் தானே சேர்க்கும்
மெய்பேசும் நூல்கள் கொண்ட மேலான இன்பம் விட்டுப்
பொய்பேசி வாழ்தல் இந்தப் பூமிக்குப் பாரம் தானே!

எத்தனை மாந்தர் வந்து இறந்தனர் மண்ணின் மீது
செத்தபின் துயரம் கொண்டு சிந்திய கண்ணீர் எல்லாம்
பத்துநாள் தானே மிஞ்சும் பழங்கதை மனதில் எண்ணி
இப்போதே கொஞ்சம் யோசி இருப்பதை எல்லாம் வாசி.

அடிப்படை அறிவி னோடு அனுபவம் சேர நூல்கள்
படிப்பதும் சேர்ந்து தானே பகுத்தறி வாக மாறும்
இருப்பது கொஞ்ச நாட்கள் இப்போதே நன்கு கற்று
முடித்திட நூல்கள் இங்கே முப்பது கோடி உண்டு.

என்னடா வாழ்க்கை என்று இருப்பதை விட்டு விட்டு
உன்னைநீ எண்ணிப் பார்த்து உருப்பட வேண்டு மென்றால்
கண்ணிலே பார்வை யுள்ள கடைசிநாள் வரைக்கும் இந்த
மண்ணிலே நூல்கள் வாங்கி மனதிலே ஒன்றி வாசி.

விழிகளின் நீர்தான் அந்த விழிகளைத் தூய்மை செய்யும்
மொழியினில் உள்ள சொற்கள் உயிரினைத் தூய்மை செய்யும்
தமிழ் உன்னைத் தூய்மை செய்யும் தாய் என்ற எண்ணம் வந்தால்
அழுவியா மொழியைக் கற்று எழுவியா சொல்வாய் தோழா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினம் வீழ்ந்த தென்ற தறுதலைப் பேச்சை நோக்கி
உமிழடா எச்சில் நீரை உலகத்து அறிவை யெல்லாம்
விழிகளின் பார்வை யாலே வென்றுநீ காட்டி விட்டால்
அழிவது துயரம் ஆனால் வெளிவரும் தமிழின் ஆற்றல்!

நெடுந்தொடர் பார்ப்ப தற்கு நித்தமும் மாலை நேரம்
குடும்பமாய்க் கூடி நின்று குதூகலம் செய்வ தற்கா
உடம்பிலே உயிர் சுமந்து உலகத்தைக் காண வந்தாய்?
கடும்துயர் கொண்ட வாழ்வைக் கடக்க நீவாசி தோழா!

ஆண்டவன் உன்னைக் காண அறிவினைத் தேர்ந்தெ டுத்தான்
வேண்டிய வரங்கள் எல்லாம் விரைவினில் உன்னைச் சேர
நீண்டிடும் வழிகள் இல்லை. நூல்களை உந்தன் விழிகள்
தீண்டினால் போதும் அந்த தெய்வமே நேரில் நிற்கும்.

கோபத்தில் சொன்ன வார்த்தை குழப்பத்தை உண்டு பண்ணும்.
வேகத்தில் சொன்ன வார்த்தை வெட்கத்தை உண்டு பண்ணும்
காமத்தில் சொன்ன வார்த்தை கவலையில் கொண்டு சேர்க்கும்
ஆழநீ கற்ற வார்த்தை அமைதியாய் வாழ வைக்கும்.

இன்னுமா தயக்கம் அந்த இணையத்தில் தேடிப் பார்த்தால்
எண்ணிலா நூல்கள் உந்தன் இருப்பிடம் வந்து சேரும்
கண்ணிலே காமம் கொண்டு கணனியை நோண்டி நீயும்
உன்னிலை அழிந்திடாமல் உருப்பட வழியைப் பாரேன்.

உன்னைநீ அறிவ தற்கு உலகினைப் புரிவ தற்கு
முன்னோர்கள் சொல்லி வைத்த மூதுரை தெளிவ தற்கு
கண்ணிலே பட்ட நூலைக் கருத்தூன்றி நீ படித்தால்
விண்ணினைத் தாண்டி உந்தன் விரிபுகழ் ஓங்கி நிற்கும்

மண்ணினைத் தினம் படித்து மரம் ஓங்கி வளர்கிறது
விண்ணினைத் தினம் படித்து வெளிச்சம் தான் நிறைகிறது.
தண்ணீரைப் படித்துவிட்டுத் தானுயரும் மேகம் போல்
கண்ணிருந்தும் படிக் காமல் கடந்துவிட்டால் என்ன பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா கலை இலக்கியப்போட்டி வெற்றியாளர்களும், பரிசில் நிதி அனுசரணையாளர்களும்

| போட்டி | இடம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| கீழ்ப் பிரிவு கட்டுரைப் போட்டி | முதலாம் இடம் | பா.மதுரா | யா/கம்பர்மலை வித்தியாலயம் |
| | இரண்டாம் இடம் | ச.சஞ்சிகா | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| | மூன்றாம் இடம் | சி.மதுநிலா | யா/கம்பர்மலை வித்தியாலயம |
| பரிசில் நிதி அனுசரணை : மறைந்த முன்னாள் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய தலைவர் அமரர்.சோமசுந்தரம் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வர் திரு.சுப்பிரமணியம் கோணேஸ்வரன் அவர்கள். ருபா 8000 | | | |
| கீழ்ப் பிரிவு சிறுகதைப் போட்டி | முதலாம் இடம் | ம.மலர்நிலா | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| | இரண்டாம் இடம் | சி.யாழினி | யா/சிதம்பரக் கல்லூரி |
| | மூன்றாம் இடம் | வி.பிரமிதா | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| பரிசில் நிதி அனுசரணை : மறைந்த முன்னாள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத் தலைவர் அமரர்.இரத்தினசாமி சண்முகதாஸ் ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வர் திரு.சண்முகதாஸ் தமிழ்மாறன் அவர்கள். ருபா 8000 | | | |
| கீழ்ப் பிரிவு கவிதைப் போட்டி | முதலாம் இடம் | பா.மதுரா | யா/கம்பர்மலை வித்தியாலயம் |
| | இரண்டாம் இடம் | சி.யாழினி | யா/சிதம்பரக் கல்லூரி |
| | மூன்றாம் இடம் | ம.மலர்நிலா | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| பரிசில் நிதி அனுசரணை : நெடியகாட்டைச் சேர்ந்த அமரர்.ஜெயராணி யோகரெத்தினம் ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வர் திரு.யோகரெத்தினம் பார்த்தீபன் அவர்கள். ருபா 8000 | | | |
| மேற் பிரிவு கட்டுரைப் போட்டி | முதலாம் இடம் | செ.ஆர்த்திகா | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| | இரண்டாம் இடம் | இ.பவிதா | யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை |
| | மூன்றாம் இடம் | தி.திருவாஜினி | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| | | பா.கீர்த்தனி | யா/சிதம்பரக் கல்லூரி |
| பரிசில் நிதி அனுசரணை : நெடியகாட்டைச் சேர்ந்த திரு.ஜெ.செந்தில்குமரன் (செயற்குழு உறுப்பினர், கணபதி படிப்பகம்) ருபா 9000 | | | |
| மேற் பிரிவு சிறுகதைப் போட்டி | முதலாம் இடம் | இ.தர்சினி | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| | இரண்டாம் இடம் | கே.சாமினி | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| | மூன்றாம் இடம் | சி.பிரவீனா | யா/சிதம்பரக் கல்லூரி |
| | | பா.கீர்த்தனி | யா/சிதம்பரக் கல்லூரி |
| பரிசில் நிதி அனுசரணை : நெடியகாட்டைச் சேர்ந்த திரு.வி.டினேஸ்கரன் (செயற்குழு உறுப்பினர், கணபதி படிப்பகம்) ருபா 9000 | | | |
| மேற் பிரிவு கவிதைப் போட்டி | முதலாம் இடம் | பா.கீர்த்தனி | யா/சிதம்பரக் கல்லூரி |
| | இரண்டாம் இடம் | இ.பவிதா | யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை |
| | மூன்றாம் இடம் | அ.கோபிகா | யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் |
| பரிசில் நிதி அனுசரணை : நெடியகாட்டைச் சேர்ந்த அமரர். சக்திவேல் பிறேமகுமாரி ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வர் திரு.சக்திவேல் பிரதீபன் (செயலாளர், கணபதி படிப்பகம்) அவர்கள். ருபா 8000 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற திறந்தபோட்டி வெற்றியாளர்கள்

| போட்டி | இடம் | பெயர் | முகவரி |
|---|---|---|---|
| கட்டுரைப் போட்டி | முதலாம் இடம் | திரு.மா.செல்வரத்தினம் | யா/தொண்டமனாறு வீரகத்திபிள்ளை மகாவித்தியாலயம், தொண்டமானாறு |
| | இரண்டாம் இடம் | இராமையா கலாரமணி | இல.19பழையவீதி, பலாங்கொடை |
| | மூன்றாம் இடம் | ஜெயவதனன் காயத்திரி | மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் |
| *பரிசில் நிதி அனுசரணை : நெடியகாட்டைச் சேர்ந்த அமரர்களான செல்வவிநாயகம் சரவணபவானந்தவேல் மற்றும் சரவணபவானந்தவேல் ஜெயந்தன் ஆகியோரது ஞாபகார்த்தமாக குடும்பத்தினர். ருபா 25000* | | | |
| சிறுகதைப் போட்டி | முதலாம் இடம் | திரு.எஸ்.ஜே.ஜெயக்குமார் | குளுந்தவேலி, கரணவாய் தெற்கு, கரவெட்டி. |
| | இரண்டாம் இடம் | திரு. இ.சச்சிதானந்தம் | எல்லை ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை. |
| | மூன்றாம் இடம் | திரு. செ.செல்வராஜா | 149/31பொற்பதிவீதி, கொக்குவில். |
| *பரிசில் நிதி அனுசரணை : நெடியகாட்டைச் சேர்ந்த பழம்பெரும் நாடகக் கலைஞர் அமரர்.க.பரமகுரு அவர்களின் ஞாபகார்த்தமா குடும்பத்தினர் ருபா 25000* | | | |
| கவிதைப் போட்டி | முதலாம் இடம் | திரு.சி.தங்கராசா | நாவற்கிணற்றடி, குப்பிழான் தெற்கு, ஏழாலை |
| | இரண்டாம் இடம் | திருமதி.உலகேஸ்வரி சேதுபதி | துவாளிவீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி |
| | மூன்றாம் இடம் | கீழ்கரவைகி குலசேகரன் | (ஓய்வு நிலை பிரதேச முகாமையாளர்-இலங்கைவங்கி) 119/4 ஆதர் சிறிசேனமாவத்தை, அப்புத்தனை |
| *பரிசில் நிதி அனுசரணை : மறைந்த முன்னாள் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய செயலாளர் அமரர்.காத்தாமுத்து றஞ்சனதாஸ் ஞாபகார்த்தமாக அவர்களின் மனைவி திருமதி.ற.ஜெயராணி அவர்கள். ருபா 25000* | | | |

மேற்படி பொன்விழா கலை இலக்கியப் போட்டிகளை நடாத்துவதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்து சிறப்பாக நடாத்திமுடித்த எமது படிப்பக செயற்குழு உறுப்பினர்களான திரு.வி.டினேஸ்கரன், திரு.ஜெ.செந்தில்குமரன் மற்றும் போட்டிகளை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய நெடியகாடு இளைஞர் கலாமன்ற உறுப்பினர்கள் மற்றும் போட்டிகளிற்கு நடுவர்களாக கடமையாற்றிய நடுவர்களுக்கும் படிப்பகத்தின் சார்பில் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org